உ

சிவமஜெயம்

பட்டினத்தார்

புராணலக்ஷணம்

பட்டினத்தார்பாடல், பட்டினத்தார் புலம்பல், பட்டினத்தார்ஞானம், பத்திரகிரியார்புலம்பல்,

சேந்தனார் திருப்பல்லாண்டு

சேந்தனார் திருவிசைப்பா

இவைகளும் அடங்கியது

சுந்தரமூர்த்திமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை - சூளை,

அருமணஞ்சூர்,

அண்ணாமலைமுதலியார்

அவர்களாற்றமது

ஆயுர்வேதஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1906

உ

சிவராம ஜெயம்.

பட்டினத்தார் புராணவசனம்.

பட்டினத்தார் பாடல், பட்டினத்தார் புலம்பல், பட்டினத்தார் ஞானம், பத்திரகிரியார்புலம்பல், சேந்தநார் திருப்பல்லாண்டு, சேந்தநார் திருவிசைப்பா,

இவை - ஏழும் அடங்கியது.

சுந்தரமூர்த்தி முதலியாரால்
பார்வையிடப்பட்டு

சென்னை-சூளை,

சிறுமணவூர்,

அண்ணாமலைமுதலியார்

அவர்களாற்றமது

ஆயுர்வேத அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1906

சரித்திர அட்டவணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காட ரென்னும்

பட்டணத்து சுவாமிகள்.

திவ்விய சரித்திரம்.

நைமி சாரணியம்.

திருமறைத் தமிழ்போற் சிவமணம் வீசப்பெற்ற சத்தியலோகத்தில் வசிக்கும் பிரமதேவரிடத்தில்; சௌநகர், சதாநந்தர், காசிபர் முதலாகிய இருடிகள்சென்று, தோத்தரித்துச் சர்வலோக சிருஷ்டிகராகிய பிரமதேவரே! ஜனனமரண துன்பத்தை நிவர்த்திசெய்கின்ற தவத்தினை யனுட்டிக்க எத்தனஞ் செய்துவரும் அடியேங்களுக்குத் தவத்திற்குப் போதுமான இடவிசாலமும், தடாகங்களும், அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சொரூபியாகிய சிவபெருமானைப் பூசிப்பதற்குப் போதுமான பத்திரபுஷ்பச் செடிகளும், ஆகாரத்திற்குப் போதுமான காய் கனிகளைக்கொடுக்கின்ற விருட்சங்களும் கூடிய தபோவனம் இன்னதென்று தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தனர். அதைக்கேட்ட பிரமதேவர் ஒரு தருப்பையை யெடுத்து வட்டமாகமுடிந்து, அநாதிமலமுத்த சித்துருவாகிய ஸ்ரீகவிலாசபதியைத் தோத்தரித்து இத்தருப்பை நேமிபோய்த் தங்குமிடமே நீவிர் தவஞ் செய்தற்குத்தகுந்த இடமாமென்று முனிவர்கட்குச்சொல்லி, தருப்பைச்சக்கரத்தைப் பூமியில் விட்டுவிட்டனர். சிவானுக்கிரகத்தால் அதுபோய்; மகாபாதகங்களை விமோசனஞ்செய்கின்றதும், அல்லி, தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர் முதலியவைகளையுடையதுமாகிய அழகிய தடாகங்களும், மல்லிகை, முல்லை, இருவாட்சி செவ்வந்தி, கொன்றை, தும்பை முதலிய புட்பச்செடிகளும், செண்பகம், கோங்கு, பாரிசாதம், வாழை, தெங்கு, மா,பலா,

அகில், சந்தனமுதலிய விருட்சங்களும் நிறைந்த ஓர்வனத்தில் தங்கியது. அவண் முனிவர்கள் சென்று தவஞ்செய்யத் தொடங்கினர். அவ்வனம் தருப்பை நேமிபோய்த் தங்கிய காரணத்தால் நைமிசாரணியமெனப் பெயர்பெற்றது. இத்தகைய நைமிசாரணியத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்கள் ஒருகாலத்தில், சைவசித்தாந்த முடிபுகளெல்லா முணர்ந்த வியாசமுனிவர் மாணுக்கராகிய சூதமுனிவர் வரக்கண்டு எதிர்சென்று பணிந்து உபசரித்து அழைத்துவந்து இருக்கச்செய்து அருச்சித்துச் சூழவிருந்து சொல்வாராயினர். முனீந்திரரே! தேவரீரிடத்தில் அநேகமாயிரந் தெய்வக்கதைகளைக் கேட்டனம். இவ்வளவில் திருப்தி பிறந்ததில்லை. மேலுந் தேவரீருக்குச் சிறிது வருத்தங்கொடுக்க உடன்பட்டனம், திருவுள்ளக்கேடு செய்யற்க, எங்கள் வேண்டுகோளெங்கள் மாட்டன்றி மற்றுலகத்தினர் யாவருக்கும் பெருநன்மை விளைக்கத்தக்கதா மாதலால் கடாட்சித்து நாங்கள் கொடுக்குஞ் சிரமத்தை அங்கீகரித்துக் கொள்ளவேண்டும். அதாவது, முன் சுதரிசனருடைய வானந்த சரித்திரத்தைச் சொல்லியபின் சிவபெருமானது தோழனுன குபேரன் காவிரிப்பூம் பட்டிணத்தில் வேளாண்செட்டிகள் குலத்தில் அவதரித்து நமது முதல்வனுகிய கடவுளினையே மகவாகப்பெற்று வாழ்ந்து சிவஞானியாய் விளங்கினரெனத் திருவுளம்பற்றியுள்ளீர் அம்மங்களகரமான புண்ணியச் சரித்திரத்தினை விரிவாகவிளம்பல் வேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

அதுகேட்ட சூதமுனிவர் சற்றுநேர மௌன்முந் தோன்றுதவராய் ஆநந்தநீர் கண்களிற்பெருக யோகத்திருந்து முனிவர்களை நோக்கி, ஐயன்மீர்! இருவினையொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமுமடைந்தவர்க ளாதலால் சிவஞானியின் கதையைக்கேட்க விருப்பமுற்றீர். இதை யுங்கட்கெடுத்துச் சொல்லுதலால் நானும் புனிதனுவேன் என்று தனதாசிரியரை மனதிற்றியானித்து அப்பெரியோர் சரித்திரத்தினைச்சொல்ல வாரம்பித்தனர். கேளும் முனிபுங்கவர்காள் இச்சரித்திரம் பூர்வத்தில் திருப்பாற் கடலையுண்ட செல்வராகிய உபமன்னிய பகவான் தன் மாணுக்கர்கட்குக் கூறியதாக பௌஷியோத்தர புராணத்துள் திருவிடைமருதூர் மான்மியத்திற் கூறப்பட்டுள்ளது.

புராண வரலாறு.

ஞானமே சொரூபமாய் விளங்கும் மகா கைலாசமலையின் சாரலிலே சைவமணமே யெத்திக்கினும் வீசப்பெற்ற வனமொன்றுண்டு அதில் பல சைவமுனிபுங்கவர் சூழ கண்ணபிரானது சிவதீட்சாகுருவாகிய உபமன்னிய பகவான் எழுந்தருளியிருக்கும்போது அவர்மாணுக்கர்கள் அவர் சந்நிதியி லெழுந்துநின்று நமஸ்கரித்துச் சொல்வாராயினர். ஓ! வியாக்கிரபாதமுனி புத்திரரே! சிவமுணர்ந்த பெரியோர்களாகிய அடியார்களது அற்புதச்சரித்திரங்களைச் சொல்லியருளவேண்டுமென்றனர். அப்போது அப்பகவான் பரவசமாய்த் தம்பித்துநின்று தெளிந்து தம்மாணுக்கர்களை நோக்கி ஐயா! அந்தணளர்களே! நினைக்கநினைக்க நெஞ்சினையுருக்கி, அஞ்ஞானத்தையோட்டி, மெய்ஞ்ஞானத்தைக் காட்டி சித்திமுத்திகளைக்கூட்டி, புனிதமாக்கவல்ல சுவேதாரணியர் சரித்திரமென்னும் திருவெண்காட்டடிகளுடைய திருக்கதையினைச் சொல்வேன் கேட்பீர்களாக வென்று சொல்வாராயினர்.

சிவபெருமான் திருவுலா.

கைலாசபதியாகிய சிவபெருமான் உலகமாதாவாகிய மகா தேவியாருடன் இடபாரூடராய்மூத்தபிள்ளையார் இளையபிள்ளையார்முதலியருடன், உலகில் லீலாவிலாசமாக உலாவரும்படி திருவுள்ளத்திற்கொண்டு, கூர்மாண்டாதி கணநீசுவரர்களும், விஷ்ணுவாதி தேவர்களும், அகஸ்தியராதி முனிவர்களும், அரக்கராதிகணங்களும் புடைசூழ்ந்து அர! அர!! என்று போற்ற அன்பின்றேழரான குபேரன் தொடர எழுந்தருளி, இமயம், மந்தரம், பசுபதீச்சரம், கேதாரம் காசி, பருப்பதம், காளத்தி, ஆலங்காடு, முல்லைவாயல், ஒற்றியூர், மயிலை, கழுக்குன்றம், காஞ்சி, அருணசலம், விருத்தகிரி, முதலிய க்ஷேத்திரங்களை யலங்கரித்துக் கொண்டு சிதாகாச ரகசியமானத்திருச்சிற்றம்பலமாம் சிதம்பரத்தில், சிலதினம் வீற்றிருந்து மற்றைய திருப் பதிகளுக்குஞ்செல்ல எழுந்தருளிச் சுவேதாரண்ணியமென்னும் திருவெண்காட்டினை யடைந்தருளினர்.

அத்திருவெண்காட்டிற்குச் சமீபத்தில் சோழராசனி ராசதானிகளைந்தினு ளொன்றுயும், இயற்பகை நாயனர் திருவவதாரஞ்செய்யப்பெற்றதும், ஆகாயத்தையளாவிய மதிள்களையும், நவரத்தினங்

களா லிழைக்கப்பெற்ற அரசியல் மண்டபம், அமைச்சியல் மண்டபம், மறைபயில் மண்டபம், வித்தியாமண்டபமுதலிய அநேக மண்டபங்களையும், மேகங்கள் தவழும் பொன்மயமாகிய சிகரங்களையுமுடைய, அரண்மனையும், வேதாகமங்களை நன்குணர்ந்து சிவபத்தி அடியார் பத்திகளில் வழுவாத சிறந்த மறையவர் வீதிகளும், அநேகஞ் சந்திர னுதயமானாற்போன்ற பிரகாசத்தையுடைய நானாவித இரத்தினங்கள் பதித்த பலவடுக்கு உப்பரிகைகளையும், மாடமாளிகைகளையுமுடையவைசிய வேளாளர்வீதிகளும், மற்ற வெல்லாவருணத்தாரும் வசிக்கும் அழகிய தெருக்களும் நிரம்பப்பெற்றதுமான காவிரிப்பூம் பட்டினத்தைக்குபேரனார் பார்த்தவளவில் அவர்மனதைக் கவர்ந்தது

அப்போது, பெருமான் தோழனாராகிய குபேரனார் சுவாமியின் திருவடிகளில் பலகாலும் விழுந்து பணிந்து எழுந்து துதித்துநின்று எம்பெருமானே! இத்தெய்வத்திருப்பதி யாதுகாரணமோ யான் தன்னைவிட்டுப் பிரியாவகை யோராசையைத்தூண்டி என்னைமுற்றும் வசஞ்செய்துக் கொண்டது, திருவுள்ளமானால் இங்குசிலகாலம் வசிக்கப் பெறுவேனாகவென்று வேண்டிக்கொண்டனர். அதுகேட்டருளிய ஆண்டவர் அங்ஙனமே மனிதயாக்கை யடைந்துவாழ்தியென்றருளிச் செய்தனர். குபேரனார் பிறத்தலுக் கஞ்சிப் பதைபதைத்து என்னாண்டவனே! ஏழையேன் மானிடப்பிறப்பினை யடைந்து மயங்குகையில் தேவரீர்வந்து எனதவலமறுத்து உண்மைநிலையை யனுக்கிரகித் தருளவேண்டு மென்று பன்முறைவணங்கி நிற்க, ஆளுடையார் அவ்வாறுகுக வென்றருளி அம்மையாருடன் மற்றையதிருப்பதிகள் யாவுங்கண்டு சென்று கைலைவீற்றிருந்தனர்.

திருவவதாரம்.

சிவாக்ஞைப்படி குபேரனாவர் அக்காவிரிப்பூம் பட்டிணத்தில் அந்நகரவேளாளவைசிய மரபில், சிவநேசரென்பவருக்கும் அவரதுகற்புடைய பத்தினியாராகிய ஞானகலாம்பை யென்பவருக்கும் புத்திரராகவவதரித்தார். தந்தையார் களிப்படைந்து மறையோர்களையழைப்பித்து வழங்கி,நவமணியாதி தானங்கொடுத்து, முப்பழஞ்சர்க்கரை தாம்பூலம்பகிர்ந்தளித்து, தேவாலய திருவிழாநடத்தி, சாதககருமஞ்செய்வித்து, வேள்விசாந்தி முடித்து, புத்திரப்பேறு விழாக் கொண்டாட பத்துநாளும் எண்ணெய்விழா செய்து, பதினோராநாள்

மகவை மணித்தொட்டிலேற்றி, திருவெண்காடரென நாமகரணஞ் சூட்டினர்.

அச்செல்வக் குழந்தையானது அழுதும், கைகாலுதறி யுதைத்தும், ஆடியும், நகைத்தும், முகங்கவிழ்ந்தும், தலையெடுத் தசைத்தும் செங்கீரையாடியும், சப்பாணிகொட்டியும் தாய்முகநோக்கி புன்முறுவல் செய்தும், முலைநெருடி பாலுண்டுமிருந்தது. பெற்றோர் நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வளர்த்து, நான்கா மாதத்திற் சந்திமிதிப்பித்து ஆறுமாதத்திற் சிவனடியாரை உண்டிவினையாற் பூசித்து, அன்னப்பிராசனமுஞ் செய்வித்தார்கள். அப்பால் வெண்காடர் தவழ்பருவங்கடந்து, தளர்நடைப்பருவமடைந்து, தத்தடியிட்டு நடந்து, வீதிகளிலோடி, சிறுதேருருட்டி, சிற்றிலிழைத்து, கண்டார்களிக்க விளையாடி அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், நிராசை, சத்தியம், தவம், ஆராய்ச்சி, சிவநேசமுதலிய வெல்லா முடன்வளரவளர்ந்து ஐந்து திருவயதடைந்தார். அக்காலத்தில் தந்தையாராகிய சிவநேசனார் இப்புத்திரன் வரலாற்றை முற்றுங்கண்டு களிக்கப்பெறுமல் தேகவியோகஞ்செய்து சிவபதமடைந்தனர்.

ஞானகலாம்பையார் கணவனையிழந்த துக்கம் புத்திரவாஞ்சையால் நீங்கப்பெற்று, மகனார் கல்விப்பயிலும் பருவமடைந்ததைக்கண்டு, ஒருபாத்தியாயரை வருவித்து அவருக்கு வேண்டுவனகொடுத்து, அவரிடம்தனது புத்திரரை யோதுவதற்குப் பள்ளியில் வைத்தார். திருவெண்காடர் ஆசாரியர் முன்னிலையில் தமிழ்க்கடல் முழுவதினையும் உண்டேப்பமிட்டு முற்றுமுணர்ந்த முதல்வராய்ச் சிவபத்தி, அடியார்பத்தி, சீவகாருண்ணிய முதலிய ஒழுக்கம்யாவும் நிறையப் பெற்றுவிளங்கினர்.

திருவெண்காடர் அவ்விளம்பருவத்திலேயே; இவ்வுலகின்கண் அத்திமுதலெறும்பீருகிய ஒவ்வொருவுயிர்களும் துன்பமேசொரூபமாகிய யாக்கையினையடைந்து பிறவிக் கடலில் ஆழ்ந்து மீளாதுசுழல்வதையறிந்து, நெஞ்சு துடிதுடித்துப் பதைபதைத்து வாடிவருந்தி இக்கொடிய பிறவித் துன்பத்தினை யொழிப்பது, அநாதிமல முத்தசித்துருவாகிய சிவபெருமானை உள்ளன்போடு பூசித்து வழிபட்டாலன்றி ஓர்ஞான்றுங் கூடாதென்பதை யுணர்ந்து சிவபூசையியற்றும் விருப்பமுடையராய் அச்சிவபெருமானிட அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கவியல்பினை யாராய்ந்து, இத்தகைய சிவலிங்கத்தினை நா

மெவ்வாறு பெறுவது, எவ்வாறு அருச்சனை செய்வது, இக்கருமங் குருமுகத்தாலன்றி முடியாதே என்றெண்ணி மனங்குழைந்து, என்னையாட்கொள்ள குருநாதனெப்போது எழுந்தருளுவனெனச் சிந்தித்து, உணவிலும் நித்திரையிலும் வெறுப்புண்டாக, சோர்வுற்றுச் சிவசிந்தனையுடனே படுத்துறங்கினர்.

கனவில் சிவானுக்கிரகம்.

திருவெண்காடர் நிலைமையை நோக்கிச் சிவபெருமானார் திருவருள்சுரந்து, அவரது கனவில் முதுவேதியராய்த் தோன்றி, குழந்தாய்! எனவழைத்து மேனியைத்தடவ, வெண்காடர்தணுக்குற்றெழுந்து அட்டாங்கபஞ்சாங்க விதியிற்பணிந்து, ஆடிப்பாடிநாதடுமாற உள்ளநெகிழபாதம்பிடித்துப்பலபலபேசிப்பரிதபிக்கபெருமான்திருவுள்ளங்கனிந்து ஐய நாளையதினம் திருவோணத்துடன் கூடியசோமவாரம்மகாப்பிரதோஷகாலமானதால் இக் காவிரிப்பூம்பட்டினத்தையடுத்த திருவெண்காடென்னுந் திருப்பதியை யடைந்து சிவலிங்கப்பெருமானைத் திருமஞ்சனமாட்டிப் பூசித்து அச்சன்னிதியிலிருப்பையேல், ஒருவேதியர் நீஅருச்சித்தற்கு ஒரு சிவலிங்கப் பெருமானைத்தந்து திருவெழுத்தைந்தினையு முபதேசித்துபூசிக்குமுறைமையினையு மனுக்கிரகிப்பர் நீயவற்றைப்பெற்று நீடூழிவாழ்கவென ஆசீர்வதித்து தனது திருக்கரத்தால் அவர்நெற்றியில் திருநீரிட்டு மறைந்தருளினர்.

திருவெண்காடர் கண்விழித்து ஆராமையுடன் அழுது தொழுது தம்மன்னையை வணங்கித் தான்கண்ட கனவினைக் குறிப்பினி லுணர்த்தினர் தாயார் பெருங்களிப்பினை யடைந்து மகனுரையெடுத்து உச்சிமோந்து முதுகைத்தடவி வாழ்த்தினர்.

திருவெண்காடு சேர்தல்

பொழுதுவிடிந்தவுடன் திருவெண்காடர் தமதருமைத் தாயாரைத் திருவெண்காட்டுக்குப் போகும்படி முன்னனுப்பிச் சிவார்ச்சனைக்குறிய திரவியங்களுடனே தாமும் சிலசிவநேசப் பெரியோருமாகப் புறப்பட்டுச்சென்று, அத் திருப்பதியை யடைந்து காவேரியில் நீராடி, விபூதி உருத்திராக்கமணிந்து, அடியார்களைப்பூசித்து, அவர்கட்கு வேண்டுவனவீந்து, மாடவீதிவலம் வந்து ஆலய மடைந்து, கோபுரத்தைப் பணிந்து, கோயிலுட்புகுந்து, கணபதி சந்நிதியிற் சென்று, அருள்விடைபெற்று, நிருநந்திதேவரைப் பணிந்து, சிவபெருமானையும் மகாதேவியாரையும் அருச்சித்து வீற்றிருந்தனர்.

குருதரிசனம்.

அப்போது அங்கே முருகக்கடவுளானவர் சைவவேதியப் பிரமசாரியொருவர்போல் வந்து, ஐய திருவெண்காட! உன்னைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்தாலே யிங்குவந்தோம். உன் ணெண்ணமுழுவதும் யாமறிந்துள்ளோம், அக்கருத்து நிறைவேறுமாறு செய்குதுமென்றனர்.

உடனே திருவெண்காடர் தான் கனவிற்கண்ட கோலத்தினைப் போல் விளங்கும் பரமகுருவினைத் தரிசித்துஆராமையு மன்புமேலிட அடியற்ற பனைபோ லவரடியில் வீழ்ந்து, திரிகரணங்களும் வொன்றுபட்டு வணங்கிநிற்க, அவ்வாசிரியர்பட்டுப் பரிவட்டஞ்சாத்தி மூடிவைத்திருந்த சம்புடத்தைஒரு பீடத்தின்மேல் வைத்து மூடியிருந்த கவுசனையை வாங்கினார்அப்போ தங்கிருந்த யாவரும் அச்சம்புடக் கோயிலைக்கண்டு ஒன்றுந்தோற்றாது பிரமைகொண்டனர். திருவெண்காடர் குருவின் திருவடிகளிலே பலமுறைபணிந்து கண்மர்ரிசொரியத் துதித்து நின்றார்.

சிவதீட்சை.

பிரமசாரியாய் வந்ததேசிகர் திருவெண்காடரை நோக்கி ஐய! நேற்றிராத்திரி எனதுகனவில் ஓர் சைவ்வேதியர் வந்து நாளைக்காலையில் சுவே தாரணியமென்னும் ஆலயத்திற்குச் செல்வையேல் அங்கு திருவெண்காடரென்னும் ஓர்சிறுவன் வந்திருப்பன் அவனுக்குக் கிரமப்படி ஸ்ரீபஞ்சாட்சரத்தை யுபதேசித்து அவன் பூர்வ ஜன்மத்திற் பூசித்த ஆன்மார்த்தமாகிய சிவலிங்கமூர்த்தி யிருக்கின்ற இச்சம்புடத்தைக் கொடுப்பாயாக வென்று சொல்லி ஓர் சம்புடத்தைக் கொடுத்து, இது அத்திருவெண்காடர் கரத்தாற் றிறந்தாலன்றி பிரம விஷ்ணுமுதலிய தேவர்களாலுந் திறக்கமுடியாது என்று கட்டளை யிட்டு மறைந்தார் எனக்கூறினார்.

பின்பு பிரமசாரியாய்வந்த குருநாதர் திருவெண்காடரை அத்தலத்து முக்குளநீரில் முழுகப்பண்ணி, திருவெண்ணீறும் உருத்திராக்கமணியும் அணிவித்து, பஞ்சாட்சரத்தை உபதேசித்து, சைவசம்புடத்தை யெழுந்தருளச் செய்து அதன் மகிமையை யாவருக்கும் விளக்கும் பொருட்டு அங்கிருந்த மறையவரொவ் வொருவரையுமழைத்து அச்சம்புடத்தைத் திறக்கும்படிசொல்ல, அவர்கள் தம்மாலி

யன்றமட்டுந் திறக்கமுயன்றும் திறவாததைக்கண்டு திருவெண்காட ரைத் திறக்கச்சொன்னார் அவர் சுவேதாரணிய பெருமானைத் தோத் தரித்துப் பணிந்தெழுந்து பஞ்சாக்கரத் தியானத்துடன் தமது திரு க்கரத்தாற் றொட்டவுடன் அச்சம்புடம் திறக்கப்பெற்றது. அதில்சிவ லிங்கமூர்த்தி யொன்றும், விநாயக மூர்த்தியொன்று மிருக்கக்கண்ட னர். அன்றையதினம் ஆவணித்திங்களும், திங்கட்கிழமையும ஓண மும் பதின்மூன்று நாளுங்கூடிய பிரதோஷ காலமானதால் உடனே பூசைசெய்யும்படி குருசுவாமி கட்டளையிட்டனர்.

சிவபூசை.

திருவெண்காடர் நீராடி, ஆசமனஞ்செய்து, பிராணா யாமமுடி த்து. பஞ்சாக்கரந் தியானித்து, பஞ்சசுத்திபண்ணி, அருக்கியமமை த்து, உடையவரை வேதிகையி லெழுந்தருளப்பண்ணி, அந்தர்யாகபூ சைசெய்து, திருமஞ்சன மாட்டுவித்து, ஒற்றாடைசாத்தி, வெண்பட் டாதியா லலங்கரித்து, நறும்பூக்களால் அருச்சித்து, சுத்தபோனகவ கைகளால் நிவேதித்து, கற்பூர வாலாத்தியெடுத்து, அன்பு பெருகத் திராவிடவேத பாராயணஞ் செய்து, ஆனந்தகூத்தாடி, தொழுது பூசைமுடித்து உடையவரைப் பெட்டகத்தி லெழுந்தருளப் பண்ணி, சிவப் பிரசாதத்தினை யுட்கொண்டு அல்லவற்ற சிந்தையரா யெழுந்த ருளி யிருந்தனர்.

தாயாருடன் மகேசுரபூசைக்காக வுசாவுதல்.

திருவெண்காடர் சிவனடியாருக்குத் தட்சணைகொடுக்க நினை த்து அன்னையாரிடஞ் சென்று, தாயே! தேவரீர் கருணையினால் சிவ பூசையாவும் செய்துமுடித்தேன். இனிச்சங்கம மூர்த்திகளாகிய சை வமகேச்சுரரென்கிற அடியாரைப் பூசித்தல்வேண்டும். அதற்கு வேண் டியதிரவியந் தந்தருள வேண்டுமென்றனர். அம்மையார், குழந்தாய்! நம்மிடத்தி லிருந்தபொருள் முழுவதும் செலவாகி விட்டபடியால் இனிக் கடன்வாங்க வேண்டியதொழிய வேறுவழியில்லை, என்செய லாமென்றனர். அப்போது திருவெண்காடர் சற்றுமனங்கலங்கிச் சிவ த்தியானத்துடன் படுத்துறங்கினர். அம்மையாருங் கவலையுற்று அவ ரருகேபடுத்தனர். அப்போது அவர்கனவில் ஒரு சைவவேதியர் எதி ரினின்று அப்பா! திருவெண்காடா! பயப்படவேண்டாம், அளவற்ற திரவியம் உன்வீட்டி லிருக்கும்படிச் செய்தோம் அவற்றையெல்லாம் நினது இஷ்டப்படி சிவனடியார்கட்குக் கொடுத்துப் பயன்பெறலா

மென்று அருளி மறைந்தனர். திருவெண்காடர் உடனே நித்திரைவி ட்டெழுந்து, நடந்தவண்ணம் தாயாருடனுரைத்து, சூரியோதயத் தை எதிர்பார்த்துக் கொண் டிருக்கையில், காவிரிப்பூம் பட்டின த்திலிருந்து தமது வீட்டினைக் காத்துக் கொண்டிருந்த சிலர் ஓ டோடிவந்து அம்மையாரைக் கண்டு, அம்ம ! இன்று நமது வீட் டில் அர்த்த இராத்திரியில் ஒரு சோதி யுண்டாகி விளங்குகின்றது அதனைத் தெரிவிக்க வந்தோமென்றனர். உடனே அம்மையார் தம் புதல்வருடன் காவிரிப்பூம் பட்டினம் வந்து தம்மனையில் அபார மான பெருஞ்செல்வ மிருக்கக்கண்டு குதூகலங்கொண்டுத் திருவரு ளைக் கொண்டாடி, தமக்குவேண்டுமளவு எடுத்துக்கொண்டு, திருவெ ண்காட்டினுக்குச் சென்று தமதுமைந்தரைத் தனதிஷ்டப்படி செய் யலாமென்றனர். திருவெண்காடர் தமது ஆசிரியரையும் அந்தணர்மு தலான சிவனடியார்களையும் பூசித்துப்பணிந்து நின்றனர். ஆசிரியர் அந்தணர்முதலியோர் சாது சங்கவழிபாடு மென்மேலும் வளரக்கட வதென்று ஆசீர்வதித்தனர். அதுமுதல் திருவெண்காடர் குருபூசை யும், சிவபூசையும் சிவனடியார் பூசையு நடத்திவந்தனர்.

திருமணம்.

இங்ஙணம் வாழ்ந்துவருகையில் திருவெண்காடருக்குக் காளை ப்பருவ நேர்ந்ததைத் தாயார்கண்டு, அக்காவிரிப்பூம் பட்டினத்தி லேயே வேளாண்டகைமையிற் சிறந்த வைசியர்குலத்தில் சிதம்பரசெ ட்டியாருக்கும், சிவகாமியம்மையாருக்கும் பிறந்த சிவகலையென்னும் பெண்மணியைப் பேசித் திருமணமுடித்து வைத்தனர். திருவெண் காடர் சிவகலையாருடன் இல்லரத்தைக் குறைவறநடத்தி வந்தார்.

சிவசருமர்.

திருவெண்காடருக்கு முப்பத்தைந்து வயதளவும் புத்திரப் பே றுண்டாகாமையின், மனம் வருந்தித் திருவிடைமருதூர் மகாலிங்க மூர்த்திக்கு விண்ணப்பித்தார். அப்போது அம்மருதூர் சிவபெரு மான் இவருக்குப் புதல்வராக அவதரிக்கவெண்ணினார், அத்திருவி டைமருதூரில் சிவசருமர் என்னும் வேதியரொருவர் சுசீலையென் னும் பத்தினியாருடன் இல்லறநடத்தி மாகாலிங்க நாதரையும் பெரு ந்தன நாயகியாரையும் அருச்சித்து, தம்செல்வத்தை யெல்லாம் சிவா ர்ச்சனைக்கும், அடியார் மகேச்சுரபூசைக்கும் உபயோகித்து வருகை

யில் திருவருளால் நாளுக்குநாள் செல்வங்குறைந்து வறுமையடைந்தார். ஆதலின் ஒருநாள் அப்பூசைக்குரிய உபகரணங்களில்லாமையால் சிவசருமர் மிக்க துயரமுற்றுத் தனதுமனைவியார் குழந்தைகட்காக எடுத்துவைத்திருந்த பண்டங்களைக் கொண்டு திருக்கோயிலையடைந்து வழக்கப்படி சிவபூசை நிவேதனமுதலியவற்றை முடித்து அடியார் பூசைசெய்யும் பொருட்டுத் தமதில்லிற்கேகப் புரப்பட்டனர். அப்பொழுது மருதூருடையார் விருத்த வேதியராய்த் தோன்றிப் பசியால் வருந்துமெமக்கு அமுதளிப்பாயோ வெனக்கேட்டு, சிவசருமரால் அவ்விடத்திற்றானே உண்டிமுதலியவற்றா லுபசரிக்கக் கொண்டு, பலருக்குஆகும்படி சேகரித்திருந்த எல்லாநிவேதன அன்னத்தையும் உண்டு மறைந்துவிட்டனர் உடனே சிவசருமர், வேதியராய் வந்தவர் முதல்வனென்றறிந்து பேரானந்த முற்றுத் தொழுது தோத்தரித்துத் தமதுமாளிகைக்குப்போய் நிவேதனப் பிரசாதமெல்லாம் மருதப்பெருமானுக்கு உபயோகமாயிற் றென்றுநிகழ்ந்ததைத் தனது மனைவியாருக்குக் கூறினர். அதைக்கேட்ட பெண்கள் நாயகமாகிய சிவகலையார் மிக்க சந்தோஷித்தவராய்த் தமதில்லிற்கு வந்திருக்கும் சிவனடியார்கள் பசியால்வருந்துவதைப் பார்த்து இவர்கட்கேவ்வாறு பசியாற்றுவதென யோசித்துத் தன் கழுத்திலிருந்த திருமாங்கலியத்தைக் கழற்றி இதைமாற்றி வந்தவிலைக்குப் பொருள்கொண்டு அமுதுபடி முதலியவற்றைச் சேகரித்து வரும்படி தங்கணவர் கையிற் கொடுத்தார். சிவசருமர் அதைவாங்கிச்சென்று அவ்வாறே சேகரித்துக் கொணர்ந்து கொடுக்க சுசீலையார் அதில் வேண்டுமளவு பாகஞ்செய்து சிவனடியார்கட்கு அளித்து உபசரித்தனுப்பிக்க ணவரும் தாமும் பிள்ளைகளும் உண்டுசுகித்தனர்.

மறுநாள் சிவசருமர் எஞ்சிய பண்டங்களைக் கொண்டு ஆலயத்திற்சென்று நியமப்படி பூசைமுடித்து நிவேதனப் பிரசாதத்தினைப் பரிசாரகர்களைத் தமதுதிருமனையிற் சேர்ப்பிக்கத் திட்டஞ்செய் தனுப்பிவிட்டுத் தாம் ஸ்ரீபஞ்சாட்சரத் தியானத்தி லிருந்தார். பரிசாரகர்கள் அவற்றைத் திருமடப்பள்ளியில் வைத்துவிட்டுத் தமது உச்சிக்கடன்முடிக்க அவ்வாலயத்தின் கணுள்ள காருண்ணியயாமிருத தீர்த்தத்திற்குப் போயினர். அப்பொழுது மருதவாணர், முன்போல ஓர் வைவ்வயோதிக வேதியராய்ப் பசித்துவர அதைக்கண்ட சிவசருமர் எதிர்சென் றுபசரித் தழைத்துவந்து ஓராசனத்திருத்தி நிவேதனவமு

தைப் படைத்தார். பெருமான் அன்றும் அப்பிரசாதத்தினை சிறிது மீதியிராதபடியுண்டு இளைப்பாறுவர்போல் ஓரிடத்திருந்து, செல்வத்தினை விரும்பிக்கேட்க எதிரில்நிற்கும் சிவசருமரை நோக்கி நமது திருமனையில் வந்திருக்கும் சிவனடியார் பசியால் வருந்துகின்றனராதலின் விரைவிற் சென்று அவரை யுபசரிக்கக் கடவீரெனக் கூறி மறைந்தருளினார். அதைக்கண்ட சிவசருமர் பிரிவாற்றாமையால் தாயைப்பிரிந்த கன்றைப்போல் வருந்தி, உலையிலிட்ட மெழுகுபோலுருகி, அக்கினியில்விழுந்த புழுப்போற்றுடித்து, அடியற்றபனைபோல் விழுந்து பணிந்துநின்றார்.

இங்ஙனமிருக்க, மருதூருடையார் சிவசருமராகவும் கணத்தலைவர்கள் பரிசாரகர்களாகவுந் திருவேடம் பூண்டு நிவேதனப்பிரசாதங்களை வழக்கம்போற் கொணர்ந்து சுசீலையார் கையிலளித்து சிவனடியார்கட்குப் பரிகலந்திருத்தி இடம்பண்ணுதி இதோ வருகிறேமெனப் பரிசாரகர்களுந் தானும் போக்குக்காட்டி மறைந்தனர். பிறகு ஆலயத்திலிருந்த சிவசருமர் ஒருவாறு தெளிந்து இறைவன் கட்டளைப்படி தனது மனைக்கேக சுசீலையார்கண்டு நிவேதித்த பிரசாதங்களைக் கொணர்ந்து கொடுத்து இதோ வருகிறே மெனப்போன நீங்கள் இவ்வளவுநேரம் யாண்டேகினீரென வினவினர். அதைக்கேட்ட சிவசருமர் திடுக்கிட்டு இதுவெல்லாம் எம்பெருமான் திருச்செயலென்றெண்ணி நடந்தவிருத்தாந்தங்களைச் சுசீலையாருக்குக்கூறி, தாம்சேகரித்திருந்ததினும் பதின்மடங்கு அதிகமான சுவை மணம் அளவு முதலியவற்றாற் சிறந்த பிரசாதத்தினை சிவனடியார்களை யுண்பித்துத் தாலும் மனைவிமக்களுடன் உண்டு சுகித்தனர்.

அப்பொழுது சுசீலையார். இங்ஙனம் அருள்செய்த பெருமான் சிறுதுபொருளனுக்கிரகிக்க மொண்ணாதோ வெனநினைத்து மௌனத்திருந்தார். அன்றிரவில் அதையறிந்த சிவபெருமான் சிவசருமர் கனவிலும் சுசீலையார்கனவிலும் விருத்த வேதியராத்தோன்றி நீங்கள் எம்பால் மிக அன்புடையிரான படியால் நாம் நாளைக்காலையில் நம் கோயிலுக்கருகில் காருணியாமிர்த தீர்த்தக்கரையின் கிழக்கிலுள்ள வில்வமரத்தடியில் ஒரு குழந்தைவடிவங் கொண்டிருப்போம் நீங்கள் எம்மையெடுத்துக் கொண்டுபோய்க் காவிரிப்பூம் பட்டினத்தில் புத்திரப் பேறின்மையால் வருந்தி யருந்தவம்புரிந் திருவெண்காடருக்கீந்து அவர்கொடுக்கும் பொன்பெற்று வறுமைநீங்கி சுகமே வாழக்கடவீரென்று திருவாய் மலர்ந்தருளினர்.

அதுகேட்ட சிவசருமர் திடுக்கிட்டு சிவசிவ ! எனது வறுமையின் கொடுமையால் அரிபிரமாதி தேவர்களுங் காணுதற்கரிய எம்பெருமானைக் கொடுத்துப் பொன்பெற்று இவ்வுலகில் வாழ்வதைவிட தீப்பாய்ந்தேனும் புனற்பாய்ந்தேனும் விடமுண்டேனும் முயிற்றுறத்தல் நலமெனக்கூறிப் பலவாறு வருந்தினர். வேதியராய்வந்த பெருமான் சிவசருமரைநோக்கி நுமது நிலைமையும் நும் மனைவியார் திறமும் யாமுணர்ந்தனம், முன்நமது தோழனாகிய குபேரன் திருவெண்காடராகப்பிறக்க நேரிட்டது அக்காலத்து அவனைப் பிறவித்துன்பத்தினின்று மீட்குமாறு மகவாய்வந்து மெஞ்ஞான நிலையினை யனுக்கிரகிப்பதாய் யாம் வாக்களித்தனம் அதை நிறைவேற்றும் பொருட்டு நும்மையிவ்வாறு ஏவினோமாதலின் நீர் ஒன்றிற்குமஞ்சாது யாங்கூறியவண்ணம் நிகழ்த்துமின், யாமவண் சிலநாளிருந்து மீளுகையில் நுமக்கும் நுங் குடும்பத்தாருக்கு முத்தியளிப்போமெனத் திருவாய் மலர்ந்து மறைந்தனர். உடனே சிவசருமர் விழித்தெழுந்து படுக்கையினின்றுநீங்கி திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்தனர் இவர்கண்ட கனவையே கண்டரண்டெழுந்த விவர்மனைவியார் தாங்கண்டகனவை யிவருக்குக்கூற, இவர் தாங் கண்டதைக்கூறி இருவரும் அற்புதமுமானந்தமுமுற்றனர். பொழுதுவிடிந்தவுடன் இவ்விருவரும் சிவாக்ஞைப்படி மனைகடந்து ஆலயத்திற்புகுந்து அம்மையப்பரை வணங்கிக்கொண்டுகனவிற்குறித்த இவ்விடத்தைநாடிச்சென்றனர். அங்கு இளங்குழந்தை அழுகுரல்கேட்க சிவசருமர் அருகிற்சென்று அந்தக்குழந்தையை ஆவலுடனெடுத்து, மார்போடணைத்து உச்சி மோந்து, அன்பே ! அரசே ! அழகே ! அறிவே ! அற்புதமே ! அரும் பொருளே! என்று பலவகையாககூறி மகிழ்ந்து சுசீலையார் கையிற் கொடுக்க அவர்வாங்கி மார்போடணைத்து கண்ணொற்றி ஆவலுடன் மோந்து முத்தங்கொடுத்து மாதவமே ! ஆதரவே ! கலிகெடவந்த கற்பகமே ! கண்ணுக்கினிமையே ! காதற்பெருக்கே ! எனச் சீராட்டி அக்குழந்தையைப்பிரிய மனமெழாமல் தனது நாயகரைநோக்கி, எம்பெருமானே ! இக்குழந்தையை நான் ஒருவருக்குங் கொடேன் ! கோடேன் !! பொருள் வேண்டுமானால் வேறுவகையால் பெற முயலுவோம் நமது மனைக்குப்போவோம் வாரும் என்றுசொல்லித் தம்வீட்டுக்குக் குழந்தையை யெடுத்துக்கொண்டுபோக சிவசருமரும் பின்சென்றார். அப்படிப் போகும்போது சிவானுக்கிரகத்தால் திசைதப்பித்திகைத்து ஒரு முகூர்த்தப்பொழுதில் காவிரிப்பூம் பட்டிணத்தையடைந்து பசியால்வாடி ஒருசோலையிற்றங்கி இளைப்பாறி யிருந்தனர்.

கனாத்திறம்.

இங்ஙனமாக முந்தியவிரவில், புத்திரப்பேறின்றி மனம்வருந்திச் சிவபூசை சிவனடியார் பூசைகளைக் குறைவற நடத்திவரும் திருவெண்காடர் கனவிலும் அவர்மனைவியார் கனவிலும் மருதவாணர் சைவவேதியரா யெழுந்தருளி பேரன்புடையீர்! நாளையதினம் உங்கள்மனைக்குச் சமீபித்துள்ள சோலையிற் போவீரானால், சிவசருமரென்னும் ஓர் மறையவரும் அவர்மனைவி சுசீலையாரும் ஒரு சிறு பசுங்குழந்தையை வைத்துக்கொண் டிருப்பர் அத்தம்பதிகளை உபசரித் தழைத்துவந்து மகிழச்செய்வீரேல் அந்தக்குழந்தையை யுங்கட்குத்தருவர் அக்குழந்தை நிறையளவு பொன்னை அவர்களுக்குக் கொடுத்தனுப்பிவிட்டு அக்குழந்தையைப்பெற்று வாழக்கடவீரென்று சொல்லிமறைந்தனர்.

குழந்தையைப் பெற்றது.

உடனே திருவெண்காடரும் சிவகலையம்மையாரும் விழித்தெழுந்து இருவர்கனவும் ஒத்திருத்தலையும் வலத்தோள் வலக்கண், துடித்தல் முதலிய நற்குறிகள் தங்கட்குண்டா யிருத்தலையுங்கண்டு மகிழ்ந்து பொழுது விடிந்தவுடன் நித்தியக் காலைக்கடன்களையும் சிவபூசையையும் அடியார்பூசையையு முடித்துவிட்டுச் சிவபெருமான் கட்டளைப்படி இருவரும் சோலைக்குள்ளே போய், அங்கிருந்த சிவசருமரையும் அவர் பத்தினியாரையுங் கண்டு இனிய மொழிகூறி உபசரித்தனர். உடனே சுசீலையார் சிவாஞ்ஞையால் தங்கொள்கைமாறிச் சிவகலையம்மையாரைக்கண்டு, அம்மே! நீர் மிகநல்லவராகக் காண்கின்றீர் இக்குழந்தையைப் பொருளாசையால் வேறொருவருக்குக் கொடுக்க என் கணவரெண்ணி யுள்ளார் நான் உமக்குக் கொடுக்கின்றேன் வளர்த்துக்கொள்வீரென்று சொல்லிக் குழந்தையை அவர்கையிற் கொடுத்தார். சிவகலையார் ஏந்தி வாங்கிக்கொண்டு பெருமகிழ்வு பெற்று அன்பிற்பெருகிய பாலையூட்டிப் பசியாற்றித் தங்கணவர் கையிற்கொடுக்க, அவர்வாங்கி உச்சிமோந்து முத்தமிட்டு பெருமகிழ்வடைந்து மீட்டு மனைவியார் கையிற்கொடுத்தனர். உடனே சிவசருமர் திடுக்கிட்டு நாம் கண்டகனவென்ன நம் மனைவிசெய்த காரியமென்ன இக்குழந்தையைத் திருவெண்காடருக்கன்றோ கொடுக்கவேண்டும், என்று சிந்தித்து திருவருட்டோற்றத்தால் திருவெண்காடரிவரேயென வறிந்து ஆனந்தித்தார்.

பின்பு திருவெண்காடர் சிவசருமரையும் அவர் மனைவியாரையும் அழைத்துப்போய்ப் பலவகையாலும் உபசரித்துக் குழந்தையைப் பலவாபரணங்களா லலங்கரித்து மணித்தொட்டிலிலேற்றி இரவலர் யாவருக்குமிடிகெடநிதி வழங்கிக் களித்திருந்தனர். அப்பாலொருநாள் "ஓ சிவசருமரே! திருவெண்காடரே! உங்கட்குக் கனவிற்கட்டளை யிட்டவாறு விரைவில் நிகழ்த்துமின்" என ஓர் அசரீரி வாக்குண்டாயிற்று வெண்காடர் அதைக்கேட்டுத் திடுக்கிட்டு ஒரு துலைதருவித்து, ஒருதட்டில் மெல்லிய அணையைப் பரப்பி அதன்மீது தெய்வக்குழந்தையைக் கிடத்தி மற்றொருதட்டில் பொன்னையும் மணியையுஞ் சொரிந்தார். அங்ஙனம் வெண்காடர் எவ்வளவு பொன்களைப் பெய்தாலும் சிவானுக்கிரகத்தால் பொன்னிடுந்தட்டு மேலெழுந்தே நின்றது. அருகிலிருந்த சிவசருமர் "இடைமருதூருடைய எந்தைபிரானே இங்ஙனம் அளவுகடந்த பொன்னைக் கொடுத்தால் அதைப் பாதுகாத்தற்கே என்வாழ்நாள் முழுதுமாய் விடும் பின்யானுய்வதெங்ஙனம் அன்றியும் இவன் பொருள்விழைவால் திருவெண்காடரை ஜாலஞ்செய்து வஞ்சிக்கவந்தவனென்று;சிலர் நினைக்கவும் எதுவாகும், எம்பெருமான் கருணை ஏழையேனை யுய்விக்கவென்றிருப்ப துண்மையாயின் இத்துலைத்தட் டிவ்வளவில் சமநிலையடைக" என்று மனதில் நினைத்து வணங்க, உடனே துலைத்தட்டு திருவருளால் சமநிலைபெற்றது. திருவெண்காடர் அத்துலைத்தட்டிலிருந்த பொருள்களனைத்தையுஞ் சிவசருமருக்கீந்து வணங்கி மற்றொரு தட்டிலிருந்த மகவையெடுத்து நவமணித் தொட்டிலிற்கிடத்தி அன்றையதினமே அத்தெய்வக்குழவிக்கு "மருதவாணன்" எனத் திருநாமஞ்சூட்டி புத்திரோத்சவங் கொண்டாடி. சிவசருமரையும் அவர்மனைவியாரையும் பொருட் பொதிகளையும் தமது தேரிலேற்றித் திருவிடைமருதூருக் கனுப்பினர். சிவசருமர் மனைவியாருடன் தமதில்லஞ்சேர்ந்து, திருவெண்காடரால் சிவபெருமானீந்த பொருள்களைக்கொண்டு சிவபூசை சிவனடியார்பூசை பிதிர்க்கடன் முதலியவற்றைக் குறைவற நடத்திவந்தனர்.

இங்ஙனம் பலதிருவிளையாடல்களை நிகழ்த்திவரும் மருதவாணர் பதினாறு திருவயதையடைந்து சிவசருமருக்குந் திருவெண்காடருக்கும் முன்வாக்களித்தவண்ணம் முத்தி நிலையனுக்கிரகிக்கக் கருதித்திருவெண்காடரிடஞ் சென்று ஐய! யான் தோணியேறித் தீபாந்தரங்கட்குச்சென்று வியாபாரஞ் செய்து பொருள்சேகரித்து வரக்கருது

கின்றே னென்றனர். தந்தையார் கேட்டுத் திடுக்கிட்டு பிள்ளைகலி தீர்க்கவந்த பெருமானே உனக்கு வேண்டியசெல்வம் நிரம்பியிருக்கப் பலதுன்பத்தினை யடைந்து சமுத்திர யாத்திரைசெய்து வருந்திப் பொருள்தேட முயல்வதென்னை? அன்றியும் உன்னைப்பிரிந்து நானும் உனதன்னையு மெவ்வாறு இவணுயிர்தரிப்போமென்று கூறிப்பிரிவாற்றாமையால் வருந்தினர்.

மருதவாணர் தந்தையாரை நோக்கி ஐய! மிகுந்த செல்வமிருப்பினும் இளமைப்பருவத்தில் வருந்தி மேலுமேலும் பொருளைத் தேடுவதன்றோ நமது வணிகர்குல வழக்கம் அன்றியும் உலகியலறியாதார்க்குத் தருமவியலும் கடவுளருளியலும் புலப்படுவது கடினமாகும். அவ்வுலகிய லறிவதற்குப் பலதேயங்கட்குச் செய்று வருதல் அவசியமாம் அப்படிச்செல்ல விளம்பருவத்திலன்றி முதுமையிற்கூடாது ஆதலின் எனதெண்ணப்படி சென்றுவர வுத்தரவளிக்க வேண்டுமென்றனர். திருவெண்காடர் தம்மைந்தர் குறிப்பையறிந்து அவர் கருத்தின்படிசெய்ய வுடன்பட்டனர். *மருதவாணர் வழிச்செலவுக்கும் வியாபாரத்திற்கும் வேண்டுங் கருவிகளையும் பண்டங்களையும் குறைவறச் சேகரித்துப் புதியதொரு மரக்கலத்தில் நிரப்பி மீகாமனொருவனை நியமித்து, தந்தை தாயார் சுற்றத்தினர் முதலியோரிடத்து விடைபெற்றுக்கொண்டு நன்னளிற் கடற்றுறையடைந்தார். அவ்விடத்தில் இவரது தோழர்களாகிய அவ்வூர் வணிகமாக்கள் சிலர் வாணிபத்தை முன்னிட்டு இவருடன் கலமேறிச் செல்லக்கருதி அவ்வாறே பற்பல பண்டங்களைக் கொண்டு வந்திருந்தனர். உடனே மருதவாணரு மிவரதுதோழர்களும் சுபமுகூர்த்தத்தில் தத்தங் கலங்களிலேறிச் சென்று ஒரு தீபத்தினை யடைந்தனர். அவ்விடத்தில் மருதவாணரின் றோழர்கள் தம்பண்டங்களைமாறி வேறுபல தீபத்தினை நோக்குச் சென்றனர். மருதவாணர் தந்தோழர்களுடன் செல்லமனமில்லாமல் அவ்விடத்திற்றனேயிருந்து தம்பாலுள்ள பண்டங்களை மாறிப் பொருள்கொண்டு, கோயில், மடம். சத்திரம், நந்தனவனம், தடாகமுதலியன வமைத்தும் மிடியர்கட்கு வறுமைகெடப் பொருளளித்தும் வந்தனர். முன்வேறுதீப நோக்கிச்சென்ற வணிகமாக்கள் பற்பல தீவுகளிற்சென்று பொருள் விருத்திசெய்துகொண்டு திரும்பி மருதவாணரிடம் வந்து ஐய! நீரெவ்வளவுதிரவியஞ் சேகரித்திருக்கின்றீ ரென்று கேட்டனர். மருதவாணர் வரட்டிபினையும் அவல்கட

லயினையுங்காட்ட வணிகமாக்கள் திடுக்கிட்டு எம்மினுஞ்சிறந்த அறிவாளராகிய நீரிவ்வாறு பொருளை வீணிற் செலவுசெய்திருப்பது தகுமோ உமது தந்தையார் கேட்டா லென்சொல்வாரென்று பல வாய்க் கூறினர். மருதவாணவள்ளல் அவர்களைநோக்கி அன்பர்காள் எனது தந்தைய ரிக்கருமம்பற்றி யுங்களைவெறுக்கார் நீவிரென்பொருட்டுத் துயருறலொழிமின் என்றனர். அதனைக்கேட்ட தோழர்கள் யாவரும் மருதவாணர் குண மாறுற்றனர்போலுமென்றெண்ணி இனிநாமிவரைப் பிரியவொண்ணாதெனத்துணிந்து அங்கு சின்னாள் வசித்தனர்

பிறகு அவ்வணிகமாக்களும் மருதவாணப்பெருமானுங் காவிரிப்பூம்பட்டின மடையக்கருதித் தாந்தேடியபொருள்களுடன் தத்தங் கலங்ளிலேறிக் காற்றின்வாய்ப்பறிந்து நாவாயோட்டிவந்தனர். இங்ஙனம்வருகையில்எல்லாம்வல்ல மருதப்பெருந்தகையார்ஓர்திருவிளையாடலைச் செய்யக்கருதித் திடீரென்றோர் பெருங்காற்று மழையையுண்டாக்கித் தமது மரக்கலங்களை நெடுநாள் திசைதப்பி யோடச் செய்தனர். அதனால் வணிகமாக்கள் குளிரால் வருந்திப் பசியான் மெலிந்து தாங்கொண்டுவந்த விறகுமுதலிய வுபகரணங்களொழிந்து மருதவாணரிடம்வந்து ஐய! அநேகநாளாய்க் காற்றுமழையுட்சிக்கிக் கரைதுறையறியாது வருந்துவதால் காவிரிப்பூம்பட்டினம் போய்ச் சேரும்வரையிலாவதாகச் சேகரித்துவந்த விறகுமுதலிய வுபகரணங்களொழிந்துவிட்டது காற்றுமழை யெப்பொழுது நிற்குமோ நாம் எங்குள்ளோமோ கலம் எத்திக்குநோக்குச் செல்கின்றதோ ஒன்றுமறிந்தோமில்லை. ஆதலின் இத்தருணத்தில் நும்மிடத்துள்ள வரட்டியிற் கொஞ்சங் கடனாகக்கொடுத்து உதவிசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதனைக்கேட்ட மருதவாணவள்ளல் தன்தோழர்களின் வேண்டுகோளுக்கிசைந்து தம்மிடத்துள்ள வரட்டியிலவர்கள் வேண்டுமளவு நிறுத்துக்கொடுத்து தமதூரடைந்தவுடன் அவ்வரட்டிகட்கு இடைக்கிடை கொடுப்பதாய்ப் பத்திரமெழுதி வாங்கிக்கொண்டதன்றியும் அதில் ஓர் வரட்டியினையவர்கள் கையால் முத்திரித்தும் வாங்கிக்கொண்டனர். வணிகமாக்க ளதனைப்பெற்று உணவுமுதலியனவமைத்து உண்டு குளிர்பசிதணிந்து சுகித்தனர். பின்பு காற்றுமழை நிற்க யாவரும் திசையறிந்து கப்பலோட்டிக் காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்தனர்.

திருவெண்காடரென்னும் பட்டினத்துச் சீமான் தம்மைந்தனேறிச்சென்ற கப்பல் வந்துசேர்ந்தசெய்தியைக்கேட்டுப் பெருமகிழ்ச்சியெய்திக் கடற்றுறையடைந்து கப்பலிலிருக்குந் தம்புதல்வரையழைத்து வரப்படகேறிச் சென்றனர். அப்படிச் செல்லுகையில் மருதவாணரோடு சென்றுவந்த வணிகனொருவன் முன்வந்து ஐய! நுமது திருக்குமாரர் சிலநாளாய்ச் சித்தவிகற்பமா யிருக்கின்றனர் இதனையுமக் கறிவிப்பதற்காக முந்திவந்தேனென்று சொல்லி போயினன். அதனைக்கேட்ட வெண்காட்டடிகள் திடுக்கிட்டுச் சற்றுலோசித்துப் புதல்வரை நமதில்லிற் கழைத்துக்கொண்டுபோய் விகற்பங்களைச் சீர்ப்படுத்திக்கொள்வோமெனத் துணிந்து விரைவிற்சென்று கலம்புகுந்து மருதவாணரைக்கண்டு உச்சிமோந்து தழுவி யுபசரித்து ஆங்குள்ள வரட்டி அவல்கடலை முதலியவற்றினைப் பார்த்து உடன்சென்றுருவனொருவன் கூறியவண்ணம் நம்புதல்வ னறிவிழந்தனன் போலுமென்றெண்ணி மைந்தரைத் தமது திருமாளிகைக் கழைத்துவந்து ஓரறையி லிருக்கச்செய்து மெய்க்காவலரைக் காவலமைத்து மீட்டுங் கடற்றுறை யடைந்து தம்மைந்தர் கலத்திற்கொண்டுவந்த வரட்டி அவல் முதலியவற்றினையும் பெட்டி கணக்கு முதலிய வற்றினையும் எடுத்துவரச்செய்து மருதவாணரோடு தீவாந்தரஞ்சென்றுவந்த வணிகமாக்களெதிரில் அப்பெட்டியைச் சோதிக்க அதில் முத்திரித்த ஓர் வரட்டியும் ஓலைத்துண்டு மிருக்கக்கண்டனர். பின்னுந் திருவெண்காடர் வரட்டியைப் பெட்டியிற் பத்திரப் படுத்தியதற்குக் காரணமென்னவெனவுன்னி அதனைப்பிட்க அதனடுவே கதிரவனொளிபோன்றமாணிக்கமொன் றிருக்கக்கண்டு வியந்து மற்றைய வரட்டிகளையுஞ் சோதிக்க அவைகளு மங்ஙனமே யிருந்ததுமன்றி அவல் கடலைகளிற்பொன்மணல் விரவியும் ஓலை வணிகமாக்களெழுதிக் கொடுத்த கடன் பத்திரமாகவு மிருக்கக்கண்டு தம்மைந்தர் திறத்தையெண்ணி யடங்காத களிப்புடையரா யிருந்தனர். வணிகமாக்கள் தம்முள் அச்சமெய்தி மருதவாணர் குணமாறுற்றனரென்று இழுவாய்நினைத்தோமே அன்றியும் அவரிடத்திற் பெற்ற வரட்டியினைச் சாதாரணமானதென்று அடுப்பெரித் தொழிந்தோமே அவர் பத்திரமெழுதிக் கொடுக்கச் சொன்னதினுலேனு மறிந்திலோமே இப்பொழுது அவர் தந்தையார் அதனையொத்த வரட்டியினைக் கொடுக்கச்சொன்னல் என்செய்வோமெனச் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

மருதவாணர் மறைந்தது.

இங்ஙனமிருக்கையில் திருவெண்காடர் தம்புதல்வரைக் கண்டு தழுவிக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் தனது மாளிகைக்குச் சென்று பார்க்கையில் மருதப்பிரானைக் காணாது திகைத்து மெய்க் காவலரை வினவ அவர்கள் தேவரீரிட்ட கட்டளைப்படியே காவல்புரிந்திருந்தனம் தங்கள் திருக்குமாரர் போனவழி யறிந்தோமில்லை யென்றனர். திருவெண்காடர் கலக்கமுற்று என்னகாரியஞ் செய்தேன் மருதவாணர் திறமறியாது இழிவெண்ணித் தவறிழைத்தேனே யான் அறிவிலர் சொற்கேட்டவமதித்தேனெனக் கருதி என் மனதை வருத்தஞ்செய்து மறைந்தானோவென்று பலவாறுயோசித்து வருந்திஅந்தர்ப்புரஞ்சென்று தன்மனைவியை விசாரிக்க அவர் நமிமைந்தன்வந்து அன்னமுண்டிருந்து இப்பொழுதான் புறத்தே சென்றனனென்று கூறி அவன் வாணிபத்தாற்றேடி வந்தெனக்களித்த ஆடையாபரணங்களிதோ விருக்கின்றதெனக் காட்டினர். திருவெண்காடர் அதனைக் கேட்டுங் கண்டுந் தன்மனக்கலக்கந் தீராமல் மருவவாணரை நகரமுற்றிலுந் தேடிக்காணாது பெருங் கிலேசப்பட்டுக் கொண்டிருந்தனர்

சிவசருமர் முத்திபெற்றது.

இங்ஙனமிருக்க மருதப்பெருந்தகையார், திருவிடைமருதூரிற்றன் குடும்பத்தினரோடு பக்குவப்பட்டுச் சிவயோகசமாதியி லிருந்த சிவசருமருக்கு முன் வாக்களித்த வண்ணம் அவர்முன் ஒளிப்பிழம்பாய்த்தோன்றி அச்சோதியில் அவரையும் அவர் குடும்பத்தினரையும் ஐக்கியம் பண்ணிக்கொண்டு இடைமருத மகாலிங்கத்திற் பிரிவறக் கலந்தருளினர்.

பட்டினத்தடிகள் துறவுபூண்டது.

பிறகு திருவெண்காடர் மருதப்பெருமான் பிரிவைச் சகியாமல் உண்டிமுதலியன வெறுத்துச் சிந்தித்துக்கொண் டிருக்கையில், அவர் மனைவியார் ஒருபெட்டியைக் கொண்டு வந்து நம்புதல்வர் தேவரீர் வந்தவுடன் இதனைக்கொடுக்கும்படி தந்துபோயினரென்று கொடுத்தார். திருவெண்காடர் ஆவலுடன் அப்பெட்டியைத் திறந்துபார்க்க அதில் ஒரு காதற்றவூசியும் ஓலைநறுக்கு மிருக்கக்கண்டு வியப்புற்று ஓலையைப் படித்துப் பார்க்க காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே,, என்றெழுதி யிருந்தது திருவெண்காடராகிய பட்டின

ததடிகள் மருதவாணர் திருநோக்கால் பக்குவப்பட் டிருந்தவரா ணபடியால் ஐம்புலனு மொரு நெறித்தாகி,

"பட்டைக் கிழித்துப் பருவூசிதன்னைப் பரிக்கெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழலாள் கையின்முன் கொடுத்துக்
கட்டியிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப் பிரியவன்றோ விங்ஙனே சிவன் மீண்டதுவே.

சூதுற்ற கொங்கையும் மானார்கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்றபூசனுக் கென்செயலாஞ் செய்த புண்ணியத்தால்
தீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத் தந்துவிட்டானென் கைதனிலே,,

என்று திருவாய்மலர்ந்து இருவினையற்று உலகின ருய்யுமாறு தமது நெஞ்சினை முன்னிலையாக்கி

"வாதுற்றதிண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும் புகலுநெஞ்சே யிந்தப்பூதலத்திற்
றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

வேதத்தினுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தா
லாதித்த சந்திரன் போலேவெளிச்சம் தாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே,,

என்றருளிச்செய்து தாயாரைநோக்கி அம்மே நமது தவம்பலி த்தது யான் குருநாதனது ஆணைவழியில் நிற்பவனானேன் என்றனர்.

தாயார்கேட்டு, ஐயனே! எனக்கிறுதிநாள் சமீபித்திருப்பதால் என் உத்தரகிரியைகளை முடித்தபிறகு உன் விருப்பத்தின்படி போக லாகாதோவென்றனர். அதனைக்கேட்ட பட்டினத்தடிகள் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி எதிரில்நின்ற நண்பருந் தலைமைக்காரியக் காரருமாகிய சேந்தனாரைநோக்கி என்பொருள் முழுதினையும் யாவ ருக்குக் கொள்ளையிடக் கடவாயென்று கட்டளையிட்டுத் தந்திருமே னியிற்றரித்த ஆடை பவிழ்ந்திருந்ததையு முணர்ந்திலராய் வெளிப்ப ட்டனர். அதுகண்ட அவர்மனை வியாராகிய சிவகலையார், அவரை நோக்கி பெருமானே அடிமைக்குத் தேவரீரைவிட ஓர் கதியுமில்லை

ஆதலின் நானுந் தேவரீரோடு வருகிறேனென்று பிரார்த்தனர். பட்டினத் தடிகள் அச்சிவகலையாரை நோக்கி பெண்ணே ! யாவருக்குங் கதியாவர் சிவபெருமானே யன்றி வேறில்லை நீ சிவநேசத்தையுஞ் சிவனடியார் நேசத்தையு மறவாது வாழ்ந்து சீரான்தத்தில் சிவ பெருமான் றிருவடிநீழலை யடையக்கடவாய். என்னுரை மறுப்பது னக் கழகல்லவென்று சொல்லி அவரை நிறுத்திவிட்டுச் சென்று அவ்வூர்ப் பொதுமண்டபத்திற் றங்கியிருந்தனர்.

அப்பொழுது அவ்வூராரிற் சிலர் பட்டினத்தடிகள் செய்தியைக் கேள்வியுற்று அவர் வீற்றிருக்கு மண்டபத்திற் சென்று அடிகளைக் கண்டு ஐய ! என்செய்தீர் நீர் எங்க ளனைவருக்கும் முதல்வரன்றோ யாதுகுறையுளதென விப்பரதேசி கோலங் கொண்டீர் இனி எங்களுக்கு யாவர் துணையாகுவர் ! என்று இரங்கினர். அதனைச் செவியுற்ற பட்டினத்தடிகள் அவர்களைச் சுட்டிநோக்காமல் பராமுகமாக நோக்கித் திருவருளைச் சிந்தித்து,

"மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாசன்மட்டே
பினமானசுற்ற மயானமட்டே வழிக்கே துணை
தினையாமள வெள்ளளவாகினு முன்புசெய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே.

அத்தமுப்வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுகம்
மெத்தியமாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலமேல் வைத்தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே.

எரியெனக்கென்னும் புழுவோவெனக் கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும் பருந்தோவெனக் கென்னுந் தான்புசிக்க
நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே.

அண்ணறன்வீதி யரசிருப்பாகு மணிபடையோர்
நண்ணெருநா லொன்பதாமவரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணென்பசிக்கு மடைப்பள்ளியான சுகமுமெல்லா
மெண்ணிலிகாலமவமே விடுத்தன மெண்ணரிதே,,

என்னும் நான்கு திருப்பாடல்களால் நிலையாமையைக் கூறிப் பின் தனது நெஞ்சினை முன்னிலையாக்கி.

"மாடுண்டுகன் றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படி கேட்டுவிட்டேயினிச் சேண்மனமே
யோடுண்டுகந்தை யுள்ளேயெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்டகண்ட னடியார்நமக்குத் துணையுமுண்டே.

ஆறுண்டு தோப்புண்டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டுகந்தை நெடுங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டுலாவி மயங்குனெஞ்சே சினோதோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின சும்மாவிருக்கச் சுகமுமுண்டே.

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யிலுடங்வந்தாற்
றடுக்கப்பழய வொருவேட்டியுண்டு சகமுளிதும்
படுக்கப்புறத்திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்குக் குறைவில்லையே.

நாட்டமென்றேயுரு சற்குருபாதத்தைநம்புபொம்ம
லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக் குபதேசமிதே.

ஒன்றென்றிருதெய்வ முண்டென்றிருவுயர்செல்வமெல்லா
மன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமுநட்பு
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென்றிரு மனமே யுனக்கே யுபதேசமிதே,,

என்னும் ஐந்து திருப்பாடல்களால் பெறத்தக்க தின்னதென உறுதிகூறிப் பின் வந்தவர்களை முன்னிலையாக்கி,

"ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறத்திண்ணையிற்
சாரீரனந்தலைச் சுற்றத்தைநீககிச் சகநகைக்க
வேரீருமக்கவர் தாமேதருவ ரிணையடியே.

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிற்கிற்கவீச னிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்தமானிடமே.

என்னுந் திருப்பாசுரங்களை இதோபதேசமாக வருளிச்செய்து மௌனத்திருந்தனர். இவர்கூறியதைக் கேட்ட அவ்வூரினர் நாணமுற்று இந்நிலைமையை நாமடைவது கூடாவிடினும் இவர்கூறியமொழிகளின் பொருளை யுணர்வதுகூட அருமையாமென்று மனங் கூசிச் சென்றனர். இவ்விதமிருக்க அடிகள் கூறியதைக் கேட்ட சேந்தனர் அறத்தின்வழியி லீட்டிய நமது வெண்காடரது நிதிகளைச் சூறையிடல் நியதியோவென்று நினைத்து அங்ஙனஞ் செய்யாமல் சற்றுநேரம் வாளாவிருந்து பின் எவ்வாறாயினுமாகுக நமதுஇறைவன் கட்டளைப்படி நடத்துவதே யுத்தமமென நினைத்து நிதிக்குவைக ளனைத்தையுந் திறந்துசூறையிட்டனர்

அரசன் சேர்ந்தனரைச் சிறைசெய்தது.

பட்டினத்தடிகள் துறவுபூண்ட செய்தியையும் அவர்செல்வமுழுவதுங் கொள்ளையாகுஞ் செய்தியையும் அந்நாட்டரசன் கேள்வியுற்றுக் கொள்ளையாகாதபடிதடுத்துப் பட்டிணத்தடிகள் தமக்கைப் புதல்வரை வருவித்து உரிமை முதலியவற்றை அவருக்குக் கொடுத்து அவர்குடும்பச் செலவினுக்கு வேண்டிய பொருள்களை யளித்து எஞ்சிய பொருள்களைத் தனதுபொக்கிஷச்சாலையிற் சேர்ப்பித்துத் தருமசாலை முதலியவற்றிற்கு உபயோகிக்கக் கட்டளையிட்டனன். பிறகுஅவ்வரசன் சேந்தனரது உண்மைநிலையறியாது அவரைநோக்கி, சேந்தனரே! நமது திருவெண்காடர் செல்வம் ஏராளமானவெனக் கேள்வியுற்றன மாதலின் இன்னுமவர் பொருள் யாண்டுளதெனக்கேட்க, சேந்தனர் அரசனை நோக்கி மகாராஜ! அவர் நிதிமுழுவதுங் காட்டிவிட்டேன் இனியொன்று மறியேன் என்றுகூற, அரசன் அவ்வார்த்தையில் நம்பிக்கை யில்லாதவனாய்க் காவலாளர்களை நோக்கி வெண்காடரது நிதிகள் இன்னுமிருக்கிறதைக் காட்டுமளவும் இச்சேந்தனரைச் சிறைச்சாலையில் வையுங்களென்று கட்டளை யிட்டனன். உடனே அக்காவலர்கள் சேந்தனரைத் தளையிட்டுச் சிறைச்சாலையிலடைத்தனர் பிறகு அவ்வரசன் சேர்ந்தனரது காணி யிடம் பொருண்முழுவதும் திருவெண்காடருடையதென வெண்ணிக் கவர்ந்து கொண்டனன். உடனே சேர்ந்தனரது மனைவியார் பயந்து தனது மைந்தனை யெடுத்துக்கொண்டு பிறதேசங்களிற் சென்று கூலிவேலையாற் சீவனம் செய்திருந்தனர்.

அரசன் பட்டினத்தடிகளைக் கண்டது.

பின்பு அவ்வரசன் மண்டபமடைந்து அவண் சிவஞான நிஷ்டையில் வீற்றிருந்த வெண்காட்டடிகளை நோக்கி ஐயரே ! நீரிப் பரதேசிகோலங் கொண்டதனு லாயவிஷேட மென்னை ? என்றுவினவ பட்டினத்துப் பெருந்தகையார் அரசனைநோக்கி நீர்நிற்ச, நாமிருக்க என்றனர். அதுகேட்ட வேந்தன் வெட்கமுற்றுச் சென்றான்.

பிறகு பட்டினத்தடிகள் பசிவந்தபோது ஊரிற்சென்று தனதிருகரத்தாலு மிரந்துணடு தன் சிந்தை முழுவதும் சிவபெருமான் திருவடியிற் பதித்தவராய், எப் பொருளினும் விருப்பு வெறுப் பற்ற திறமே மனைவியாகவும், உலகிலுள்ள வுயிர்களே புதல்வ ராகவும், சிவபெருமானது மெய்யடியார்களே சுற்றத்தின ராகவும், அறியாமையே பகையாகவும், அன்பே பொருளாகவும், அருளே இடமாகவும், தத்துவங்களே ஏவலாகவும், சாந்தமே சார்பாகவும் தவமே முயற்சியாகவும்உடைத்தாய் நிரதிசயாநந்தத்திருந்தனர். இவரதுநிலைமையறியாத அந்நகரில்வசிக்கும் வைசியர்கள் இவர்பிச்சையேற்றுண்பது தம்மரபினுக்குத்தாழ்வு வந்ததாகநினைத்து அவ்வூரிலிவருக்குப் பிச்சையிடாதவண்ணம்தடைசெய்தனர். அப்பொழுது அடிகள் அவ்வூரவர்பா லிரக்கமுற்று அவர்கட்குண்மையறிவுண்டாகும்படி தான் பசுமேய்க்குஞ் சிறுவருடன் ஆடியும், குப்பையிற்புரண்டும்தெருவிற் படுத்துக்கொண்டு சிறுவரையேவித் தன்காலிற்பழுதையைச்சுற்றி யிழுக்கச்செய்தும் பித்தரென்று நாட்டார்பழிக்கும்படி குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளிவைக்கவேண்டுமென்று சொல்லியுந் திரிவாராயினர்.

திருவெண்காடருக்கு நஞ்சிட்டது.

திருவெண்காடரென்னும் பட்டினத்தடிகள் பிச்சையேற்றுண்டிருப்பதைக்கண்ட அவர்தமக்கையார் மனம்பொறாமல் இவரிறந்தாலும் நன்மையாமெனவெண்ணி விஷங்கலந்தஒட்டப்பஞ்சமைத்து இவருண்ணக்கொடுப்பித்தனர். அடிகளதனைத் திருவருளாலுணர்ந்து அவ்வப்பத்தை வாங்கி "தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும்" எனக்கூறித் தமக்கையார் வாழ்கின்ற வீட்டினிறப்பிற் சொருகினர். உடனே அவ்வீட்டிற் றீப்பற்றி உயிர்கட்கு மாத்திரம் அபாயம் நேரிடாமல் அம்மனையுடன் ஊர்முழுமையு மெரிந்தது

அதனைக்கண்ட அவ்வூரினரெல்லாம் அடிகளிடத்து வந்து பயந்து முறையிட, பட்டினத்தடிக ளிரக்கமுற்று "தங்களைக்கேட்டுப் பிறந்திறந்திலம்,, என்னுஞ் செய்யுளைத் திருவாய்மலர்ந்து அத்தீயினைத் தணித்துத் திருவெண் காடடைந்து சுவேதாரணியப் பெருமானைத் தரிசித்து "விளக்கினைவைய முய்ய,, என்றது முதலிய பாடல்களைப் பாடிப் பிச்சையேற்றுண்டு குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளியிட வேண்டுமென்று சொல்லித் திரிவாராயினர்.

திருவெண்காடர் தாயாருக்குத், தகனகிரியைசெய்தது.

இங்ஙனமிருக்க காவிரிப்பூம்பட்டினத்தில் அடிகளது அன்னையராகிய ஞானகலாம்பையார் வாழ்நாட்குறுகித் தேகவியோக முற்றனர். உடனே சுற்றத்தினர் வழக்கப்படி ஈமக்கடன்கழிக்க அவருடலை மயானத்திற் கொணர்ந்து சிதையடுக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது திருவெண்காட்டிலிருந்த பட்டினத்தடிகள் தமதன்னை யிறந்ததைத் திருவருளா லுணர்ந்து அங்குநின்றும் புறப்பட்டுக் காவிரிப்பூம் பட்டினத்து மயானத்தை யடைந்தவளவில் சுற்றத்தினர் அஞ்சியொதுங்கி நின்றனர். பட்டினத்தடிகள் காஷ்டத் தருகிற் சென்று சுற்றத்தினரடுக்கி வைத்த சிதையைத் தள்ளிவிட்டு உலராத வாழைப் பட்டையைக் கொணர்ந்து சிதை யடுக்கி அதன்மீது தன்தாயாரைக் கிடத்தி,

வெண்பா.

ஐயிரண்டு திங்களா வங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற் காண்பேனினி. (1)

முந்தித்தவங்கிடந்து முந்நூறுநாட் சுமந்தே
யந்திபகலாச்சிவனை யாதரித்துத்-தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். (2)

வட்டிலிலுந்தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத்தீ மூட்டுவேன். (3)

நொந்துசுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத் தாழாமே - யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன். (4)

அரிசியோ நானிடுவே னாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்து மகிழாம - லுருகியுள்ள
தேனேயமிர்தமே செல்வத்திரவியபு
மானேயெனவழைத்த வாய்க்கு. (5)

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோ கூசாமன் - மெள்ள
முகமேன்முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனேயென வழைத்தவாய்க்கு. (6)

(விருத்தம்.)

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே. (7)

(வெண்பா.)

வேகுதேதீயதனில் வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியேனையகோ - மாகக்
குருவிபறவாமற் கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்தகை. (8)

வெந்தாளோசோணகிரி வித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னை மறந்தாளோ - சந்ததமு
முன்னையேநோக்கி யுகந்துவரங்கிடந்தென்
றன்னையேயீன்றெடுத்ததாய். (9)

வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்று வெந்துநீறானாள் - பாற்றெளிக்க
வெல்லீரும்வாருங்க ளேதென்றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.

என்னும் பாசுரங்களைத் திருவாய்மலர்ந்து இவ்வுலகினர்போல் ஜடாக்கினியாற் சுடாமல் தனது ஞானாக்கினியாற் றகனஞ்செய்து பரசிவப்பிரபுவினது திருவடிநிழலை யடையும்படி தியானசமாதியால் அந்தியேஷ்டி முதலிய கிரியையாவும் நிறைவேற்றி,

(வெண்பா.)

மென்றுவிழுங்கி விடாய்கழிக்கநீர்தேட
லென்றுவிடியுமெனக்கென்கோவே-நன்றி
கருதார்புரமூன்றுங் கட்டழலாற்செற்ற
மருதாவுன் சந்நிதிக்கேவந்து.

என்னுந் திருவெண்பாவைப்பாடி அங்கு நின்றும் புறப்பட்டுமேற் றிசை நோக்கிச்சென்று திருவிடைமருதூரைச் சமீபித்தனர்.

பட்டினத்தடிகள் திருவிடைமருதூரடைந்தது.

திருவிடைமருதூரிலுள்ள சிவனடியார் யாவரும் அடிகள் வருவதைக் கேள்வியுற்று எதிர்சென்று பன்முறை பணிந்துநிற்க, அடிகளும் அவ்வடியவர்களை வணங்கினர். பின்பு பட்டினத்தடிகள் அவ்வடியவர்களுடன் நகரிற்சென்று திருவாலயத்தையடைந்து மருதப்பெருமானைத் தரிசித்து என்புநெக்குருகக் கைகுவித்து மெய்சிலிர்த்து கண்ணீர்ததும்ப ஆனந்தபரவசராய் நின்று "தெய்வத்தாமரைச் செவ்விதின்மலர்ந்து" என்ற இணைக்குறளாசிரியப்பா முதலாகவெடுத்துத்திருமும்மணிக் கோவைபாடி முடித்து அருள்விடைபெற்று வெளியில்வந்து பிச்சையேற்றுண்டு திருக்கோபுரவாயிலிலே சிவஞானசமாதி செய்திருந்தனர். பின்னொர்ஞான் றிரவில் திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமான் அவ்வூர்க்காவலன் போற்றோன்றிப் பட்டினத்தடிகள் பாற்சென்று தம் கையிலிருக்குங் கோலால் நிலத்தைத்தாக்கித் தமது திருவடியாற்றீண்டி நீயாரென்று வினவ அடிகள் வந்தவரைநோக்கி ஊர்க்காவல! யானுவன்; தோலோ, நரம்போ, தசையோ உரோமமோ, எலும்போ, உதிரமோ, மூச்சோ, மனமோ, யாதோவறிகிலேனென்றனர். உடனே பெருமான் மறைந்தருள, பட்டினத்தடிகள் வந்தவரிறைவரென வுணர்ந்து ஆறுமைமேற்கொண்டு அழுது தொழுது தோத்தரித்து அவர் நின்ற நிலத்து அடிச்சுவட்டினைக் கண்ணிணைற்றிப்பொடி முடிக்கணிந்து துதித்துநின்றனர். பின்பொரு

நாள் மருதீசர் பட்டினத்தடிகள் கனவிற்றோன்றி வெண்காட! நீ நமது திருப்பதிகடோறுஞ் சென்று பாடக்கடவாயென்று கட்டளையிட்டனர். அடிகள் விழித்தெழுந்து அன்பும் ஆர்வமையுமுடையவராய்ப் பெருமான் கட்டளையைச் சிரமேற்கொண்டு கோயிலைவலம்வந்து மருதீசரைத் தரிசித்து அருள்விடை பெற்று அவணின்றும் புறப்பட்டுத் திருக்குடமூக்கு, கீழ்க்கோட்டம், காரோணம், நாகேச்சுரம், குரங்காடுமுறை, மயிலாடுதுறை முதலிய திருப்பதிகளைத் தரிசித்துத் திருவாரூரையடைந்து திருவீதிவலம் வந்து ஆலயத்திற் பிரவேசித்து வன்மீகநாதரையும் கமலாம்பிகையம்மையையும் வீதிவிடங்கப்பெருமானையும் பலகாற்றரிசித்துப் பிச்சையேற்றுண்டிருந்தனர்.

திருவாரூரில் இறந்தவனை யெழுப்பியது.

இப்படித் திருவாரூரிலிருக்குநாளில் ஒருசிறுவன் இப்பட்டினத்தடிகளிடத்து மிகுந்த அன்பும் பக்தியுமுடையவனுய்க் காலந்தவறாது உணவு முதலியவற்றாலுபசரித்து அல்லும் பகலும் பிரியாது தொண்டுசெய்து வந்தனன். அச்சிறுவன் தன்தாய்க்கு ஒரேபுதல்வனாகவிருந்தனன் அவன் றந்தையுடன் கூடப்பிறந்த நல்லத்தை யொருவள் ஒரேபெண்ணை யுடைத்தானவளாயும் வேறு சந்ததியில்லாதவளாயுமிருந்தனள் இவள்தான் பெற்ற ஏகபுத்திரியைத் தன்தமயன் புதல்வனாகிய விச்சிறுவனுக்குத் திருமணஞ் செய்வித்துத் தமையன் குடியுந் தன்குடியும் விளங்கும்படி செய்யவேண்டு மென்கிற கருத்தினளாயிச்சிறுவன்றாயிடம் சென்று தன்கருத்தை யறிவிக்க, அவளதனைத் தன் மகனுக்குத் தெரிவித்தனள். இச்சிறுவன் அவர்கள் கருத்துக்கிணங்காதவனா யிருந்தமையால் அவ்விருபெண்பாலாரும் பட்டினத்தடிகளிடத்தில் தங்கள் கருத்தை விண்ணப்பஞ்செய்து நின்றனர். அடிகள் இவ்விருவர் முறைப்பாட்டினுக்கிரங்கி இச்சிறுவனை நோக்கி பைய! நினதுதாய் அத்தை இவர்களின் கவலையை யொழிக்கக்கடவாய் இறைவன்றிருவருளுண்டாகுங்காலத்தி லுண்டாகும். என் சொல்லை மறுக்காது நிகழ்த்தக்கடவாய் என்று கட்டளையிட்டனர். அதனைக் கேட்ட சிறுவன் பயந்து அடிகளை வணங்கி பெருமானே! தேவரீரது திருவடியைப் பிரியாது தொண்டுசெய்து கிடக்கக்கருதிய அடியேனுக்கு ஊழ்வினை யிங்ஙனமிருந்தது போலும், ஆயினும் அடியேன் மணம்புணருங்கால் தேவரீர்வந்து ஆசிர்வதிக்கவேண்டு மென்று பிரார்த்தித்துநிற்க, அடிகளும் அங்ஙனேயாகுகவென்று விடை

கொடுத்தனுப்பினர். பிறகு அவனை அவன்தாயும் அத்தையு மழைத்துக் கொண்டுபோய் நல்ல சுபமுகூர்த்தத்தில் மணம்புரிவித்தனர். அம்மணப்பந்தரிலே அடிகள் சென்று அவன் கருதியவாறு ஆசீர்வதித்து அவனடைவதின்னதென வவனுக்குணர்த்தவேண்டி,

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலனொன்றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவெழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தொன்வரத்திடுக்கிற் காலுழைத்துக்கொண்டே
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர்கிடந்துழலவகப்பட்டீர்நீரே.

என்னுந் திருச்செய்யுளைப்பாடிச் சேஷையிட்டுச்சென்றனர்.

அப்பால் அந்த மணமகன் தன்மனைவியோடுகூடி வாழ்ந்திருக்கையில் ஓர் நாள் எண்ணெயிட்டு நீராடி யன்றிரவு தன்மனைவியோடு புணர அதனால் சன்னிபாதங்கண்டு இறந்தனன். உடனே அவனது மனைவி, மாமி, தாய், சுற்றத்தினர் முதலிய யாவருங்கூடி யாருக்குஞ் சகியாத பேரிரைச்சலிட்டு அழுதார்கள். அப்பொழுது திருவருளாணைபின்படி யவ்வூரிலுலாவும் பட்டினத்தடிகள் அவ்வீதியில் வரலும் வீதியிலுள்ளார்கண்டு ஓடிவந்து அடிகளைவணங்கி ஐய! தேவரீருக்குத் திருத்தொண்டு செய்துகொண்டிருந்த சிறுவன் சன்னிபாதத்தால் இன்று இறந்தனன் என்றுகூற, அடிகள் கேட்டு இரக்கமுற்று இறந்துகிடக்கும் சிறுவனருகிற்சென்று பிணமகனைத் திருக்கருணையால் நோக்கி,

(விருத்தம்.)

வடிவந்தாலும்வாலிபம்மகளுந்தாயுமாமியும்
படிகொண்டாருமூரிலேப்ழிகொண்டாடனீதியோ
குடிவந்தானுமேழையோகுயவன்றானுங்கூழையோ
நடுநின்றானும் வீணனோநகரஞ்சூறையானதே.

என்ற செய்யுளைப் பாடித் தன்னை யடிமைகொண்ட ஆளுடையான் றிருவருளை நோக்கி,

(விருத்தம்.)

மண்ணுமுருகுமரமுருகுமாயையுருகுமாலுருகும்
பெண்ணுமுருகுமாணுருகும்பேதாபேதவகையுருகும்
அண்ணலுருகுமிடத்தமர்ந்தவாத்தாளுருகுமரவணையான்
எண்ணியுருகுங்குருநாதனென்பாலுரைத்தவோர்மொழியே.

என்ற திருப்பாசுரத்தைத் திருவாய்மலர்ந்தனர். அப்பொழுது இறந்துகிடந்த பிணமகன் உயிர்த்து நித்திரைசெய்து விழித்தவன் போல எழுந்து தொழுதுநின்றனன். அங்கிருந்தயாவரும் ஆனந்தக் கடலில் மூழ்கினர். ஆங்கு நடந்தசெய்தி யொன்று மறியாதவனாதலால், பட்டினத்தடிகள் அமுதுசெய்யக் காலதாமதமாயிற்றே யென வருந்தித் திருவமுது தயார்செய்ய முயன்றனன். அதைக்கண்ட அடிகள்,

(வெண்பா.)

எருவாய்க்கிருவிரன்மேலேறுபுழுக்கூட்டுக்
கருவாய்க்கேகண்கலக்கப்பட்டாய் - திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடந்தாயே
நீரோடுந்தாரைக்கேநீ.

என்னும் பாசுரத்தைப்பாடி அக்காளைக்குநல்லருள்செய்து வாழ்த்தி அவனை யங்கிருத்தி அப்பாலேகினர். அப்பொழுது அவ்வூரிலுள்ளார் வந்து அடிகளை வணங்கிச் சுவாமி! அடியேங்களுய்யும்படி யாங்கள் புரியுந்திருத்தொண்டினையேற்று இந்நகரிற்றானே வீற்றிருந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அடிகள் அவர்கள் குறிப்பை யுணர்ந்து,

(வெண்பா.)

வெட்டவெளியானவெளிக்குந்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங்காணாதே - இட்டமுடன்
பற்றென்றாற்பற்றாதுபாவியேனெஞ்சிலவன்
இற்றெனவேவைத்த வினிப்பு.

என்னும் பாடலைப்பாடி அவர்களை நிறுத்திவிட்டுத் திருவையாற்றுக்குச் சென்று பெருமானைத் தரிசித்து,

மண்ணூர்தணலாற வாணும்புகையாற
வெண்ணரியதாயு மிளைப்பாறப் - பண்ணுமயன்
கையாறவுமடியேன் காலாறவுங்கண்பா
ரையாதிருவையாறு.

என்றபாடலைப்பாடி அங்குநின்று புறப்பட்டுத் தெற்குநோக்கிச் சென்று ஆங்காங்குள்ள பல திருப்பதிகளையுந் தரிசித்துப் பாண்டிநாடடைந்து அங்குள்ள திருவாலவாயென்னு மதுரையையடைந்து சொக்கலிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணி யம்மையாரையுந் தரிசித்து,

(கட்டளைக்கலித்துறை.)

விடப்படுமோ விப்பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோ நின்னருளின்றியே தினமேயலையக்
கடப்படுமோ வற்பர் வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோ சொக்கநாதா சவுந்தரபாண்டியனே.

என்றது முதலிய திருப்பாடல்களைப் பாடி ஆங்குச்சின்னாள் வீற்றிருந்து அங்குநின்றும் புறப்பட்டு அந்நாட்டிலுள்ள மற்றுந் திருப்பதிகளையெல்லாந் தரிசித்துக் கொங்குநாடடைந்தனர்.

பின்பு பட்டினத்தடிகள் அந்நாட்டிலுள்ள பேரையூர், அவிநாசி, முருகன்பூண்டி முதலிய திருப்பதிகளை யடைந்து சிவபெருமானைத் தரிசித்து மவுனமாயவ் வவிநாசியில் வீற்றிருக்கையில் ஓர்ஞான்றிரவில் பசித் தீயெழுந்து வருத்த, ஓர் மூர்க்கன் வீட்டுத் தலைவாயிலிற் சென்று பிட்சையிட வேண்டுமென்பதை யவனுக் குணர்த்தும்படி தனதுகையைத் தட்டினர். அம்மூர்க்கன் இவரைக் கள்வனென்றெண்ணித் தடிகொண்டடித்து வருத்த, அடிகள் நின்றநிலை பெயராது சிவசிவ சிவசிவவென்றுநிற்க அதற்கடுத்த வீட்டுத்திண்ணையிலிருந்த மற்றொருகுடும்பி ஓடிவந்து அம்மூர்க்கனை விலக்கி அடிகளைத் தன் வீட்டுக் கழைத்துபோய் அமுது படைத்துப் பசியாற்றி யுபசரித்தனன். அப்பொழுது பட்டினத்தடிகள் திருவருளை நினைந்து,

கட்டளைக் கலித்துறை.

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குதானல்ல பூமிதன்னைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல
சேணுக்கடந்த சிவனடிக்கல்ல வென் சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்க வடியேன்படுந்துயர் சற்றல்லவே.

வெண்பா.

இருக்கமிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பே-பெருக்க
வழைத்தாலும்போகே னரனேயென்றேக
மிளைத்தாலும் போகேனினி.

என்ற திருச்செய்யுள்களைப்பாடி அங்குச் சின்னாளிருந்து புறப்பட்டுத் துளுவநாடடைந்து கோகர்ண முதலிய தலங்களைத் தரிசித்து அப்பாலேகி உஞ்சேனைமாகாளம் என்னு நகரையடைந்து மாகாளேசுரரைத் தரிசித்து அந்நகரையடுத்த காட்டிலுள்ள விநாயகர்கோயிலின் ஓர் மூலையிற்சென்று பரஞான நிஷ்டையில் வீற்றிருந் தருளினர்.

கழுமரம்பற்றி யெரிந்தது.

இங்ஙனமிருக்க, ஓர் ஞான்றிரவில் சில கள்வர்கள்கூடி அந்நகரையாளும் பத்திரகிரிமகாராஜ னரண்மனையிற் களவுசெய்யக் கருதிப்புறப்பட்டுப் பட்டினத்தடிகள் வீற்றிருக்குங் கோயிலண்டைவந்து அதிலெழுந்தருளி யிருக்கும் விநாயகப்பெருமானை வணங்கித் தங்கட்குக் களவுசெய்ய வாய்க்கவேண்டுமெனப் பிரார்த்தித்துச் சென்று அரண்மனைவாயி லடைந்து காவலர்க ளயர்ந்திருக்குந் தருணம் பார்த்து உட்புகுந்து தங்கட்கு வேண்டியமட்டும் நிதிக்குவியல்களை வாரிச்சென்றனர். இங்ஙனஞ்செல்லுகையில் தங்கள் பிரார்த்தனைப் படி களவுசெய்யக் கிட்டியதற்குமகிழ்ந்து அதில்விலையுயர்ந்த பதக்கமொன்றினை யெடுத்து விநாயகப்பெருமான் றிருக்கழுத்தில் விழும்படி போட்டுவிட்டுப் போயினர், இருட்டுகாலமானதால் அந்தப்பதக்கம் விநாயகப்பெருமான் றிருக்கழுத்தில் விழாமல் அவர் பக்கத்தில் சிவஞானநிட்டை கூடியிருந்த பட்டினத்தடிகள் கண்டத்தில் விழுந்து இது நிற்க, பத்திரகிரிமகாராஜ னரண்மனையிற் களவுபோனதைப் பற்றி, காவலாளர்கள் புறப்பட்டு எங்கணுந்தேடிக் காணாது பொழுதுவிடிந்தவுடனே புதியகாற்சுவடுகள் தோன்ற அவ்வழியே போய் விநாயகராலயத்தினை யடைந்து பட்டினத்தடிகள் பதக்கத்துடனிருக்கக்கண்டு அவரைக் கள்வனென்றெண்ணி இழுத்தலைத்துப் பலவாறு துன்பப்படுத்தினர். அப்பொழுது அடிகள் சிவஞான நிட்டையினின்றுங் கண்விழித்து நிகழ்ந்ததொன்றுந் தெரியாராதலின் காவ

லாளர்கள் தன்னையடித்துத் துன்புறுத்துவதைத் தடுக்கான திருவரு ளைக்கருதி, சிவசிவ சிவசிவவென்று நின்றனர். அக்காவலர்களிற் சிலர் இவன் பெரிய மாயக்கள்வனென்றனர். சிலர் இவன் குடிமயக் கமுற்று மற்றையவரைப்பிரிந்து தனித்தனன் போலு மென்றனர். சிலர் இங்ஙனம் ஜாலஞ்செய்தாற் றன்னை விட்டுவிடுவார்களென் றெ ண்ணி யிங்ஙனம் வாய்பேசா திருக்கின்றனனென்றனர். சிலர் அடே திருடரிற் றலைவ ! நின்னுடன் வந்து திருடியவர்களெங்கே யொளித் திருக்கின்றனர் திருடிய நிதியனைத்து மெங்குமறைத்து வைத்திருக் கிறீர்கள் உடனே சொல்லென்று பின்னுந் துன்புறுத்தினர். அப் பொழுதும் பட்டினத்தடிகள் சிவசிவவென்றே நின்றனர். அதைக் கண்ட இக்காவலர்களிற் சிலர் அடிகளது செய்கையைநோக்கி இவர் சிவயோகத்திற் சிறந்த பெரியவர் போலிருக்கின்றது இவ்வளவு தூரம் துன்பப்படுத்தியும் சற்றேனும் முகச்சுளிப்பின்றிச் சிவத்தோ த்திரஞ் செய்து நிற்கின்றனர் இத னுண்மையறியாது இவரை வருத் துவோமானால் என்னென்னதீங்கு விளையுமோ ! ஆனதால் நடந்த வைகளை யரசனுக்கறிவித்து அவர் கட்டளைப்படி நடத்துவோமெ ன்று சொல்லி அடிகளை வருத்தாது விடுத்தனர்.

இங்ஙனமிருக்க, அடிகளை விநாயகராலயத்திற் கண்டவுடனே சில மூர்க்கக் காவலாளர்களோடி அரசனைக்கண்டு மகாராஜ ! நமது பொக்கிஷசாலையில் நேற்றிரவு கொள்ளையடித்த திருடர்களி லொரு வன், இப்பட்டினத்தையடுத்த அடவியிலுள்ள விநாயக ராலயத்திலி ருந் தகப்பட்டனன் அவன் வாய்பேசாது மவுனமா யிருப்பவன் போல் ஜாலஞ்செய்கின்றான் ஆனதால் அவனைக் கழுவேற்றினாலொ ழிய மற்றைத் திருடர்கள் கிடைக்கார்கள் அல்லாமலும் இன்னு நமது அரன்மனையிலுள்ள நிதியனைத்துந் திருடிக்கொண்டுபோய் விடு வார்கள் ஆனதாலுடனே கழுவேற்ற உத்தரவளிக்கவேண்டு மென்ற னர். அரசன் அதைக்கேட்டு ஒன்றுந் தோற்றாமல் மனக்கலக்கமா யிருந்தனன்; அம்மூர்க்கக்காவலர்கள் பின்னும்அரசனைநோக்கி ஐய! நாங்கள் பழிக்கிடமாகும்படி வேற்றாளைப்பிடித்து வந்தோமில்லை அவனிடத்திற் களவுபோன நகைகளிற் பதக்கமொன் றிருக்கின்றது ஆனதாற்றாங்கள் யோசனை செய்யவேண்டியதில்லை அவனை இப்பொ ழுதே சிட்சிக்க உத்தரவளிக்க வேண்டுமென்று சொல்ல, பத்திரகிரி மகாராசன் திரோதான சத்திவசத்தினாய்க் கழுவேற்றக் கட்டளை

யிட்டனன். உடனே காவன்மாக்களோடி அடவியிலுள்ள விநாயகராலயத்திற்குச் சமீபத்திலிருக்கும் பட்டினத்தடிகளைத் தலையிட்டுக் கழுமரத்தண்டை யழைத்துவந்து நிறுத்தினர். முன் அடிகளைத் துன்பப்படுத்தாதபடிக்குத் தடுத்த சில காவலர்கட்கு மாத்திரங் கழுவிலேற்ற மனமொவ்வா திருந்தும் அரசன் கட்டளைக்குப் பயந்தே வாளாவிருந்தனர். இங்ஙனம் பட்டினத்தடிகளைக் கழுவிலேற்ற வெத்தனிக்கையில், அடிகள் கழுமரத்தைப் பார்த்துக் காலகாலனைக் கருதிப் புன்முறுவல்செய்து,

"என்செயலாவதியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
உன்செயலே யென்றுணரப்பெற்றே னிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்கனேவந்து மூண்டதுவே."

என்ற பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். உடனே அடிகள் காலில் பூட்டப்பட்டிருந்த தளை துண்டு துண்டாய்த் தெறித்து விழுந்ததன்றியும், கழுமரமுந் தீப்பற்றி யெரிந்தது. அதனைக்கண்ட காவலாளர்கள் பயந்தோடி நடந்தவைகளை யரசனுக்குத் தெரிவிக்க, அரசன் திடுக்கிட்டோடி வந்து பற்றி யெரியுங் கழுமரத்தையு மதனருகில் நிற்குமடிகளையுங்கண்டு என்புநெக்குருகி உரோமஞ் சிலிர்த்துக் கடன் மடைதிறந்தெனக் கண்ணீர் பொழியத் தன்னைமறந்து நின்றனன்.

பத்திரகிரியார் திருவருள் பெற்றது.

அங்ஙனம் நின்ற பத்திரகிரி மகாராஜாவானவர் சற்றுத் தெளிந்து சுவாமிகளைப் பன்முறைப் பணிந்தெழுந்து நின்று எம்மையனே! அடியேனறியாதியற்றிய குற்றத்தாற் றமது திருமேனிமிக்க வருந்தியதுபோலும், தீரவிசாரியாமலித் தீங்கினையிழைத்த பாவியான்! என்செய்கேன்!! என்செய்கேன்! என்று வருந்த, பட்டினத்தடிகள் கருணைகூர்ந்து கடைக்கணித்துத் தத்துவநியதி செய்து,

"நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம் பிடிபடுமோ பெருங்காஞ் சிரங்கா
யாக்குவராரதருந்துவரா ரதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச் செப்புமினே."

"மாணூர்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங்
கோணுகியென்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும்பே றிருந்தாலுநற்பேறிது பொய்யன்றுகா
ணானுமிந்தவுடம்போ டிருப்பதருவருப்பே."

என்ற திருப்பாசுரங்களைத் திருவாய்மலர்ந்தருளி, பத்திரகிரியாருக்கு மனவுறுதியுண்டாகும்படி,

அஞ்சக்கரமென்னுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டை வேரறவாட்டி வளங்கள் செய்து
விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக்களைபறித்தேன் வளர்த்தேன் சிவபோகத்தையே.

என்ற திருப்பாடலை யருளிச்செய்தனர். அதனைக்கேட்ட அரசரோகிய பத்திரகிரியார் திடச்சித்தராயாங்கு நின்றபடியே கிரீடாதிபூஷணங்களெல்லாவற்றையுங் களைந்தெறிந்து ஏகவஸ்திரதாரியாய்த் தன்னுடுமுதலியவற்றைத் திரும்பிப்பாராது, கண்ணீருங் கம்பலையுமாய் அடிகள் பாதத்தில் வீழ்ந்து பெருமானே ! அடியேனுய்யும்படி திருக்கடைக்கணித்தல் வேண்டுமென்று பிரார்த்திக்க, அடிகள்

ஓங்காரமாய்நின்றவத்துவிலே யொருவித்துவந்து
பாங்காய்முளைத்தபயனறிந்தாற் பதினாலுலகு,
நீங்காமனீங்கி நிறையாநிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க் கெட்டாக்கனிவந் தமர்ந்திடுமே.

என்ற பாடலைப்பாடிப் பாவனாதீக்ஷைசெய்து சிவயோகவனுபவ முறைமையை யனுக்கிரகித்தனர்.

பட்டினத்தடிகள் மறுபடியும்
திருவிடைமருதூரடைந்தது.

பின்பு பட்டினத்தடிகள் பத்திரகிரியாரைத் திருவிடைமருதூருக்குப் போகும்படி கட்டளையிட்டனுப்பிவிட்டு அங்குநின்று புறப்பட்டுக் காசிமுதலிய வடநாட்டுத் திருப்பதிகளுக்குச் சென்று ஆங்காங்கெழுந்தருளியிருக்கும் பெருமானை தரிசித்து அங்கிருந்து மேற்குச் சமுத்திரவோரமாய்ச் சென்று பாண்டிநாடடைந்து திருக்குற்றாலம் போய்க் குற்றாலநாதரைத் தரிசித்துத் தனது நெஞ்சினை முன்னிலையாக்கி,

காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்படுமுன்னே மேல்விழுந்தே
யுற்றார்முமுன்னே யூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையேகூறு.

என்ற பாடலைப்பாடி அங்கிருந்து புறப்பட்டு இராமேச்சுரம், வேதாரணியை முதலிய தலங்களைத் தரிசித்து மறுபடியுந் திருவிடைமருதூர்புகுந்து மருதப்பெருந்தகையாரைத் தரிசித்துக் கீழைக்கோபுரவாயிலிலே வீற்றிருந்தனர்.

பத்திரகிரியார்பின் சரித்திரம்.

இதுநிற்க, பத்திரகிரியார்குருவாக்ஞைசையின்படி உஞ்சேனைமாகாளம் விட்டுபுறப்பட்டு தலங்கடோறுஞ்சென்று பெருமானைதரிசித்துத் திருவிடைமருதூரணுகி பட்டினத்தடிகளைக் கண்டு பணிந்து அவர் கட்டளைப்படி நாடோறும் பிக்ஷையெடுத்துவந்து குருவாராதனைசெய்து சேடப்பிரசாதத்தினைத் தாம்புசித்து மேலைக்கோபுரவாயிலிலே சிவயோகசாதனையிலிருந்தனர். இப்படிச் சிலகாலம் நடந்துவருகையிலொருநாள், பத்திரகிரியார் தமது குருநாதனது சேடப்பிரசாதத்தினைப் புசிக்கும்பொழுது ஓர் பெட்டைநாய்க்குட்டி வந்து வால்குழைத்து எளியமுகங்காட்டி நின்றது. பத்திரகிரியார் சீவகாருண்ணிய மிகுந்தவராதலால் தாமுண்ணுஞ் சேடப்பிரசாதத்திற் சிறிது அஃதிற்கிட்டனர். அந்நாய்க்குட்டி யதனையுண்டு அதுமுதல் அவரை நீங்காதிருக்க, பத்திரகிரியார் பின்னுந் தினந்தோறும் சேடப்பிரசாதத்திற் சிறிதளித்து வந்தனர்.

இங்ஙனம் சின்னாட்சென்றபின் ஓர்ஞான்று மருதவாணப் பெருந்தகையார் ஓர் சித்தர்வேடம்பூண்டு வெண்காடரிடஞ் சென்று ஐய! பசியால் மிக்க வருந்துகின்றனன் பிக்ஷையிட வல்லீரோவென, வெண்காடர் புன்னகைசெய்து ஐயரே! கோவணத்தினையே பரமாகக் கொண்டிருக்கின்றயானோ பிக்ஷையிடவல்லன், மேலைக்கோபுர வாயிலிலோர் குடும்பியுளன் அவன்செல்வீரேல் நுமதுபசி தணிவிப்பனென்று சொன்னார். அதனைக்கேட்ட மருதவாண வள்ளல் மேலைக்கோபுர வாயிலிலிருக்கும் பத்திரகிரியாரிடத்திற் சேன்று பட்டினத்தடிகள் சொல்லியதைத் தெரிவித்துப் பிக்ஷைகேட்க, பத்திரகிரியார் மனநடுங்கித் தமது குரவர் சொல்லின்குறிப்பறிந்து இவ்வோடும் நாயு

மோ வென்னைச் சமுசாரியாக்கியது குருநாதன் றிருவுள மப்படியா யின் இவைதா னெற்றிக்கு என்று பக்கலிலிருந்த ஓட்டினைச் சுழற்றி யெறிந்தனர். அவ்வோடு அருகிலிருந்த முடிவலின் சிறதநிற்றுக்கி யுடைந்துபோனதன்றியும் அந்நாயு மிறந்து போயுற்று பலியேற்கவுந் தசித்தரும் மறைந்துவிட்டனர். பின்பு பத்திரகிரியார் திருவருட்செ யலைநாடி

ஆங்காரமுமடக்கி யைம்புலனைசுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம்.

என்றது முதலாகிய திருப்புலம்பல்பாடி முடித்துச் சிவயோகசாதனை செய்திருந்தனர்.

இறந்தநாயின் பூர்வசரித்திர மென்னையோவெனில் அங்கதேசத் திலே, தனதழகென்னுங் கயிற்றினால் இளைஞர்களென்னுங் குடங்க ளைக்கட்டி யவர்கள் மனைவியிலுள்ள பொக்கிஷச் சாலையென்னுங் கிணற்றிலேவிடுத்து பொருளென்னும் ஜலம் வற்றும்படி மொண்டு மொண்டு ஓட்டாண்டியாக்கும் வஞ்சகக் களஞ்சியமென்னும் பரத் தையர்குலத்திலே பிறந்த மிக்கரூபவதியாகியவோர் தாசியிருந்தனள். அவள்மூத்தோ ரிளைஞோரென்ற வரம்பின்றியும், தமயன், தம்பி, தக ப்பன், குமாரனென்ற முறைகடந்துங் கலவிசெய்து, புலாலுண்ணல், கள்ளருந்தல், பிறர்பொருளை யேமாற்றி யபகரித்தல் முதலிய மாபா தகத்தொழில் புரிவதிலேயே தன் வாழ்நாள்முழுதுங் கழித்துவந்த னள், ஒருசிவயோகியார் பசியால்மெலிவுற் றவளில்லத்தின் கண்ண டைந்து யாசிக்க, அவள் தன் விடநாயகனுந் தானும்புசித்து மிகுந்த வுணவைப் பரிகாசமா யச்சிவஞானியின்கரத்திற்கொடுத்தனள். அவர் அதனை வாங்கிக் குருப்பிரீதிசெய்து புசித்துப் பசியாறிப் போயினர் பின்பு அந்தவிலைமாது முதுமைப்பருவமடைந்து இறந்தனள் அவள் செய்துவந்த மாபாதகத் தொழிலாலும், சிவஞானிகரத்திற் பரிகாச மா யுச்சிட்டத்தைக்கொடுத்த தோடத்தாலும் மறுபிறப்பி லிந்நாயா ய்ப் பிறந்தனளாயினும் அச்சிவஞானி யதனையுண்டு பசியாறிய விசே டத்தால், மகாசிவஞானியாகிய பட்டினத்துப் பெருந்தகையாரது சேடப்பிரசாதத்தினையும் பத்திரகிரியாரது சேடப்பிரசாதத்தினையு முண்ணும்படியாகிய பெரும்பாக்கியம் பெற்றது. அதனையுண்ட வி சேடத்தாலும் அதிதீவிர பக்குவியாகிய பத்திரகிரியாரது திருக்கரத் தாலிறந்த விசேடத்தாலும் அந்நாயானது, முற்பிறப்புகளிற் செய்த

பாவங்களெல்லாந் தீயினிற் பஞ்சுபோலொழிந்து புண்ணியமுதிர்ச்சி யாய்க் காசிநாட்டை யரசாண்ட விசுவகுத்த மகாராசனுக்குப் புதல் வியாப்ப்பிறந்து பூர்வஞானத்தோ டிருந்தது.

அவ்வரச னப்பெண்ணுக்கு"ஞானவல்லி,,என்ற பெயரிட்டு மிக்கவன்போடு வளர்த்துவந்தனன்.அப்பெண் ஒப்புவுயர்வற்ற அழகுடையளாய்த்தேவதாபக்தியோடு வளர்ந்து பெதும்பைப்பருவமடைந்து,தன் தந்தை தன்னையொருகணவனுக்கு மணஞ்செய்து கொடுக்கக் கருதி யதையறிந்துதந்தைபாற்சென்று அப்பா! நான் யாரையுமணம்புரியவிசையேன் எனதுகுருமூர்த்தி தென்தேசத்திலுள்ளதிருவிடைமருதூர் மேலக்கோபுரவாயிலில் வீற்றிரிக்கின்றனர் இப்பொழுதே யவரிடத்திலென்னைக் கொண்டுபோ யொப்பிவிக்க வேணுமென்று வேண்டிங்கொண்டனள். அதனைகேட்ட விசுவகுத்தமகாராஜன் திடுக்கிட்டு, நமதரன்மனை முற்றிலுங்கூடப் பார்த்தறியாத விக்குழந்தை தனக்குத் குருநாதரொருவருளரென்றும் அவர் தென்தேயத்துத் திருவிடைமருதூரி லிருப்பதாயுஞ் சொல்லுகிறது மிக்கவியப்பாயிருக்கின்றது. ஆனாலிப்பெண்ணி னிலக்கணங்களைப் பாாத்தால் இவ்வுலகத்துப் பெண்கள்போலிருக்கவில்லை தேவாம்சமாயிருக்கவேண்டும் இல்லையே லிவ்விளம்பருவத்தி லிவ்வளவுமுதிர்ந்த குருபத்திவரமாட்டாது. ஆனதா லிப்பெண்ணின் கருத்தின்படியே செய்வது உத்தமமெனத் தீர்மானித்து நன்னாட்பார்த்துத் தன்மகளைச்சிவிகையிலேற்றிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப் பரிவாரங்களோடு திருவிடைமருதூர் மேலக்கோபுரவாயில் வந்தடைந்தனர் உடனே அப்பெண் சிவிகையினின்றிறங்கி சிலநாட்கன்றைப் பிரிந்திருந்த விளம்பசுவைப்போற் பேரவாவோடு இருகரங்குவித்துப் பத்திரகிரியாருகிற்சென்று அவர் சிவயோகசமாதியி லிருப்பதையறிந்து விழிக்குங்காலம் பார்த்திருந்து விழித்தவுடன் அவர் திருமுன்னின்று எம்பெருமானே ! நாயடியேன் மறுபடியுந் தேவரீரது திருவடிப்பேற்றினையே கருதிவந்தனனென்று வணங்கினள். பத்திரகிரியார் அப்பெண்ணின் பூர்வோத்திரமெல்லாந் திருவருளா லுணர்ந்து அப்பெண்ணின் கரத்தைப்பற்றிக் கீழைக்கோபுர வாயிலிற்சென்று தனதுஞானாசிரியராகிய பட்டினத்தடிகள் சந்நிதியில்விட்டு எம்மையனே ! தேவரீரது சேடப்பிரசாதத்தினை யுண்ட நாய்க்கு மிப்பிரவிநோய் வரலாமோவென்று மிக்க வருந்திநிற்க பட்டினத்தடிகள் சிவன்செயலுக்

கென்செயவல்லோமென்று சொல்லித்திருவருளைநாடினர். அப்பொழுது "ஓ வெண்காட! நீ நமது ஒற்றியூருக்குவருதி" என்றோரசரீரி வாக்குப்பிறந்தது உடனே அங்கோர் சோதியுண்டாயிற்று. சிவபெருமான்கட்டளைப்படி பத்திரகிரியாரும் நாயடியாளாகிய பெண்ணுமச் சோதியிற்கலந்து இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியடைந்தனர். உடனே அச்சோதிசென்று மருதவாண மகாலிங்கத்தில் மறைந்தது. உலகமெங்கும் புஷ்பமாரி பொழிய சிவனடியார் யாவரும் ஹராஹரவென்று துதித்து ஆனந்தபரவசரானார்கள். விசுவகுத்த மகாராஜனுந் தரிசித்துப் பேரானந்தமுற்று அங்கிருந்துபுறப்பட்டுச் சென்று தன்னகரமடைந்தனன். அப்பொழுது பட்டினத்தடிகள் திடுக்குற்றுக் கண்களிலானந்தநீர் பெருக மருதவாணர் சந்நிதியைநோக்கி, முன்னாளில் வரகுணபாண்டியரது மனைவியைத் திருவடியிற்கலந்துகொண்ட கிருபாசமுத்திரமாகிய எம்பெருமானே! என்னையுமென்வினையையும் இன்னும்வைத்திருப்ப தெற்றிற்கோவென்றுவருந்தி, பெருமான் முன் கட்டளையிட்டபடி திருவொற்றியூ ரடையக் கருதி மருதூராலயத்தை வலம்வந்து அருள்விடைபெற்று அங்கிருந்துபுறப்பட்டு வடக்குநோக்கிச் சென்றனர்.

வரகுணபாண்டியன் சரித்திரம்.

அடிகள் கூறிய வரகுணபாண்டியரது சரித்திர மென்னையோவெனில், முற்காலத்தில் பாண்டியர்குலத்தி லவதரித்தவரகுணதேவரென்பவர் மதுரைமாநகரை மநுமுறைதவறா தரசாண்டுவந்தனர். அவர் ஒருநாள் தேரேறி வீதியிற் செல்லுகையில் வயோதிகப்பிராமணனொருவன்றேர்க்காலி லகப்பட்டிறந்தனன். அப்பிரமஹத்தி* யவ்வேந்தர் சிகாமணியைப்பற்றிச் சின்னாள்வருத்தி வந்தது. அவ்வேந்தன் வேதாகமங்களிற் கூடியபடி யதற்குப்பரிகாரஞ் செய்தும் நீங்காது வருத்த தனது குலதெய்வமாகிய சொக்கேசர் சந்நிதியிற்சென்று பணிந்து பிராமணன்சாயைப் பிரமஹத்தியாய்ப் பீடிக்கின்றதே என் செய்கே னென்செய்கேனென்று குறைபிரந்தனர். அப்பொழுது காருண்யமே சொரூபமாகவுடைய திருவாலவாயுடையாரின் றிருவருளால் "வரகுண! திருவிடைமருதூருக்குவந்து எம்மைத்தரிசித்தாலிஃது நீங்குமென்றோரசரீரியுண்டாயிற்று. உடனே வேந்தர்சிகாமணி

* இப் பிரம்மஹத்தியின் சிலாரூபத்தைத் திருவிடைமருதூர் கிழைக்கோபுரவாயிலி லின்றுங்காணலாம்.

யாகிய வரகுணபாண்டியர் அங்கிருந்து புறப்பட்டு சிவாஞ்ஞையின்
படி திருவிடைமருதூரடைந்து அங்குள்ள காருண்யாமிருத தீர்த்தத்
தில் மூழ்கி திருவீதிவலம்வந்து கீழைக்கோபுரவாயில் வழியாய்க்
கோயிலினுட்புகுந்தனர். அப்பொழுது அவரைப்பற்றிய பிரம்மஹத்
தி கோயிலினுள்வர அஞ்சி அக்கோபுரவாயிலிலேயே நின்றுவிட்டது
பின்பு வரகுணபாண்டியர் மருதவாணரை வலம்வந்து தரிசித்து என்
புநெக்குருக உரோமஞ்சிலிர்ப்பக்கடன் மடைதிறந்தனைய கண்ணீர்
பொழிய நாத்தழுதழுப்பத்துதித்து அருள்விடை பெற்றுத் தமது
விடுதிக்கேகத் திரும்பினர். இவர் அங்ஙனந் திரும்புகையில் "வரகு
ண! கீழைக்கோபுரவாயிலில் பிரம்மஹத்தி நிற்றலான் மேலைக்கோபுர
வாயிலாற்செல்க,, என்றோரசரீரியுண்டாக அங்ஙனமேசென்று அந்ந
கரிலேயே வசித்து நாடோறு மருதப்பெருமானைத் தரிசித்துப் பெ
ரும்பாரம் நீங்கப்பெற்றவன்போற் சுகமுற்றிருந்தனர். இங்ஙனமாக
வரகுணபாண்டியர் அந்நகரிலேயே வசிக்குங்கால் ஓர்நாளிரவிற் கள்வ
னொருவன் இவரரண்மனையிற் புகுந்து நிதிகளைவௌவிச்செல்கையில்
காவலாளர்கள்கண்டு அக்கள்வனைப் பிடித்துக்கட்டி இவர்முன்கொ
ண்டுவந்துவிட, இவர் அக்கள்வன்றேகத்திற் றிருநீறணிந்திருக்கக்க
ண்டு அவன் சிவனடியாரென்று மதித்து கட்டவிழ்ப்பித்துவணங்கி
அவன் வேண்டுந்திரவியங்களைக் கொடுத்தனுப்பினர்.

பிற்றையநாளிரவில் அந்நகர்ப்புறத்தில் நரிகள் ஊளையிடுவதைக்
கேட்டு பனியாலுங் குளிராலும் வருந்துவதால் சம்போ சம்போ
வென்று பெருமானை நினைத்தழுகிறதுபோலு மென்றெண்ணி அந்நரி
கட்கெல்லாம் உடனே பீதாம்பரத்தினாற் போர்வைதைத்துப் பூட்ட
ச்செய்தனர். மற்றொருநாளிரவில் நீரிலுள்ள தவளைகள் கத்துவதைக்
கேட்டு அரகரவென்று பெருமானைத் தோத்தரிப்பதாயெண்ணியவை
கட்கு மணிகளையும் பொன்களையுங் கலந்திறைக்கச் செய்தனர். மற்
றொருநாள் சிவபெருமானது திருவபிடேகத்தினுக்காக எண்ணெ
யெடுக்க வாலயத்தி லுலர்த்தியிருந்த எள்ளைத்தின்ற வொருவனைக்
கோவில் மெய்க்காவலர்கள் பிடித்துவந்து இவ்வேந்தர்முன்விட, அ
வன், ஒருவனுடைய எள்ளைத்தின்றால் அடுத்தபிறப்பில் மாடாய்ப்பி
றந்து உழைக்கவேண்டு மென்று பெரியோர்சொல்லக் கேட்டிருப்ப
தால் இவ்வெள்ளினைத்தின்றால் அடுத்தபிறப்பிற் காளைமாடாய்ப் பிற
ந்து பெருமானுக்குத் தைலமமைக்குஞ் செக்குமரமிழுக்குந் திருத்

தொண்டிலுக்காளாவோமென்று நினைத்துத் தின்றேனென்றுசொல்ல, அங்ஙனமாயின் யானைச்செக்கிலேயிழுக்கும் மற்றொருதாய்ப் பிறக்கும்படி நின்வாயிலுள்ள வெள்ளிற் சிறிது தருவாயாகவென்று இரந்து புசித்து அவனைப்பன்முறை வணங்கிவேண்டியவைகளைக் கொடுத்தனுப்பினர். பின்பொருநா ளவ்வூர்ப்புறத்தி லுருண்டுகிடந்த வொருமண்டை யோட்டினைக்கண்டு இது இந்நகரின்கணுள்ள சிவனடியார்கள் திருப்பாததூளியலரியும்படி யுருண்டுகிடக்கின்றதுபோலுமென்றெண்ணி அதற்குப் பன்முறை நமஸ்கரித்து அடியேன்றலையுமிங்ஙனமாகுகவென்று பிரார்த்தித்துவந்தனர். அதன்பின்னர் ஒருநாள் கோயிற்பிரகாரத்தில் நாய்மலமிருக்கக்கண்டு தமது உத்தரியத்தால் வாரியெறிந்து இதனையெடுத்து சுத்தஞ்செய்யும்படியாகிய திருத்தொண்டினைச்செய்ய வென்னபுண்ணியஞ் செய்தோமோவென்று மகிழ்ந்திருந்தனர். பின்பு ஒருநாள் நகர்ப்புறத்து வேப்பங்கனி யுதிர்ந்திருக்கக்கண்டு அவைகளைச் சிவலிங்கப் பெருமானெனவும் அவ்வேம்புகளைச் சிவலிங்கங்காய்க்கும் விருக்ஷமெனவும் நினைத் தந்த விருக்ஷங்களைப் பானுவின்கதிர்தாக்காவண்ணம் பந்தல்வைக்கச் செய்தனர்.

இப்படியாக வரகுணபாண்டியர் நீங்காதபேரன்புடையராயங்கு வீற்றிருக்குநாளில் விக்கிரமச்சோழன்றவத்தாற் பெற்றெடுத்த மிக்க ரூபவதியாகிய ரதிதேவியுநாணத்தக்க பேரழகையுடைய பெண்கள் நாயகமாகிய காந்திமதி என்னும் பெண்ணை மணம்புரிந்து அன்றிரவில் பள்ளியறைக்குச் சென்று தன்மனைவியுடைய பேரழகைநோக்கி இப்பெண்மணி நமதுமருதவாணருக்குத் தகுந்தவளாமேயென்றெண்ணி, உடனே மனைவிகரத்தைப்பற்றி ஆலயத்திற்சென்றனர். அப்பொழுது நடுவிராத்திரியாகையால் கோயிற்கதவு திருக்காப்பிட்டிருந்தது. வரகுணபாண்டியர் அக்கதவைத்தட்டி மருதப்ப! என்றுகூபபிட, இவர் பக்திவலையிற்பட்ட மருதப்பெருமான் றிருவருளாற் றிருக்கதவந் திறக்கப்பட்டது. உடனே வரகுணதேவர் கோயிலுட்சென்று மருதவாணர்பால் அப்பெண்ணைவிட்டு எம்பெருமானே! இப்பெண் தேவரீரது திருவுள்ளத்திற் குகந்தவளாவளெனக் கொண்டுவந்தேனென்று சொல்லித் துதித்துநின்றனர். உடனே மருதவாணர் அப்பெண் கரமொன்றினை மாத்திரம் நீக்கி சிவலிங்கத்திலயிக்கியஞ் செய்துகொண்டனர். பின்பு வரகுணபாண்டியர் திரும்பி யரண்மனை

க்குவந்து சந்தோஷமாயிருந்தனர் கோயிற்கதவு முன்போற்றிருக்காப்பமைந்தது. இப்படியிருக்க மறுநாட்காலையில் கோயிலதிகாரிகள்வந்து திருக்காப்புக்களைந்து மருதவாண மகாலிங்கத்தில் ஒரு வளையலையணிந்த பெண்ணின்றிருக்கரமொன்று மணிக்கட்டுவரையிலிருக்கக்கண்டு பயந்து வரகுணபாண்டியருக்குத் தெரிவித்தனர். உடனே பாண்டியர் கோயிலுட்சென்று கோயிற்றுறையா ரறிவித்தவண்ண மிருக்கக்கண்டு மனமுருகி நின்று எம்பெருமானே! பாவியேன்றீண்டியதா லிக்கரம் எச்சிலென் றொதுக்கப்பட்டது போலுமென்று வருந்திநிற்க "வரகுண? நின்றிருத்தொண்டினை யுலகினரறிந்துய்யுமாறு வெளியிடும்பொருட் டிவ்வாறு செய்தனம்,, அஞ்சன்மின் என்று ஓர் அசரீரியுண்டாய் வெளியிலிருந்த அக்கன்றுக்கரமும் மருதவாண மகாலிங்கத்துள் மறைந்தது. தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள் அடியவர்கள் அரகரவென்று முழக்கஞ்செய்தார்கள். பின்பு வரகுணதேவர் அநேகவரியதிருத் தொண்டினைச்செய்து மருதவாணர் திருவடியடைந்தனர். இக்கருத்தையே பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்,

வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்துங்
குவளைப் புனலிற் றவளைய ரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்

காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக்கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன்கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவர்

என்று கூறியிருக்கின்றனர்.

திருவிடைமருதூரி லிருந்து புறப்பட்ட பட்டினத்தடிகள் வழியிலுள்ள தலங்களை தரிசித்து திருவெண்காட்டினை யடைந்து திருவீதிவலம்வந்து கோயிலுட்சென்று சிவபரஞ்சுடரைத் தரிசித்து,

பூதமுங்கரணம் பொறிகளைம்புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங்கடந்த வெளியிலேநீயு நானுமாய்நிற்கு நாளுளதோ, வாதமுஞ்சமய பேதமுங்கடந்த மனோலயவின்ப சாகரனே, ஏதுமொன்றறியேன் யாதுநின்செயலே யிறைவனே யேகநாயகனே

யாவரேயிருந்தும் யாவரேவாழ்ந்தும் யாவரேயெமக் குறவாயும் தேவரீரல்லாற் றிசைமுகமெனக்குத் திருவுளமறிய வேறுளதோ பாவலனொருவன் செந்தமிழ்க்கிரங்கிப் பறவையாருடலை மாற்ற ஏவலாளாகி யிரவெலாமுழன்ற விறைவனேயேக நாயகனே.

உண்டதேயுண்டு முடுத்ததேயுடுத்து மடுத்தடுத் துரைத்ததேயுரைத்தும், கண்டதேகண்டுங் கேட்டதே கேட்டுங் கழிந்தனகடவுநாளெல்லாம், விண்டதாமரைமேலன்னம்வீற்றிருக்கும் விழவறுவீதிவெண்காடா, அண்டரேபோற்றவம்பலத்தாடுமையனே யுய்யுமாறருளே.

என்ற பாக்களைப்பாடி யருள்விடைபெற்றுச் சென்று அங்குச் சின்னாள் வீற்றிருந்தனர்.

இங்ஙனமிருக்க, ஊர்கடோறுஞ் சென்று கூலிவேலையாற் சிவனஞ்செய்துவந்த சேந்தனாரின்மனைவியாரும் மைந்தனும் தொண்டைநாடடைந்து அங்குள்ள ஒருகிராமத்திற் சின்னாள் வசித்தனர். அப்பொழுது ஒருநா ளக்கிராமத்துச் சிறுபிள்ளைகளுடன் மிக்கவறிவுற்றவிச் சேந்தனார் பிள்ளையுஞ் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தது. அவ்விளையாட்டு முன்னிலையிற் சண்டைநேரிட்டுச் சிலபிள்ளைகளிச் சேந்தனார் குமாரனைப் பிடித்து அடித்து பிதாவில்லாப் பேதை தந்தையில்லாத்தரித்திரன் தகப்பனில்லாத் தறிதலையென்று இகழ்ச்சியாகப்பேச, அதனைக்கேட்ட விச்சிறுவன் மிக்கதுயரமடைந்து மனவரு

த்தத்துடன் தன்றாயிடத்திற் சென்று சண்டை நடந்த செய்தியு மவர்கள் தூஷித்ததையுங்கூறி யழத்தொடங்கினன். சேந்தனாரின் மனைவியார் தன் புதல்வனுக்கு வேண்டிய தேறுதல்சொல்ல அச்சிறுவன் அழுகைதீர்ந்து அம்மா என் பிதாவெங்கே? அவர்யாவர்? அவர்பெயரென்னை? அவருக்குச்சுற்றத்தின ரொருவரு மில்லையோ? உனக்கு உறவின ரொருவருமில்லையோ? என்றுவினாவ, குழந்தையைப்பார்த்து மிகுந்தவியாகூலத்துடன் நாங்கூர் சேந்தனாரின் மனைவியார் தன் மரபின் வரன்முறை யாவுஞ் சாங்கோபாங்கமாகக்கூறி யுன்றந்தையாரின்[illegible]மு மிராஜனாற் சிறைச்சாலையிலிருக்கின்றனர் அவருக்குத்தலைவராகிய பட்டினத்துச் செட்டியாரும் பரதேசியாராகித் தேசசஞ்சாரஞ் செய்கின்றனர் இதுதானுள்ள செய்தியென்று சொல்ல அதனைக்கேட்ட வச்சிறுவ னிந்தவிபரீதமெல்லாம் அரசனால் நடந்ததை எனது தந்தைக்குத்தலைவராகவிருந்த பட்டினத்துச் சுவாமிகளுக்குத் தெரிவித்து அவராலித்துன்பத்தினை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து தன்றாயையழைத்துக் கொண்டு பட்டினத்துச்சுவாமிகளெவ்விடத்தில் வாசஞ் செய்கின்றன ரெவ்வகையிற் சஞ்சரிக்கின்றன ரென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு ஊர்கடோறுஞ்சென்றுவிசாரித்துப் பன்னாள்வரையிலுந் தேடியலைந்து திரிந்து சுவேதவனமென்னுந் திருவெண்காட்டினுக்கு வந்து சேர்ந்தனன். அங்குப்பட்டினத்துச்சுவாமிகள்பரதேசிகோலத்துடனவ்வூருக்குப்புறம்பாகிய காட்டில் வாசஞ் செய்கின்றன ரெனக்கேள்வியுற்று அதிகசந்தோஷத்துடனிவ்விருவரும் அக்காட்டில் நுழைந்து வருந்தித்தேடியங்குள்ள ஓர் குளக்கரை மேட்டில்நிஷ்டையி லிருக்கக்கண்டு அந்தச் சுவாமிகளது திருவடித்தாமரைகளில் அடியற்றபனைபோற் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்துக் கோவென்றலறிப் பிரலாபித்தனர்.

சேந்தனார் சிறைச்சாலையினின்று மீண்டது.

அப்போதுபரதேசியா ரசைவற்ற ஞானயோகத்தைவிட்டுச்சகமுகமாகத் திரும்பிப்பார்த்து நீவிர் யாவர் நுமக்குநேரிட்ட துயரமென்னை? என்றுவினவ,சேந்தனார்மனைவியார், சுவாமிகளே! யான், தங்கட்குமுன்னம்பிரதானகாரியதரிசியாயிருந்த சேந்தனாரடியாள்.இக்குழந்தையவர் குமாரன். தேவரீரவதூதநெறிகொண்டில்லறந்துறந்து புறப்பட்ட நாளிற்றங்கள் திரவியத்திற்சிலவற்றையடியாளின்கணவர்மறைத்துவைத்திருப்பதாக அரசன்கோபித்து எங்கள் வீட்டைக் கொள்

ளையிடச்செய்து அவரைச் சிறைப்படுத்தினன். இத்தன்மையால் யானு மிக்குழநதையுஞ சிறுமையடைந்து தேசப்பிரஷ்டர்களா யைய மேற்றுங் கூலித்தொழில் செய்துஞ் சீவனஞ்செய்து இதுகாறுமுயிர் பிழைத்திருக்கின்றனம். எனதன்புள்ள கணவராகிய சேந்தனரின்னு முமச் சிறைச்சாலையி லிருக்கின்றனர். அவரைக்கண்டுநெடுநாளாயின. இச்சிறுவன் அவரைக் காணவிரும்பி யாருத்து யராலிடர்ப்படுகின்றனன். தேவரீர் கூடாட்சத்தாலெனது நாயகராகிய சேந்தனரை வரவழைத்துக் காட்டவேண்டுமென்றுபிரார்த்திக்கப் பட்டினத்துச்சுவாமிகள் பரமசிவத்தின்றிருவருளைச் சிந்தித்துக் குழந்தையையுந்தாயையும் பார்த்துமனமிரங்கி நீங்களிருவரும் இக்கி ராமத்திற் போயிருங்கள். சேந்தன் நாளைக்கு வருவனென்று சொல்லியனுப் பினர். இவ்விருவரும் அங்ஙனமேசென்றிருக்கவும் மற்றைநாட்காலையில் பட்டினத்தடிகள் அவ்வூர்ச் சுவேதாரண்ணி யேசுரர் சந்நிதியையடைந்து,

மத்தளை தயிருண்டானு மலர்மிசைமன்னினானும்
நித்தமுந்தேடிக்காணு நிமலனேயமளமூர்த்தி
செய்த்தளைக்கயல்பாய்நாங்கூர்ச் சேந்தனேவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே.

என்ற திருப் பாசுரத்தினைத் திருவாய்மலர்ந் தருளினர்உடனே பரமகருணாநிதியாகிய சிவ பெருமான் கட்டளைப்படிகணேசமூர்த்தி தனதுதிக்கையால் சிறைச்சாலையிலிருந்தசேந்தனரைத்தூக்கிப்பட்டினத்தடிகள்முன்விட்டனர். சேந்தனர் கனவுகண்டுவிழித்ததுபோல் எதிரில்நிற்குந் தனது குருசிகாமணியையும் தன்மனைவி மைந்தரையுங்கண்டு திடுக்கிட்டுக்குருநாதனைப்பணிந்து இச்சிறைச்சாலையினின்று மீட்பித்தது போற் பாசச் சிறையினின்று மீட்டு அடியே னுய்யும்படித் திருவுளம்பற்றவேண்டுமென விண்ணப்பித்தனர். அடிகள் இவர்பக்குவத்தைநோக்கித் தனதுதிருநோக்கால் தீட்சைசெய்துசேந்த! நீஉன் குடும்பத்துடன் சிதம்பரத்திற்குச் சென்று காட்டு விறகொடித்துவிற்று சிறுவிலை கொண்டு ஓர் சிவனடியாருக் கமுதூட்டிப் பின்னின் மனைவிமைந்தருடன்உண்டு காலங்கழிக்கக் கடவாயென்று கட்டளையிட்டுப் புறம்போந்தனர்.

சேந்தனார் தில்லைநகரடைந்ததும், திருவாதிரையிற் களி நிவேதனஞ் செய்ததும்.

உடனே சேந்தனார் தன் குருநாதன் கட்டளையைச் சிரமேற் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் தில்லைநகரடைந்து அவ்வூருக்குப் புறத்திலுள்ள காட்டிற்சென்று விறகொடித்து வந்து விற்றுச் சீவனஞ்செய்து வந்தனர். இங்ஙனம் நிகழ்கையில் ஏழுநாள்வரைக்கும் விடாமழைபெய்தது அதனால் சேந்தனார் விறகொடிக்கக் காட்டிற்குச்செல்லாமையால் உணவுமுதலியன வில்லாமல் பசிநோயால் மெலிந்து வருந்தி அடவிக்குச்சென்று விறகுசேகரித்துவந்து விற்கக் கூறியும் கொள்வாரற்று வருந்திச் சிறிதளவு பொரிமாவுக்குமாறி அம்மாவை யெடுத்துக்கொண்டு தனதில்லஞ்சேர்ந்து தன்மனைவியார் சரத்திலளித்துக் களியமுதுசெய்துவைக்கும்படி சொல்லிவிட்டுத்தனது ஞானசிரியர் கட்டளைப்படி யமுதூட்டுதற்குச் சிவனடியாரைத்தேடிச்சென்றனர். சேந்தனார் மனைவியார் அப்படியேசெய்து அடியார்வரவை எதிர்ப்பார்த்திருந்தனர்.

சேந்தனார் அவ்வூர்முழுதுஞ் சுற்றிப்பார்த்தும் ஓர் சிவனடியாரையுங்காணாது திகைத்துத் தன்குருநாதனைத் தியானித்துத் தீராத் துயர்க்கடலிலாழ்ந்து பரிதபித்தனர். தம்மடியார்படுந்துன்பத்தினைச் சகியாது அக்கணமே யதனை நிவர்த்திக்கும் பாங்கருணைத் தடங்கடலாம் நடராஜவள்ளலார், இச்சேந்தனார்படுந் துயரத்திற்கிரங்கி ஓர்வயோதிக சந்நியாசி ரூபமாய்த்தோன்றி இவர்போகும் வழியினோர் மண்டபத்தில் வீற்றிருந்தனர். சேந்தனார் அம்முதிய அந்தணரைக் கண்டு கன்றினைப்பிரிந்த தலையீற்றுப் பசுவேபோலோடி அவர் பாதத்தில் வீழ்ந்து சுவாமிகாள்! அடியேன் குருவனுணைப்படித் திருவமுதூட்டுதற்கு ஓர் சிவனடியாரைக்காணாது வருந்துகின்றனன், எங்கள் முன்னோர்செய்த தவப்பயனால் தாங்களிங் கெழுந்தருளினீர்கள் போலும், தேவரீர் அடியேனில்லத்திற் றிருவமுது கொள்ளும்படித் திருவுளம்பற்றவேண்டுமெனப் பிரார்த்தித்தனர். முதியராய்வந்த அழகிய நிருத்தசபேசர் அதற்கிசைய் சேந்தனாரவரையழைத்துக் கொண்டு தமது இருப்பிடஞ் சேர்ந்து பாதந்துலக்கிப் பலபணி செய்து பீடத்திருத்தித் தனது மனைவியார்செய்துவைத்திருந்த களியமுதினைப்படைத்தனர். சேந்தனாரது பத்திவலையிற் கட்டுண்ட சிற்சபேசர் அக்களியமுதிற் கொஞ்சமுண்டு எஞ்சியவற்றைத் தனது ஆடையி

னோர் மூலையில் முடிந்துகொண்டு அந்தரத்தானமாயினர். களியமுதுண்டிருந்த வயோதிகரைக் காணாது சேந்தனாரு மவர் மனைவியாரும் வியப்புற்று வந்தவ ரித்தகைய ரெனத் தெரியாது வருந்தினர். அப்பொழுது ஆடகச் சபேசர் தமது அருட்சத்தியாகிய உமாதேவியாரோடு இடபவாகனத்தி லாரோகணித்துச் சேந்தனார்முன் விசும்பிற்றோன்றினர். இதனைச் சேந்தனார்கண்டு பரவசமுற்றுச் சிரமேற்கரங் குவித்து எம்பெருமானே ! என்னாண்டவனே! என் தந்தையே! என் தாயே ! என்குருவே ! என்தெய்வமே ! என்குலதெய்வமே ! என்கண்ணுண்மணியே! கருணைக்கடலே! கற்பகக்கனியே! கருணாநிதியே! என்றுதுதிக்க, பரமேசுவரர் இவரைநோக்கி சேந்த! நின்னன்பிற்கு மிகமகிழ்ந்தனம். நினக்கு இந்நாட்டரசனா லளவிறந்த திரவியங்களளிப்போமாக' அதனையடைந்து இம்மையிற் சகலபேறுகளையும் பெற்றனுபவித்து மறுமையிற் சாயுச்சியபதவியை யடைவாயாகவென்று திருவாய்மலர்ந்தனர். அதனைக்கேட்ட சேந்தனார் பரவசமுற்று பெருமானே ! தேவரீர் ஆஞ்ஞைப்படி யளவிறந்த திரவியங்களை பெற்றால் அதனை யோம்புதலினும் அதனாலுண்டாகுஞ் செருக்கினும் எனது வாணாளை வீணாயொழிக்க நேரிடு மாகையால் அங்ஙனமின்றி எனதுகுடும்பப் பாதுகாப்பினுக்கு வேண்டிய சிறிதளவு பொருளினை மாத்திர மனுக்கிரகிக்கக் கிருபைபாலிக்க வேண்டுமென்று பிராத்தித்த தன்றியும், "தன்னைப்போ லுலகினை ரின்புறுமாறு,, எத்தகைய தீமையைச்செய்த கொடியவரே யாயினும் இத்தனுர்மாசத் திருவாதிரை நட்சத்திரத்திலே அன்போடு விரதமிருந்து தேவரீருக்குக் களியமுது நிவேதனஞ் செய்வாராகிலவரது தீமைகளெல்லாந் தீயினிற்பஞ்சுபோலொழிந்து தேவரீர் அடியேனுக்கனுக்கிரகித்தவண்ணமே இம்மையிற் சகலபோகங்களையு மனுபவித்து மறுமையிலழியாத பேரின்பவீட்டினை யடையும்படி எவைவெவைகளை விரும்புகின்றனரோ அவைகளை யெல்லா முடனே யடையும் படிக்கும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, * பரமேசுவர ரங்ஙனமேயாகுகவென்று மறைந்தனர். ஒருவனுண்ணவு முழுவுணவாகாத அக்களியமுது விருந்தினரும் சேந்தனாரும் அவரது மனைவியாரும் மைந்தரும் உண்டுசுகிக்கும்படி பெருமான் றிருவருளா லெடுக்கவெடுக்கக் குறையாதிருந்தது. சேந்தனாரளித்த களியமுதினை ஸ்ரீ சிதம்பரேசர் கனகசபைக்குக் கொண்டுபோ யங்குதரிசனார்த்தமாய் வந்திருந்த பிரமாதிதேவர்கட்குக் கொடுத்துஞ் சேந்தனாரன்பின்றிறத்தை வெளியிட்டனர்.

இங்ஙனமிருக்க, சோழமகாராஜன் அழகிய சிற்றம்பலவாணருக்குப் பிரதிதினமும் பூசனையியற்றுவதும் அதன்முடிவிற் றிருவருளாலப்பூசனை யாதொருகுறைவுமின்றி நடந்ததற் கறிகுறியாயோர்மணியோசைகேட்பதும் அதன்பிறகுதான் அன்னமுதலியன அருந்துவதும் வழக்கமாய் நடந்துவந்தன. அங்ஙனமே அற்றைக்கும் அரசன் பெருமானைப் பூசிக்கச்செய்து காத்திருந்தனன். நெடுநேரமாகியும் மணியோசைகேட்டிலதாகையால் இவ்வரசன் மிக்கவியாகூலத்துடன் இன்றியற்றிய பூசையில்யாதுகுறைவுளதோ யாது தவறிழைத்தனனோ வெனமிகவருந்தி அன்னபானாதிகளருந்தாது பூமியிற்படுத்துச் சிறிதுநித்திரையிலிருந்தனன் அப்பொழுது மறையினாலு மயனாலுமாலாலு மறியொணா விறைவர் ஓர் அந்தணருருவமா யவ்வரசன்கனவிற் றோன்றி அரசனே! நமதுசேந்தனளித்த களியினை யுண்ணப்போயினேமாகையால் இவண்மணியோசை கேட்கத் தடையாயிற்று. இதுவேயன்றி நின்பூசனையில் யாதொருதவறு நிகழ்ந்ததில்லை துயருறலொழிக என்றுகூறிமறைந்தனர். உடனே அரசன்விழித்துத் திடுக்கிட்டெழலும் வழக்கம்போல மணியோசைகேட்க அதைக்கேட்டுப் பேரானந்தப் பெருங்கடலுட்டிளைத்து அச்சேந்தனாரெங்குளரோ எத்தகைய முதிர்ந்த வன்பினரோ எப்பொழுது அவரைத் தரிசிப்போமோ வென்னுங் கவலையுடன் தனது மாளிகைக்குச் சென்றனன் மற்றைநாட்காலையில் தில்லைவாழந்தணர் முதலியோர் சிற்சபைக்குவந்து திருக்காப்புக்களைந்து களிபுதிந்து கிடக்கக்கண்டு எவரோவிவ்வா றசுத்தஞ்செய்திருக்கின்றனர், இதனைநீக்கிச் சுத்தஞ்செய்தல்வேண்டுமென் றரசனுக்கறிவித்தனர். அரசன்வந்து பார்த்துத் தான்கண்ட கனவைக்கூறிப் பெருமான்றிருக்கருணையையுஞ் சேந்தனாரது அன்பின்றிறத்தினையும் நினைந்து நினைந்து அழலிடைப்பட்ட வெண்ணெய்போலுருகி வியப்புற்று உதிர்ந்துகிடந்த களியினைத்திரட்டித் தானுஞ் சிவனடியார்களுமுண்டு என்றுமழியாத பேரின்பவீடாகியகுஞ்சிதபாதநீழலையடையும்பெரும்பாக்கியத்தைப்பெற்றனர்.

---

* இதுமுதல் மார்கழிமாசத் திருவாதிரையிலே நடராஜப்பெருமானுக்குக் களிநிவேதனஞ்செய்யும் வழக்கமுண்டாயிற்று. இங்ஙனமநேகர் நிவேதித்து இஷ்டகாமியங்களைச் சித்திக்கப்பெற்ற சரித்திரங்கள் பலவுள. அவைகளைச்சமயம் நேர்ந்துழி தனிமையாகவெளியிடுவாம்,

சேந்தனர் திருப்பல்லாண்டுபாடி இரதமோட்டுவித்ததும் முத்தியடைந்ததும்.

அப்பொழுது மார்கழிமாசம் பிரமோற்சவகாலமாதலால் ஸ்ரீ நடராஜப்பெருமானை ரதத்திலெழுந்தருளச்செய்து அதனையிழுக்கவும் கொஞ்சமு நகராமையால் அரசன் முதலினரெல்லோரும் மிக்க வியாகூலத்துட னதையிழுக்கு முயற்சியிலிருந்தனர். அப்பொழுதங்குச் சேந்தனரும் வந்திருந்தனர். இவரது பத்திப்பேரன்பை வெளியிடும்பொருட்டுப் பெருமான்றிருவருளால் "சேந்த! இவ்விரதம் செல்லும்படி பல்லாண்டுபாடுவாயாக,, என்றோ ரசரீரியுண்டாயிற்று. இதனைக்கேட்ட சேந்தனர் பெருமானே நாயேனையுமோர்பொருட்படுத்தி இவ்வரிய திருத்தொண்டினைச் செய்ய ஆளாக்கிய நின்றிருவருளிற்கு யாதுகைம்மாறு செய்யவல்லேன் என்று நினைந்து என்புநெக்குருக நாத்தழுதழுப்ப மனங்கசிந்துருகிப் பெருமான்கட்டளையைச் சிரமேற்கொண்டு,

"மன்னுகதில்லை வளர்கநம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளேபுகுந்து புவனியெல்லாம்விளங்க
அன்னநடைமடவா ளுமைகோனடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்த பித்தற்குப்பல்லாண்டு கூறுதுமே"

என்றதொடக்கத்தனவாகிய பதின்மூன்று பாசுரங்களடங்கிய திருப்பல்லாண்டினைப் பாடியருளினர். உடனே இரதம் புறப்பட்டுத் திருவீதிவலம்வந்து இருப்பிடஞ் சேர்ந்தது. அதனாலரசனும் தில்லைவாழந்தணரும் மற்றுஞ் சிவனடியார்களும் சேந்தனரிவர்தானெனத் தெரிந்து பணிந்து வந்தித்தனர். அன்றியும் அவ்வரசன் இச்சேந்தனரது கிருகத்திற்குவேண்டிய பொருள்களையளித்து இவரது வறுமைநோயை நீக்கினன். இங்ஙனம் சின்னாட்சென்றபின் சேந்தனர் மற்றைச்சிவாலயங்கட்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக்கக்கருதிப் புறப்பட்டுத் தெற்குநோக்கிச்சென்று சீகாழி புள்ளிருக்குவேளூர் மயிலாடுதுறை முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவிடைக்கழியென்னுந் திருநகரடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பிரானைத்தரிசித்து வீற்றிருந்தனர். அன்றிரவு சேந்தனர்கனவில் சண்முகப்பெருமான் ஓர்வேதியே மதலைவடிவமாய்வந்து சேந்த! "நம்மைப் பாடுவாயாக" எனக்கூறி மறைந்தனர். உடனே சேந்தனர் விழித்து பெருமான் கட்டளைப்படி,

"மாலுலாமநந்தந்தெண்கையிற்சங்கம் வவ்விஞன்மலமகண்மதலே
மேலுலாந்தேவர்குடிமுழுதாளுங் குமாரவேள்வள்ளிதன்மணளன்
சேலுலாங்கழனித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற(வே
வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்த னென்னுமென்மெல்லியலிவ

என்பதுமுதலிய பதிஞெரு திருப்பாடல்களடங்கிய திருவிசைப்பா பாடித்துதித்து அங்குற்சின்ஞளிருந்து புறப்பட்டுத் திருவீழிமிழலையை யடைந்து வீழிநாதரைத்தரிசித்து நாம் வாயிகத்தொண்டு செய்தல் வேண்டுமென்பது பெருமானது திருவுள்ளம் போலும்என நினைந்து,

"ஏகநாயகனையிமையவர்க்கரசையென்னுயிர்க்கமுதினையெதிரில்
போகநாயகனைப்புயல்வணற்கருளிப்பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேகநாயகனைமிகுதிருவீழிமிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனையன்றிமற்றென்றுமுண்டெனவுணர்கிலேன்யானே"

என்பது முதலிய பன்னிரண்டு செய்யுட்களைத் திருவாய்மலர்ந்து அங்கிருந்துபுறப்பட்டுத் திருவாவடுதுறையையடைந்து அங்ஙனமே பரமேசுவரரைத் தரிசித்து,

"பொய்யாதவேதியர் சாந்தைமெய்ப்புகழாளராயிரம் பூசுரர்
மெய்யேதிருப்பணிசெய்சீர் மிகுகாவிரிக்கரைமேய
வையாதிருவாவடுதுறை யமுதேயென்றுன்னை யழைத்தக்கால்
மையார்தடங்கண்மடந்தைக்கொண்றருளாதொழிவதுமாதிமையே"

என்பது முதலிய பதிஞெருதிப்பாசுரங்க ளருளிச்செய்து பின்னும்பல தலங்கட்குச் சென்று பற்பலபாடல்களைப்பாடிப் பெருமானைத்தரிசித்து மீட்டுந் தில்லைநகரடைந்து அம்பலவாணருக்கு நெடுங்காலம் பற்பல திருத்தொண்டுகள் செய்திருந்து குடும்பத்துடன்அவ்வம்பலவாணரது குஞ்சிதபாத நீழலையடைந்தனர்.

பட்டினத்தடிகள்
சிதம்பரம் முதலிய தலங்களைத்தரிசித்தது.

இங்ஙனமிருக்க திருவெண்காட்டினிலிருந்து புறப்பட்ட பட்டினத்தடிகள் பிள்ளையாரவதரித்த பிரமபுரத்தை யடைந்து திருவீதிவலம்வந்து கோயிலுட்சென்று திருத்தோணியப்பரையும், திருநிலைநாயகியம்மையையுந் தரிசித்து,

"திருவளர்பவளப் பெருமலைமணந்த"

என்பது முதலாகவுடைய திருக்கழுமல மும்மணிக்கோவை பாடிமுடித்துச் சின்னாளங்கிருந்து புறப்பட்டுப் பெரும்பற்றப்புலியூரென்னுஞ் சிதம்பரமடைந்து தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தினைத் தரிசித்துத் திருவீதிவலம்வந்து கோயிலினுட்சென்று உலகுய்யவாடும் நிருத்தசபேசரைக் கண்டு, அன்புமேலிட்டு என்புநெக்குருக உரோமஞ்சிலிர்ப்பத் தன்னைமறந்து சற்றுநேரமொன்றுந் தோன்றாது நின்று,

"பூமேலயனறியா மோலிப்புறத்ததே"

என்னும் பாசுரமுதலாகவுடைய கோயினான் மணிமாலை பாடிமுடித்து வணங்கி வெளியில்வந்து ஓர்மண்டபத்தில் வீற்றிருந்தனர். அப்பொழுது பசிவருத்தியதால் "பன்னைகவாட,, என்னும் பாடலைப் பாட, உடனே உலகமாதாவாகிய சிவகாமியம்மையார் ஓர் பார்ப்பனப் பெண்ணுருவ மாய்வந்து பெருமானுக்கு நிவேதித்த பிரசாதத்தினைக் கொடுதனர். அடிகளதனைப் பெற்றுத் திரும்பிப்பார்க்கையில் அவ்வம்மையாரைக் காணாதவராய்த் திடுக்கிட்டு அன்னமளித்தது அம்மையாரென்றறிந்து தொழுது தோத்தரித்துப் பிராட்டியார் நின்ற அடிச்சுவட்டினைக் கண்ணொற்றிப் பொடிமுடிக்கணிந்து, நாயேனையுமோர் பொருட்படுத்தி பஞ்சினுமெல்லியபாதம் நோக நடந்து வந்து அனுக்கிரகித்த நின்பேரருளிற்கு யாதுகைம்மாறு செய்யவல்லேனென்று துதித்து, அப்பிரசாதத்தினையுண்டு பசியாறிச் சிவஞான நிஷ்டையில் வீற்றிருந்து காலந்தோறும்அம்பலவாணரைத்தரிசித்து

"நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே"

என்பது முதலிய மூன்று திருவகவல்களைப் பாடித் துதித்துப் புறம்போந்து,

"காம்பிணங்கும்பணைத்தோளார்க்கும் பொன்னுக்குங்காசினிக்குந்
தாம்பிணங்கும்பலவாசையும்விட்டுத் தனித்துச்செத்துப்
போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணங்கத்துதையோவென்செய்வேன்தில்லைச்சங்கரனே"

என்பது முதலிய விருபது திருப்பாசுரங்களைப்பாடித் திருவொற்றியூருக்குப் போகக்கருதி அங்குநின்றும் புறப்பட்டுத் திருத்தினைநகர், விருத்தகிரி, திருப்பாதிரிப்புலியூர், திருவதிகை, திருவாமூர், திருநாவலூர், திருவெண்ணைநல்லூர், திருக்கோயிலூர், முதலிய தலங்களைத் தரிசித்து; எத்தகைய கொடியபாவியேயானாலும் தன்னைநினைத்த மாத்திரத்தில் முத்தியளிக்கவல்ல திருவருணையைச் சமீபித்துக் கிரியைப் பன்முறைவலம்வந்து ஆலயத்துட்சென்று மாலயன்றேடவொண்ணு மலைக்கொழுந்தராகிய அண்ணுமலை யப்பரையும் உண்ணுமுலையம்மையாரையுந் தரிசித்துத் துதித்துவெளியில் வந்து கிழக்குக் கோபுரவாயிலில் * எழுந்தருளியிருந்தனர்.

---

* இக்கோபுரவாயிலிலேயிருக்கையில் ஓர்நாள் அவ்வூர்க்கணிகைமாதொருத்தி யவ்வழியாய்ச் சென்றதாயிம் அடிகள் அவளைக்கைடைக்கணித் தழைத்ததாயும் அவள் இவர்பெருமையை யறியாது தாயிடமோடிக் கோபுரவாயிலிலிருக்கும் பயித்தியக்காரன் என்னைவாவென் றழைத்தனன் நான் வந்துவிட்டேனென்று தெரிவித்ததாயும், தாய்கேட்டு அந்தோ! வலியவந்த புண்ணியப்பேறு வியர்த்தமாயிற்றே யென்று வருந்தி அப்பெண்ணைக் கூட்டியோடிவந்து அடிகள் முன்விட்டுப் பணிந்ததாயும் அப்பொழுது அடிகள் "தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது, தேடினவர்போய்விட்டார் தேறியிரு-நாடிநீ, யென்னைநினைத்தா லிடுப்பிலுதைப்பேனு, னுன்னைநினைத்தாலுதை" என்றபாடலை யருளிச்செய்து நிட்டையிலிருந்துவிட்டதாயும் அங்கு ஓர்சரகில் வெளிப்பட்டிருந்த அவரது வீரியத்தினையக்கணிகைமாது உண்டு கருப்பவதியாயிருந்து ஓர்பிள்ளையைப் பெற்றதாயும் அப்பிள்ளையே அருணகிரிநாதரென்று சொல்வதாயும் கர்னபரம்பரையாய் வழங்கிவருகிறது.

அடிகள் சிலதினம் கோபுரவாயிலில் வீற்றிருந்து புறப்பட்டுத் திருக்காஞ்சி நகரையடைந்து திருவேகம்பரைத்தரிசித்து அன்புபெருக வானந்தமேலிட்டு,

"மெய்த்தொண்டர்செல்லு நெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலு நற்றொண்டுவந்தில னுண்பதற்கே

பொய்த்தொண்டுபேசிப் புறப்புறமேயுன்னைப் போற்றுகின்ற
வித்தொண்டனென்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே"

என்ற செய்யுண்முதலாகவுடையதிருவந்தாதியையும்

"அறந்தானியற்றுமவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்
றிறந்தான்பெருமையை யென்சொல்லுவேன்கச்சியே கம்பனே"

என்ற பாசுரமுதலியதிருவேகம்பமாலையையும்,

"திருமால்பயந்த திசைமுகனமைத்து
வருமேழ்பிறவியுமானுடத்துதித்து"

என்பதுமுதலிய கச்சித்திருவகவல்களையும் பாடிப் புறம்போந்து, சிலகாலம் கச்சிக்காரோணத்தருகில் வீற்றிருந்தனர், அப்பொழுது ஓரர்த்தயாமத்திற் பசிப்பிணிவருத்த,

"அத்திமுதலெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா-மெத்தப்
பசிக்குதையாபாவியேன் பாழ்வயிற்றைப்பூற்றி
யிசிக்குதையாகாரோணரே"

என்ற பாடலைப்பாட உலகன்னையாகிய காமாட்சியம்மையார் வேதியமாதுருவமாய் வந்து திருவமுதளித்து மறைந்தனர். அடிகளதனைப்பெற்று உண்டுபசியாறி, அங்குள்ள காமக்கோட்டம், கச்சபாலயம், ஓணக்காந்தன்றளி, கச்சிநெறிக் காரைக்காடு அநேகதங்காபதம், என்னுந்திருக் கோயில்களுட்சென்று பெருமானைத்தரிசித்து வெளியில்வந்து, ஓரிடத்தில் வீற்றிருந்தனர். அப்பொழுது உலகத்திலே கடவுண்மீது அன்புபாராட்டும் பெரியோர்களைநோக்கி நீங்கள் கல்லையுஞ் செம்பையுஞ் கடவுளெனத்துதிப்பது இழுக்கெனக்கூறும் விபரீதபுத்தியுடைய புறச்சமயிகளையும்; சிலர் தாங்கள் யோகஞானங்களைப் பெற்றவர்களென்றும், கல்லையுஞ் செம்பையும் சரியைகிரியாவான்கள் கடவுளென வணங்குவதுபோல தாங்கள் வணங்கவேண்டுவதில்லை யென்றும் கூறும் போலியகச்சமயிகளையும் நோக்கி

யவர்கட்கு நற்புத்தியுண்டாகுமாறு "கல்லையுஞ்செம்பையும் மங்கள கரமாகிய ஒப்பற்ற ஈசனென்று போற்றுவோமில்லை, அதனுள் பிர காசம் பொருந்திய திருவடியிணையுடைய ஈசுரன் வியாபித்திருத்த லுண்மையாதலின் அவ்வீசுரனைத் துதிக்கின்றோ மென்னுங் கருத் தையுடைய"

*"உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தையறப்
புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே
யொளியிட்டதாளிரண் டுள்ளேயிருத்துவ துண்மையென்று
வெளியிட்டடைத்துவைத் தேனினிமேலொன்றும் வேண்டிலனே"

என்றபாடலையும், பரமேசுவராது சர்வவியாபகலட்சணமறியா து, அவ்வீசுரனுற் றிருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்களின் முடி பாம் குருலிங்கசங்கமம் என்னு முத்திற வழிபாட்டினில் இலிங்கவ ழிபாடு ஒன்றினை மாத்திரம் கைக்கொண்டு அதற்குச் சோபானமா கிய மற்றிருவழிபாட்டினையுந் தூஷித்துத் திரிபவரை நோக்கி "பர மேசுவரர் அவ்விலிங்கத்தினில் மாத்திரமன்று அதனிலும் மற்றெவ் விடத்தும் உறைவர் என்னுங் கருத்தையுடைய"

---

* இச்செய்யுளால் கல் செம்பு முதலிய ஜடபதார்த்தங்கள் உயர் ந்தபொருளென்று அவைகளைப் போற்றுவோமில்லை யென்றும்அதி ல்முதல்வன் உறைவதுண்மையென்றும் அம்முதல்வனைச் சரியைகிரி யை யோகவான்களும் தன்னையொத்த ஞானவான்களும் வணங்க வேண்டுவது அத்தியாவசியமென்றும் விளக்கியபடியாம். இப்பாசுர த்தில் "பொன்என்றது" மங்களகரமாகியபொருள் என்று அருத்த மாகும்; ஆகவே அம்மங்களகரமாகியபொருள் சிவம்என்றே துணிக அன்றியும் பொன்னென்று மாத்திரங்கூறுது உயர்பொன்னென்ற தெற்றிற்கெனின், பிரமாதிதேவர்கள் சிலகாலமங்களகரமாயிருந்து பின் அமங்களகரமாதலால் அவர்களன்றென மறுத்து எஞ்ஞான் றும் அழியாத மங்களகரமாயிருக்கும் பரசிவம்என்பதனை விளக்கும் பொருட்டேயாம்.

நிற்க. ஈசன் தம்முள்ளிருத்தலால் அவனது உருவத்தையும் உரு வஅருவங்களையும் கல்-செம்பு என்றும் அதனை வணங்கவேண்டுவதில் லையென்றும் சொன்னதெனச் சிலர் கூறுவர் இதுதகுதியன்று. என்ன

ணமெனில், அடிகள் ஆலயங்கடோறுஞ்சென்று பெருமானைத் தரிசித்துப்பின் ஒற்றியூரிற்குவந்து காலந்தவறாது படம்பக்கநாதரைத்தரிசித்துத் தனக்குத் திருவெண்காட்டினி லளிக்கப்பெற்ற சிவலிங்கப் பெருமானுக்குப் பூசனை யியற்றிவந்ததா லிங்ஙனங்கூறுதலொழுக்காம்.

வெளியிட்டு—சந்தேகமற்று.

அடைத்து—மனத்தையுறுதிப்படுத்தி.

"சொல்லிலுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதியிலும்
அல்லிலுமாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லிலுமன்ப ரிடத்திலுமீச னிருக்குமிடங்
* கல்லிலுஞ்செம்பிலு மோவிருப்பானெங்கள் கண்ணுதலே"

என்ற பாடலையும்பாடி, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கழுக்குன்றஞ்சென்று, தன்னைச்சதா மனதிற்றியானிக்கும் சர்வான்மாக்களுக்கும், தனதுவீட்சண்யமுடைய நெடுந்தூரத்துற்ற விருட்சங்கள் புல் பூண்டுகள் முதலியவற்றிற்கும், அவைகளில் வசிக்குங் கீடமுதலிய

---

* இப்பாசுரத் தீற்றடியிற் "கல்லிலுஞ் செம்பிலுமோவிருப்பானெங்கள் கண்ணுதலே" என்று கூறியது, ஈசன் கல்லிலுஞ்செம்பிலுமாத்திரமாயிருப்பன்; அன்று, அவைகளில் உருவமாயும் அருவுருவமாயும் அவையல்லாத மற்றெவ்விடத்தும் அருவமாயு மிருப்பன் என்பதனை விளக்கியபடியாம். அன்றியும் கண்ணுதல் என்பது நெற்றிக்கண்ணை யுடையவன் என்று பொருள்தருதலால் அவ்வீசனை வழிபடுதற்கு உருவலட்சனமே சிறப்புடைத்தென்பதனை வற்புறுத்திக் கூறியவாறுமிற்று. இதனுல் குரு சிவனடியார் வழிபாட்டுடன் சிவலிங்கவழிபாடு செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. இதனுல் குருவையும் சிவனடியாரையும் வழிபட்டுச் சிவலிங்கவழிபாட்டினைத் தவிர்த்தலெணலுங்கூடாது. இதற்குச்சான்றாக இப்பட்டினத்தடிகளே "சொக்கிட்டரண்மனைப்புக் குட்டிருடிய துட்டர்வந்து, திக்குற்றமன்னரைக் கேட்பதுபோற் சிவசிந்தைசெய்து, மிக்குக்குருலிங்க சங்கமநிந்தித்து வீடிச்சிக்கு, மெக்குப்பெருத்தவர்க் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே" என்று கூறியுள்ளார். ஆகவே பசுவின் பால் அதன்றேகமெங்கும் வியாபித்திருப்பினும் அதன்முலைக்காம்பின் வழியேயன்றி யதனை அடைவது கூடாததுபோல, எங்கும் வியாபகராகியவீசர் இவ்விலிங்கத்தின் வழிபாய்நின்றே அனுக்கிரகிப்பரென்பது திண்ணம்.

சர்வஜந்துக்களுக்கும், பிறவிநோய்த்துன்பங்களையகற்றி மோட்சவீடளிக்கும் வேதகிரியைவலம் வந்து, பிரமன் விட்டுணு இந்திரன்முதலிய தேவர்களும் மனிதர்களும் எஞ்ஞான்றும் பூசித்துத் துதித்துவணங்கிநிற்க அம்மலையில் எழுந்தருளியிருக்கும் வேதகிரிப் பெருமானைத் தரிசித்துச் சந்நிதியில் நின்று.

"காடோசெடியோகடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல்வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றி லீசாவுயிர்த்துணைநின்பதமே"

என்று பாடித்துதித்து வெளியில்வந்து அவண் சிலபகல் சிவஞானநிஷ்டையிலிருந்தனர். பின்பு அங்கிருந்து புறப்பட்டு மேற்கு நோக்கிச்சென்று பற்பல பாடல்களைப்பாடி வழியிலுள்ள தலங்களைத்தரிசித்துத் திருக்காளத்தி மலையைச் சமீபித்து,

"முப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவு மோகத்தினாற்
செப்போதிளமுலையாருடனசேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப் படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன் றிருக்காளத்தியீச்சுரனே"

என்று துதித்து காளத்தியப்பரைத் தரிசிக்கப் பேரவாக் கொண்டு அந்நகரையடுத்த அடவிவழியாய்ச் செல்லுகையில், அங்குள்ள பாம்புகள், யானைகள்,மான்கள்,மயில்கள்,பன்றிகள்முதலிய மிருகங்களும் அக்காட்டில் வாழும்குறவர்களும் தனக்குபசரிக்கக் கண்டு, முறையே இது முன்காளத்தியப்பரைப் பூசித்தபாம்பும் யானையும்போலும், இது அய்யன்கையில்விளங்கும் மானின் சந்ததிபோலும், இது முருகக்கடவுளது திருப்பாதந் தாங்கப்பெற்ற மயிலினம் போலும், இது முன் கண்ணப்பநாயனா ரெய்த பன்றியி னினம்போலும், இவர் அந்நாயனாரது உறவினர்போலுமென் றெண்ணி அவைகளைப் பன்முறைபணிந்து நகருட்சென்று திருமலையை வலம்வந்து,

"வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந் தப்பவல்லேனல்ல னினிச்சென்
றாளாவதெப்படியோ திருக்காளத்தியப்பருக்கே"

என்றதுமுதலிய பாடல்களால் அறுபான்மும்மை நாயன்மார்களின் றிருத்தொண்டின் றிறத்தினைப்புகழ்ந்து துதித்து சந்நிதியடை

ந்து பெருமானைப்பலவாறு தோத்தரித்து வெளியில்வந்து திருக்கை லாய தரிசனஞ்செய்யக் கருதி,

"மந்திக்குருளையொத்தே னில்லைநாயேள் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ்சிந்தையை யானென்செய்வேனெனைத் தீதகற்றிப்
புந்திப்பரிவிற் குருளையையேந்திய பூசையைப்போ
லெந்தைக்குரியவன்கா ணத்தனே கைலாயத்தனே"

என்ற திருப்பாடலைப்பாடினர். உடனே சிவபெருமான் அங்கு திருக்கைலாய தரிசனந்தந்தருளப் பட்டினத்தடிகள் தரிசித்து,

"கான்சாயும் வெள்ளிமலைக் கரசேநின் கழனம்பினே
னூன்சாயுஞ்சென்ம மொழிந்திடுவாய் கடவூரனுக்காய்
மான்சாயசெங்கை மழுவலஞ்சாய வணைந்தகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே,,

என்பதுமுதலிய ஏழு திருப்பாச்சுரங்களைப் பாடினர்.

பட்டினத்தடிகள் திருவொற்றியூ ரடைந்தது.

பின்பு திருவெண்காடர் அங்கிருந்து புறப்பட்டுச்சென்று பிரம னும் விஷ்ணுவும் வருந்தி தேடியும் காணப்பெறாத திருத்தாள்கள் நோகச்சங்கிலியார்பார் றாதுசென்ற பெருமானுறையும் ஒற்றியூரை யடைந்து திருக்கோயிலைப்பார்த்து,

"கண்டங்கரியதாங் கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போல வழகியதாந்-தொண்ட
ருடலுருகத் தித்திக்கு மோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு,,

என்ற திருவெண்பாவைப்பாடி யன்னகரிலுள்ள சராசரங்களெ ல்லாம் குருலிங்கஜங்கமங்களாகத் தோற்ற,

"வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர்-பூவுலகி
லீதுசிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றியூர்"

என்னுந் திருவெண்பாவைப் பாடியருளி திருவீதிவலம் வந்து,

ஒடுவிழுந்துசிப்பாயு மொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன்-கடுவருந்துந்

தேவாதிதேவன் திருவொற்றியூர்த் தெருவிற்
போவாரடியிற்பொடி"

சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பில்
நடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக் கிழிப்பதுவே"

என்ற பாசுரங்களைப்பாடி அங்கப்பிரதட்சணஞ் செய்து சந்நிதியிற் பிரவேசித்து படம்பக்கநாதனை வணங்கி, உடல்குழைய என்புநெக்குருக கண்ணீருங்கம்பலையுமாய் நின்று,

"இருநிலமடந்தை யியல்பினுடுத்த
பொருகடன்மேகலை முகமெனப்பொலிந்த

என்னுமுதலினையுடைய திருவொற்றியூர்த் தொகை பாடிப்புறம்போந்து,

"ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றி யூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே"

என்னுஞ் செய்யுட்களையும் முதல்வன் முறையிடு, அருட்புலம்பல், முத்லியவைகளையுந் திருவாய்மலர்ந்தருளி முன் திருவெண்காட்டினிற்பெற்ற சிவலிங்கப் பெருமானுக்குக் காலந்தவறாது பூசனையியற்றிவந்தனர்,

பட்டினத்தடிகள் இலிங்கவுருவானது.

இங்ஙனமிருக்க ஒருநாள் பட்டினத்தடிகள் அவ்வூர்ப் புறத்திற் பசமேய்க்குஞ் சிறுவரைநோக்கி நுங்கட்குச் சிலவேடிக்கை காட்டுவேன் என்னையொருகுழியிற் புதையுங்களென்றனர். அவர்களப்படியேசெய்ய மற்றொருமணற்குன்றிற் றோன்றினர். அச்சிறுவர்கண்டு அதிசயித்து அடிகளைமீட்டுமீட்டும்புதைக்க அங்ஙனமே வெளிவந்துகொண்டிருந்து கடைசியில் வெளிப்படாமற் சிவலிங்கரூபமாக ஞானசமாதிகொளுந்து வீற்றருளினர். சிறுவர்கள்கண்டு வியப்புற்று ஊரிலுள்ளவர்கட் கறிவிக்க ஊராரனைவருந்திரண்டுவந்து கண்களிக்கத்தரிசித்துப் பணிந்து ஆனந்தங்கொண்டாடினர்.

உலகமெங்கும் புஷ்பமாரிபொழிந்தது. அந்தரதுந்துபி முழங்கிற்று. இப்பூவுலகிலுள்ளாரும் தேவலோகத்துள்ளாரும் இதனையுணர்ந்து சிரமீதிருகரங்கூப்பிப்பணிந்து இப்பெரும்பேறு நமக்குக்கிடைக்குமோவென்று கவலையுற்றனர். பூம்புகார்ப்பட்டினத்தி லுள்ளாரனைவரும் இச்செய்தி கேள்வியுற்று அழுது தொழுது பூரணச்சந்திரனையொத்த திருமுகத்தையுடைய நமது குலதெய்வம் வருமோ நாம் தரிசிக்கப் பெறுவோமோ என்று வருந்தி அங்கிருந்து புறப்பட்டு ஒற்றியூரடைந்து இப்பட்டினத்துக் கடவுளைப்பணிந்து பலதொண்டுகள் செய்து திருவருட்பெருஞ் செல்வத்தினைக் கைக்கொண்டனர்,

முத்தியென்பது உருவமுத்தி அருவமுத்தி உருவாருவ முத்தி உன மூவகைத்தென்றும், இம்மூவகையல்லாது வேறுவிதங்களாய்க் கூறும் முத்திகளெல்லாம் சொன்மாத்திரமே யன்றிப் பயனிலதென்றும் வேதாகமங்கள் கூறுகின்றன வாதலின், நமது பட்டினத்தடிகள் அடைந்தது இம்மூவகையுள் உருவாருவமுத்தியேயாம்.

இதற்கு முன்னமே இவரது மனைவியாராகிய சிவகலையம்மையார் இவரதுதிருவடியிணையே தியானித்துக்கொண் டிருந்து சிவபெருமான் றிருவடிநீழ லடைந்தனர். என்று சூதபுராணிகர் சொல்ல நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்கள் கேட்டு ஆனந்தகடலி லாழ்ந்தனர்.

திருவெண்காடரென்னும்

பட்டணத்துப் பிள்ளையார்

சரித்திரசங்கிரகம்,

முற்றுப்பெற்றது.

———*———

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்த

திருப்பாடற்றிரட்டு.

முதலாவது.

கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய்வாழ்வை யுடலையோம்பற்க
பிறந்தனவிறக்கு மிறந்தனபிறக்குந்
தோன்றினமறையு மறைந்தனதோன்றும்
பெருத்தனசிறுக்குஞ் சிறுத்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கு மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் புனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனை பிறந்தனை பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைக்கொன்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன
ஓப்பினையனைத்து மனைத்துநினையோம்பின
செல்வத்துக்களித்தனை தரித்திரத்தழுந்தினை

சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத்தருந்தினை
ஒன்றொன்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பைத் துச்சிலொதுக்கிடம்
என்னின்றியங்கு மிருவினைக்கூட்டை
கல்லினும்வலிதாக் கருதினையிதனுள்
பீளையுநீரும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீருந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி
வளியுமலமும் வழங்குமொருவழி
சலமுஞ்சீயுஞ் சரியுமொருவழி
உள்ளுறத்தொடங்கி வெளிப்படநாறும்
சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கையை யுள்ளுறத்தேர்ந்து
கடிமலர்க்கொன்றை சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலமற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையுண் முளைத்தெழுஞ்சோதியை
அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலரக்கென நெக்குநெக்குருகி
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது,

கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

காதளவோடிய கலகப்பாதகக்
கண்ணியர்மருங்கிற் புண்ணுடனுடுங்
காதலுங்கருத்துமல் லாலின்னிருதாட்
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கேர்டிங்கோ டலமருங்கள்வர்
ஐவர்கலகமிட் டலைக்குங்கானகம்
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சிறார்
ஊற்றைப்புன்றோ லுதிரக்கட்டளை
நாற்றப்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றற்றுண்டம் பேய்ச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திடருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
ஓயாநோக்கிட மோடுமரக்கலம்
மாயாவிகார மரணப்பஞ்சரம்
சோற்றுத்துருத்தி தூற்றும்பத்தம்
காற்றிற்பறக்குங் காணப்பட்டம்
விதிவழித்தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகபாணன் றைக்குஞ்சட்டை
ஈமக்கனலி லிடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்குசருமி
பவக்கொழுந்தேறுங் கவைக்கொழுகொம்பு
மணமாய்நடக்கும் வடிவின்முடிவிற்
பிணமாய்க்கிடக்கும் பிண்டப்பிணமே
ஊரிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிர்குவித்த பூளைகாலைக்
கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக்கூட்டம்

அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிருமேகத் துருவினுருகிழல்
நீரிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்டகாட்சி
அதனினும்பொல்லா மாயக்களங்கம்
அமைபுமமையும் பிராணேயமையும்
இமயவல்லி வாழியென்றேத்த
ஆனந்தத் தாண்டவங்காட்டி
ஆண்டுகொண்டருள்கைநின் னருளினுக்கழகே.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது,

கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

பாற்கடல்கடையம் படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடங்கிய சிவனேயடைக்கலம்
அடங்கலுமடக்கிடுங் கடுங்கொலைக்காலனைக்
காலெடுத்தடக்கிய கடவுணின்னடைக்கலம்
உலகடங்கலும்படைத் துடையவன்றலைபறித்
திடக்கையிலடக்கிய விறைவனின்னடைக்கலம்
செய்யபொன்னம்பலச் செல்வநின்னடைக்கலம்
ஐயநின்னடைக்கல மடியனின்னடைக்கலம்
மனவழியலைந்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியா வழுக்குறுமனனும்
ஆணவமலத் துதித் தலைந்துதினுலாந்திடு
நினைவைப்புழுவென நெளித்திடுசிந்தையும்
படிறும்பாவமும் பழிப்புறுநினைப்பும்
தவறுமழுக்காறு மிவறுபொச்சாப்பும்
கவடும்பொய்யும் சுவடும்பெருஞ்சினம்
இகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்

பகையுமச்சமுந் துணிவும்பணிப்பும்
முக்குணமடமையு மைம்பொறிமயக்கமும்
இடும்பையும்பிணியு மிடுக்கியவாக்கையை
உயிரெனுங்குருவிட் டோருங்கூரம்பையை
எலும்பொடுநரம்புகொண் டிண்டயிற்பிணித்துக்
கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழுங்குடிலைச்
செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்குரம்பையை
மலவுடற்குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச்சோற்றுத் துன்பக்குழியைக்
கொலைபடைக்கலம்பல கிடக்குங்கூட்டைச்
சலிப்புறுவினைப்பல சரக்குங்குப்பையைக்
கோட்சரக்கொழுகும் பீற்றக்கோணியைக்
கோபத்தீமூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப்பறவை யடையும்பஞ்சரத்தை
புளராக்கவலை விளைமரப்பொதும்பை
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரத்தைக்
காசிற்பணத்திற் சுழலுங்காற்றாடியை
மக்கள்வினையின் மயக்குந்திகிரியை
கடுவெளியுருட்டிய சகடக்காலை
பாவச்சரக்கொடு யவக்கடல்புக்கு
காமக்கனலிற் காற்றெடுத்தலைப்ப
கெடுவழிக்கரைசேர் கொடுமரக்கலத்தை
இருவினைவிலங்கொடு மியங்குபுற்கலனை
நடுவன்வந்தழைத்திட நடுங்குமியாக்கையை
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
அடிமலர்க்கமலத்திற் கபயநின்னடைக்கலம்
வெளியிடையுறுமிடி யிடித்தெனவெறித்தெழுங்
கடுநடைவெள்விடைக் கடவுணின்னடைக்கலம்
இமையாநாட்டத் திறையேயடைக்கலம்
அடியார்க்கெளியா யடைக்கலமடைக்கலம்
மறையவர்தில்லை மன்றுநின்றாடிக்
கருணைமொண்டலையெறி கடலேயடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்த
பாசிழைக்கொடியொடு பரிந்தருள்புரியும்

எம்பெருமானின் னிணையடிக்கபயம்.
அம்பலத்தரசே யடைக்கலமுனக்கே
திருச்சிற்றம்பலம்.

நான்காவது,

கச்சித்திரு வகவல்.

திருச்சிற்றம்பலம்.

திருமால்பயந்த திசைமுகனமைத்து
வருமேழ்பிறவியு மானுடத்துதித்து
மலைகள்கோமான் மலரடியிறைஞ்சி
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானிடர்க்கெல்லாம் யானெடுத்துறைப்பேன்
விளிவெளிமாக்க டெளிவுறக்கேண்மின்
முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும்பாலே மேவியகணைக்காற்
றுள்ளும்வராலெனச் சொல்லித்துதித்தும்
தசையுமெலும்புந் தக்கபுன்குரம்பை
இசையுங்கதலித் தண்டெனவியம்பியும்
நெடுமுடலுங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்து
மலமுஞ்சலமும் வழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் சீப்பாய்ந்தேறி
உகிராற்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றுங்
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்

ஊட்டவும்பிசையவு முதவியிங்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தை
பாரினிலினிய கமுகெனப்பகர்ந்தும்
வெப்புமூத்தையு மேவியவாயைத்
துப்புமுருக்கின் றாய்மலரென்றும்
அன்னமுங்கறியு மசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகுங்
கூறியமூக்கைக் குமிழெனக்கூறியும்
தண்ணீர்ப்பீளை தவிராதொழுகுங்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதைத்
வள்ளைத்தண்டின் வளமெனவாழ்த்தியுங்
கையுமெண்ணெயும் கலவாதொழியில்
வெய்யவதரும் பேனும்விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண்முகிலென்றுஞ்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகவாயில்
தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயுங்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடவழி தொலைபெறுவாயில்
எண்சாணுடம்பு மிழியும்பெருவழி
மண்பாற்காமங் கழிக்குமறைவிடம்
நச்சிகாமுக ருய்நாளென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயில்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் சவலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடவையைமூடி
உண்ணீர்பாயு மோசைச்செழும்புண்
மால்கொண்டறியா மாந்தர்புகும்வழி
நோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி

தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
நெருக்கியகாமுகர் சேருஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாயிற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாயில்
இத்தைநீங்க வினிதெனவேண்டாம்
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீட்டருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

திருச்சிற்றம்பலம்.

அகவல் முற்றிற்று.

சிவமயம்.

திருவேகம்பமாலை.

கட்டளைக் கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

அறந்தா னியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென்சொல்லுவேன் கச்சியேகம்பனே. (1)

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலதச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடி வைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே. (2)

கைப்பிடி நாயகன் றூங்கையிலே யவன் கையை யெடுத்
தப்புறந் தன்னி லசையாமல் முன்வைத் தயல்வளவில்
ஒப்புடன் சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படிஞ நம்புவே னிறைவா கச்சி யேகம்பனே. (3)

நன்னாரிற் பூட்டிய சூத்திரப்பாவை நன்னார்தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோ வந்த தன்மையைப்போ
லுன்னாலி யானுந் திரிவதல் லான்மற் றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண்டோ விறைவா கச்சி யேகம்பனே. (4)

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே. (5)

பொல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பாற்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் றிருவடிக்கன்
பில்லாத வன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே. (6)

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்வேன்கச்சி யேகம்பனே. (7)

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாழ்நெஞ்சுக்
கென்ன விசாரம்வைத் தாயிறை வாகச்சி யேகம்பனே. (8)

கல்லாப் பிழையும் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. (9)

மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயும தேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே. (10)

வரிக்கோல வேல்விழி யாரனு ராக மயக்கிற்சென்று
சரிக்கோது வேனெழுத் தைந்துஞ் சொலேன் றமியேனுடலம்
நரிக்கோ கழுகு பரிந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ விரையெதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே. (11)

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென்கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென்றெ ணாமற் சுகமென்று நாடுமித் தூர்ப்புத்தியை
ஏதென்றெ டுத்துரைப் பேனிறை வாகச்சி யேகம்பனே. (12)

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுபெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே. (13)

சீறும் வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினாற்
பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டி லேனிறை வாகச்சி யேகம்பனே. (14)

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத்தகுங் கச்சியேகம்பனே. (15)

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்க
டுருத்திக் கறுசுவைப் போடுகின்றார் துறந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக் கொண் டேனிருந் தாயிறை வாகச்சி யேகம்பனே. (16)

பொல்லா விருளகற் றுங்கதிர் கூகையென் புட்கண்ணினுக்
கல்லா யிருந்திடு மாறொக்கு மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டா
யெல்லாம் விழிமயக்கே யிறைவா கச்சி யேகம்பனே. (17)

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பார்
தீதுக் குதவியுஞ் செய்திடுவார் தினந்தேடி யொன்று
மாதுக் கழித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டு
மேதுக் கிவர்பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே. (18)

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப் பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரஞ் செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்னகாண் கச்சி யேகம்பனே. (19)

அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பால்
தப்பின்றியே குணவேற்றுமை தான்பல சார்தலினாற்
செப்பில பக்குவம் பக்குவ மாயுள்ள சீவனிலு
மிப்படியே நிற்ப னெந்தைபிரான் கச்சி யேகம்பனே. (20)

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றின ராராய்ப் பிறந்து பின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங் கல்லாவுமென்ன
வீயா மனிதரை யேன்படைத்தாய் கச்சி யேகம்பனே, (21)

ஆற்றிற் கரைத்த புளியாக்கிடாமலென் னன்பையெல்லாம்
போற்றித் திருவுளம் பற்றுமையா புரமூன்றெரித்துக்
கூற்றைப் பணிகொளுந் தாளுடையாய் குன்ற வில்லுடையாய்
ஏற்றுக் கொடியுடையா யிறைவா கச்சி யேகம்பனே (22)

பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட் டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையான் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடை தள்ளியென் போதப் பொருள் பறிக்க
எண்ணா துனை மறந்தே னிறைவா கச்சி யேகம்பனே. (23)

நாவார வேண்டியிதழ் சொல்லுவா ருனை நான்பிரிந்தாற்
சாவே னென்றே யிருந் தொக்க வுண்பார்கள் கைதான் வரண்டாற்
போய்வாரு மென்று நடுத்தலைக்கே குட்டும் பூவையருக்
கீவார் தலைவிதியோ விறைவா கச்சி யேகம்பனே. (24)

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொடார் குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னாம நினைவிற்சற்று
மில்லா ரிருந்தென் னிறந்தென்ன காண்கச்சி யேகம்பனே. (25)

வானமு தத்தின் சுவையறி யாதவர் வண்கனியின்
றானமு தத்தின்சுவை யெண்ணல் போலத் தனித்தனியே
தேனமு தத்தின் தெளிவாய் ஞானஞ் சிறிதுமிலார்க்
கீனமு தச்சுவை நன்றல்ல வோகச்சி யேகம்பனே. (26)

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல் செய்தே
யேற்றித் திரிந்துவிட்டே னிறைவா கச்சி யேகம்பனே. (27)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால் வருந் தோடஞ் செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. (28)

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை யோலைவிளக்கி யிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக்கே செய்யும் பாவையர்மே
லிட்டத்தைநீ தவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே. (29)

பிறந்துமண் மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்து சிற்றின் பத்தின்மே மயலாகிப் புன் மாதருக்குட்
பறந்துழன்றே தடுமாறிப் பொன்றேடி யப்பாவை யர்க்கீந்
திறந்திடவோ பணித்தா யிறைவா கச்சி யேகம்பனே. (30)

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரம் புலன்களற்றுப்
பேதக் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முனற்றுக்
காதற் கரணங் களுமற்ற வானந்தக் காட்சியிலே
ஏதங் களைந்திருப் பேனிறை வாகச்சி யேகம்பனே. (31)

நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருண் ஞானமிலாப்
பொல்லாவெனைக் கொன்றுபோடும் பொழுதியல் பூசைசெபம்
சொல்லார்நற் கோயி னியமம் பலவகைத் தோத்திரமு
மெல்லா முடித்தபின் கொல்லுகண் டாய்கச்சி யேகம்பனே. (32)

சடக்கடத் துக்கிரை தேடிப் பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித் துக்கொண் டிருமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்க ளமைக்கரம் பற்றிநம
னிடக்கடிக் கும்பொழு தேதுசெய் வார்கச்சி யேகம்பனே. (33)

நாறு முடலை நரிப்பொதி சோற்றினை நான்றினமுஞ்
சோறுங் கறியு நிரப்பிய பாண்டத்தைத் தோகையர்தங்
கூறு மலமு மிரத்தமுஞ் சேருங் குழியில்விழா
தேறும் படியருள் வாயிறை வாகச்சி யேகம்பனே. (34)

சொக்கிட் டரண்மனைப் புக்குநட் டிருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பது போற்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கம நிந்தித்து வீடிச்சிக்கு
மெய்க்குப் பெருத்தவர்க் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்ன மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார் நின்னுமத்தைப் போற்றிசித்த
மருந்தா முலைபங்க ரென்னுத பாதக ரம்புவிமி
லிருந்தாவ தேதுகண் டாயிறை வாகச்சி யேகம்பனே. (36)

எல்லா மறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லா னறிந்துள னென்றுண ராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்பி
னெல்லாஞ் சிவன்செய லேயென்பர் காண்கச்சி யேகம்பனே. (37)

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவா யுருகுவர் தாரணியி
லுன்னை நினைந்திங் குனைப்பூசி யாத வுலுத்தரெல்லா
மென்னை யிருந்துகண் டாயிறை வாகச்சி யேகம்பனே. (38)

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக் குண்டரைக்காமுகரைக்
கொடும்பவ மேசெய்யு நிர்ம்மூடர் தம்மைக் குவலயத்து
ணெடும்பனை போல வளர்ந்துநல் லோர்த நெறியறியா
விடும்பரை யேன்வகுத் தாயிறை வாகச்சி யேகம்பனே. (39)

கொன்றேன நேகமுயிரை யெல்லாம்பின்பு கொன்று கொன்று
தின்றேன தன்றியுந் தீங்குசெய் தேனது தீர்கவென்றே
நின்றேநின் சந்நிதிக் கேயத னாற்குற்ற நீபொறுப்பா
யென்றே யுனைநம்பி னேனிறை வாகச்சி யேகம்பனே. (40)

கட்டளைக்கலிப்பா.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
யென்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே.

திருத்தில்லை.

காம்பிணங்கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்குந்
தாம்பிணங் கும்பல வாசையும்விட்டுத் தனித்துச் செத்துப்
போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணங் கத்துதையோ வென்செய்வேன்றில்லை சங்கரனே. (1)

சோறிடுநாடு துணிதருங் குப்பை தொண்டன்பரைக் கண்
டேறிடுங் கைக ளிறங்கிடுந் தீவினை யெப்பொழுதும்
நீறிடு மேனியர் சிற்றம் பலவர் நிருத்தங்கண்டா
லூறிடுங் கண்க ளுருகிடு நெஞ்ச மென் னுள்ளமுமே. (2)

அழலுக்குள் வெண்ணெ யெனவே யுருகிப் பொன் னம்பலத்தா
ணிழலுக்கு நின்று தவமுஞற்று மனிட்டேர மின்னார்
குழலுக்கிசைந்த வகைமாலை கொண்டு குற்றேவல் செய்து
விழலுக்கு முத்துலை யிட்டிறைத்தே னென் விதிவசமே. (3)

ஓடாமற் பாழுக் குழையாம லோர முறைப்ப வர்பாற்
கூடாம னல்லவர் கூட்டம் விடாமல் வேங்கோப நெஞ்சி

னாடாம னன்மை வழுவாம லின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. (4)

பாராம லேற்பவற் கில்லையென் னாமற் பழுதா சொல்லி
வாராமற் பாவங்கள் வந்தணுகாமல் மனமயர்ந்து
பேராமற் சேவை பிரியாம லன்பு பெறுதவரைச்
சேராமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. (5)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொன்னதைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. (6)

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்ப தல்லாற் பொன்னி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவா ரில்லையே. (7)

காலையுபாதி மலசலமா மன்றிக் கட்டுச்சியிற்
சாலவு பாதி பசிதாக மாகுமுற் சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
யால முகுந்தரு ளம்பல வாவென்னை யாண்டருளே. (8)

ஆயும் புகழ்த்தில்லை யம்பல வாண ரருகிற் சென்றாற்
பாயு மிடபங் கடிக்கு மரவம்பின் பற்றிச்சென்றாற்
பேயுங் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்றொடரும்
போயென் செய்வாய் மனமே பிணக்காடவர் போமிடமே. (9)

ஓடு மெடுத்தத ளாடையுஞ் சுற்றி யுலாவிமெள்ள
வீடுக டோறும் பலிவாங்கியே விதி யற்லவர்போ
லாடுமருட் கொண்டிங் கம்பலத் தேசிற்கு மாண்டிதன்னைத்
தேடுங் கணக்கென்னகாண் சிவகாம சவுந்தரியே, (10)

ஊட்டு விப்பானு முறக்குவிப்பானு மிங்கொன்றோ டொன்றை
மூட்டுவிப் பானு முயங்கு விப்பானு முயன்றவினை
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின் வழி
யாட்டுவிப் பானு மொருவ னுண்டே தில்லை யம்பலத்தே. (11)

அடியார்க் கெளியவ ரம்பல வாண ரடிபணிந்தால்
மடியாமற் செல்வ வரம்பெற லாம் வையமே ழளந்த

நெடியோனும் வேதனுங் காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே. (12)

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பி விட்டாற்
பொய்வைத்த சொப்பனமா மன்னர் வாழ்வும் புவியு மெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம் மேடை யெங்கே
கைவைத்த நாடக சாலையெங்கே யிது கண்மயக்கே. (13)

உடுப்பானும் பாலன்ன முன்பானு முய்வித் தொருவர் தம்மைக்
கெடுப்பானுமே தென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந் தேகியென் றேற்பானு மேற்கக் கொடாம நின்று
தடுப்பானு நீயல்லையோ தில்லையானந்தத் தாண்டவனே. (14)

வித்தாரம் பேசினுஞ் சோங்கேறி னுங்கம்ப மீதிருந்து
தத்தாவென் றோதிப் பவுரிகொண் டாடினுந் தம்முன் றம்பி
யொத்தாசை பேசினு மாவதுண் டோதில்லை யுண்ணிறைந்த
கத்தாவின் சொற்படி யல்லாது வேறில்லை கன்மங்களே. (15)

பிறவா திருக்க வரந்தரல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவா திருக்க மருந்துண்டு காணிஃ தெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே. (16)

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞான கரனைப் புராந்தகனை
யவியா விளக்கையென் னம்பலத் தாடியை யைந்தெழுத்தாற்
செவியாம னீசெவித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே. (17)

நாலின் மறைப்பொரு ளம்பல வாணரை நம்பியவர்
பாலி லொருதரஞ் சேவிக்கொ ணாதிருப் பார்கருங்கள்
மேலி லெடுத்தவர் கைவிலங் கைத்தைப்பர் மீண்டுமொரு
காலினு றுத்துவர் கிட்டியுந் தாம்வந்து கட்டுவரே. (18)

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப்
போற்றாத வர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்று
யேற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே. (19)

அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மை சிவகாம சுந்தரி நேசனையெங்

கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்க
ளெத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றதே. (20)

திருச்செங்காடு.

நெருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே
யிருப்பார் திருவுள மெப்படி யோவின்ன மென்னையன்னை
கருப்பா சயக்குழிக் கேதள்ளு மோகண்ணன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி யாது சிவன்செயலே. (1)

திருவொற்றியூர்.

ஐயந் தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோதொன் று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. (1)

சுடப்படு வாரறி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படு மாமதிற் றென்னொற்றி யூரன் றெருப்பரப்பி
னடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே. (2)

திருவிடைமருதூர்.

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுத்தி
யோடே யெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்கு விண்ணோர்
நாடே யிடைமரு தீசற்கு நல்லன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே. (1)

தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகையிச் செகமும்பகை
ஆயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினாற்
றேயுநெஞ் சேமரு தீசர்பொற் பாதஞ் சுதந்தரமே. (2)

திருக்கழுக்குன்றம்.

காடோ செடியோ கடற்புற மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு வோநல மேசெறிந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பதமே. (1)

திருக்காளத்தி.

பத்தும் புகுந்துப் பிறந்துவ ளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே. (1)

பொன்னாற் ப்ரயோசனம் பொன்படைத் தாற்குண்டப் பொன்படைத்தோன், றன்னாற் ப்ரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மையைப்போ, லுன்னாற் ப்ரயோசனம் வேணதெல்லாமுண் டுனைப்பணிபு, மென்னாற் ப்ரயோசன மேதுண்டு காளத்தி யீச்சுரனே.

வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கமல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல னினிச்சென்
றுளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பருக்கே. (3)

முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போ திளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக் கப்பட வும்மமைத் தாயையனே
யெப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீச்சுரனே. (4)

இரைக்கே யிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்துமின்னு
ரரைக்கே யவலக் குழியருகே யசும் பார்ந்தொழுகும்
புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள் பொன்முகலிக்
கரைக்கே கல்லால நிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே. (5)

நாறுங் குருதிச் சலதாரை தோற்புரை நாடொறுஞ்சீ
யூறு மலக்குழி காமத் துவார மொளித்திடும்புண்
டேறுந் தசைப்பிளப் பந்தரங் கத்துள சிற்றின்பம்விட்
டேறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீச்சுரனே. (6)

திருக்கைலாயம்.

கான்சாயும் வெள்ளி மலைக்கர சேசின் கழனம்பினே
னூன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய்கட வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாய வளைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே. (1)

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்து தின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்

சொல்லும் பொருளு மிழந்து சுகாநந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே. (2)

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையாமையு மற்று நிர்ச்சிந்தனையத்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. (3)

கையார வேற்றுநின் றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்துநின் சந்நிதிக் கேவந்து சந்ததமு
மெய்யார நிற்பணிக் துள்ளே யுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவென் றோல மிடுவதென் றோகயி லாயத்தனே. (4)

நீரூர்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேருய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாருத் தியானமுற் றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராருய்ப் பெருகக் கிடப்பதென் றோகயி லாயத்தனே. (5)

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்கிட வேகாந்தமா யெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. (6)

மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ்சிந்தையை யானென்செய்வேனெனைத்தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத்த னேகயி லாயத்தனே. (7)

வருந்தேன் பிறந்து மிறந்து மயக்கும் புலன்வழியேயாய்ப்
பொருந்தே னரகிற் புகுகின்றி லேன்புகழ் வாரிடத்தி
லிருந்தே னினியவர் கூட்டம்வி டேனிய லஞ்செழுத்தா
மருந்தே னருந்துவ னின்னரு ளாற்கயி லாயத்தனே. (8)

மதுரை.

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேயலையக்
கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே. (1)

பொது.

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கோ
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர் தந்த
வோடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்குசெல்வம்
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
யீடு நமக்குச் சொலவோ வொருவரு மிங்கில்லையே. (2)

நாடிக்கொண் டீசனை நாட்டமுற் றாயிலை நாதரடி
தேடிக்கொண் டாடித் தெளிந்தா யிலைசெக மாயைவந்து
மூடிக்கொண் டோமென்றுக் காமாயுதங்கண் முனிந்தவென்று
பீடிப்பை யோநெஞ்ச மேயுனைப் போலிலைப் பித்தர்களே. (3)

கையொன்று செய்யவிழி யொன்றுநாடக் கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே. (4)

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையா
லெண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானுடமே. (5)

சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச் சுருதியினும்
அல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாழ்ந்து விட்டோ
ரில்லினு மன்ப ரிடத்தினு மீசனிருக்குமிடங்
கல்லினுஞ் செம்பினு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே. (6)

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற்
றினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கி நெறியினின்றா
னுனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரோ. (7)

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழ லாள்கையின் முன்கொடுத்துக்

கட்டி யிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப் பிரியவென் றேவிங்ங னேசிவன் மீண்டதுவே· (8)

சூதற்ற கொங்கையு மாணர் கலவியுஞ் சூழ்பொருளும்
போதற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தாற்
றீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத் தந்துவிட் டானென்றன் கைதனிலே. (9)

வாதுற்ற திண்புய ரண்ணு மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற் றெப்போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்திற்
றீதுற்ற செல்வமென் றேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. (10)

வேதத்தி னுட்பொருண் மண்ணுசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை யோசெய்த புண்ணியத்தா
லாதித்தன் சந்திரன் போலே வெளிச்சம தாம்பொழுது
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. (11)

மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின்மட்டே
யினமான சுற்ற மயானமட்டே வழிக்கேது துணை
தினையா மள வெள்ளள வாகினு முன்பு செய்த தவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே. (12)

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி யிரு
கைத்தலமேல் வைத்தழு மைந்தருஞ் சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே. (13)

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடைபொன் றில்லாத போது பகலிரவா
யீயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகல்
மாயு மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே. (14)

சீதப் பனிக்குண்டு சிக்கென கந்தை தினம்பசித்தால்
நீதுய்யச் சோறு மனைதோறு முண்டு நினைவெழுந்தால்
வீதிக்கு நல்ல விலைமாதருண் டிந்த மேதினியி
லேதுக்கு நீசலித்தாய் மனமே யென்றும் புண்படவே. (15)

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்த

மாறுண் டுலாவி மயங்கு நெஞ்சே மனைதோறுஞ் சென்று
சோறுண்டு தூங்கிப் பின் சும்மா விருக்கச் சுகமுண்டே. (16)

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொடுங்கி வந்தாற்
றடுக்கப் பழைய வொரு வேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப் புறத்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்து வந்தாற்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே. (17)

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வ தெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட் டோமினிக் கேண்மனமே
யோடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே (18)

மாத்தா னவத்தையு மாயா புரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்த னன்புகொண்டு
வேத்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர் பற்றற்றவரே. (19)

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வ மெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிருமனமே யுனக்கே யுபதேசமிதே. (20)

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்பு பொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே. (21)

என்செயலாவ தியாதொன்று மில்லை யினித் தெய்வமே
யுன்செயலே யென் றுணரப் பெற்றே னிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்து மூண்டதுவே. (22)

திருவேட மாகித் தெருவிற் பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகிப் பிச்சை பகருமென் றனைப் பதம் பணிந்தேன்
கருவாகு மேதக் கடற்கரைமேகக் கருது மென்னை
யுருவாக்கிக் கொள்ள வல்லோ விங்ஙனே சிவ னுற்றதுவே. (23)

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவரை கேட்டுமிரேன் மெய்க் கெடாதநிலை

தொட்டேன் சுகதுக்கது மற்றுவிட்டேன் றெல்லைநான் மறைக்கு
மெட்டா னெனும்பர மென்னிடத்தே வந்திங் கெய்தியதே. (24)

அட்டாங்க யோகமு மாதாரமாறு மவத்தை யைந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. (25)

எறியெனக் கெனும் புழுவோ வெனக்கெனு மிந்த மண்ணுஞ்
சரியெனக் கெனும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக்கெனும் புன்னு யெனக்கெனு மிந் நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தே னிதனு லென்ன பேறெனக்கே. (26)

அண்ணறன் வீதி யரசிருப் பாகு மணிபடையோர்
நண்ணொருநா ளொன்பதா மவரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணென் பசிக்கு மடைப்பள்ளி யான சுகமு மெல்லா
மெண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே. (27)

என்பெற்ற தாயாரு மென்னைப் பிணமென் றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பி விட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தா
ருன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே. (28)

கறையற்ற பல்லுங் கரித்துணி யாடையுங் கன்னமின்றிப்
பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாத வூணும் புறந்திண்ணையுந்
தறையிற் கிடப்பு மிரந்துண்ணு மோடுஞ் சுகமறியக்
குறைவற்ற செல்வமென் றேகோல மாமறை கூப்பிடுமே. (29)

எட்டுத் திசையும் பதினறு கோணமு மெங்கு மொன்ருய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டி கக்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப்பகலை யிரவென்று கூறிடும் பாதகரே. (30)

வாய்நாறு மூழன் மயிர்ச்சிக்கு நாறிடு மையிடுங்கண்
பீநாறு மங்கம் பிணவெடி நாறும் பெருங்குழி வாய்ச்
சீநாறும் யோனி யழனு றுமிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறு மங்கையர்க் கோவிங்ஙனேமனம் பற்றியதே. (31)

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு தெருக்குப்பையிற்

றரிக்கக் கரித்துணி யாடையு முண்டெந்தச் சாதியிலு
மிரக்கத்துணிந்து கொண்டேன்குறைவேது மெனக்கில்லையே. (32)

ஏதப்பட் டாயினி மேற்படும் பாட்டையி தென்றறிந்து
போதப்பட்டா யில்லை நல்லோரிடஞ் சென்று புல்லறிவால்
வாதைப்பட்டாய் மடமாதர் கலவி மயக்கத்திலே
பேதைப் பட்டாய் நெஞ்சமே யுனைப்போ லிலை பித்தர்களே. (33)

சுரப்பற்று வல்வினை சுற்றமு மற்றுத் தொழில்க ளற்று
கரப்பற்று மங்கையர் கையிணக் கற்றுக் கவலை யற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற் றிருப்பி தன்றோ பரமா னந்தமே. (34)

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சை யெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்று நன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்
சேய்போ லிருப்பர்கண்டீ ருண்மை ஞானந் தெளிந்தவரே. (25)

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீணனிட்ட
முடக்கே புழுவந் துறையிடமே நல மூற்றுமிலாச்
சடக்கே கருவி தளர்ந்து விட்டாற் பெற்ற தாயுந் தொடாத்
தொடக்கே யுனைச்சுமந்தே னின்னினே து சுகமெனக்கே. (36)

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையும் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப் படிவருமோ சலியாதிரென் னேழை நெஞ்சே. (37)

செல்வரைப் பின்சென் றுபசாரம் பேசித் தினந் தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்குநல் லேகாந்தமா யெனக்கா மிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனுல நீழ லரும்பொருளே. (38)

ஊரீ ருமக்கோ ருபதேசங் கேளு முடம்படங்கப்
போரீர் சமனைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
ஏரி ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே. (39)

நீற்றைப் புனைந்தென்ன நீராட்டப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தா யில்லை மாமறைநூ

லேற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டா
யாற்றிற் கிடந்துந் துறையறி யாம லலைகின்றையே. (40)

ஓங்கார மாய்நின்ற வத்துவிலே யொரு வித்து வந்து
பாங்காய் முளைத்த பயனறிந்தாற் பதினா லுலகு
நீங்காம னீங்கி நிறையா நிறைந்து நிறையுருவா
யாங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே. (41)

விதியார் படைப்பு மரியா ரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பு நண்பா லணுகாது பராநந்தமே
கதியாகக் கொண்டு மற்றெல்லாந் துயிலிற் கனவெனநீ
மதியாதிரு மனமே யிதுகாணன் மருந்துனக்கே. (42)

நாய்க்குண்டு தொண்டு நமக்குண்டு பிச்சை நமனை வெல்ல
வாய்க்குண்டு மந்திரம் பஞ்சாட்சர மதியாமல் வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னரு ணோக்கங்க ணோக்குதற்கே. (43)

நேமங்க ளிட்டைகள் வேதங்க ளாகம நீதிநெறி
யோமங்க டர்ப்பணஞ் சந்தி செப மந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்க டோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே. (44)

நானெத்தனை புத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே
ஏனிப்படிக் கெட் டுழலுகின்றா யினி யேதுமிலா
வானத்தின் மீனுக்கு வன்றூண்டி லிட்ட வகையதுபோற்
போனத்தை மீள நினைக்கின்றனை யென்ன புத்தியிதே. (45)

அஞ்சக்கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக்களை பறித்தேன் வளர்த்தேன் சிவ யோகத்தையே. (46)

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ளீயாரு நானாரெனப் பகர்வா ரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வரே கொண்ட நோயுமொரு
பாயாருநீயு மல்லாற் பின்னையேது நட்பாமுடலே. (47)

ஆயும் பொழுது மயிர்க்கால்க டோறு மருங்கிருமி
தோயு மலக்குட்டை யாகிய காயத்தைச் சுட்டுவிட்டாற்

பேயு நடனமிடுங் கடமாமென்று பேசுவதை
நீயு மறிந்திலையோ பொருடேட நினைந்தனையே. (48)

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்ல நற்காட்சிக் கல்ல
சேணுங் கடந்த சிவ னடிக்கல்ல வென் சிந்தை கெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே. (49)

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடித்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசை யன்றோ குருநாதன் மொழிந்ததுவே. (50)

எருமுட்டை பிட்கி லுதிர்ந்திடுஞ் செல்லுக் கெவரழுவார்
கருமுட்டைப் புக்குக் கழலகன்றாய் கன துக்கமதாய்ப்
பெருமுட்டுப் பட்டவர் போலழும் பேதையிர் பேத்துகிறீ
ரொருமுட்டும் வீட்டு மரணும மென்றைக்கு மோதுமினே. (51)

மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ் செந்தீ
யையாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே. ()

ஆபாய்ப் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற்
போயாகிலு முண்மையைத் தெரிந்தா யில்லை பூதலத்தில்
வேயார்ந்த தோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கி ன்றனை மனமே யென்ன பித்துனக்கே. (53)

அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ பங்கயன் வகுத்த
குடியான சுற்றமுந் தாரமுந் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சாந்திலரே. (54)

ஆங்காரப் பொக்கசங் கோபக்களஞ்சிய மாணவந்தா
னீங்கா வரண்மனை பொய்வைத்த கூடம்பின் னீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவி லாசமித் தேகங்கந்தல்
புரங்கா யுனைப்பணிக் தெப்படி ஞானம் பலிப்பதுவே. (55)

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்ற நெஞ்சே
அழியாப் பதவிக் கவுடதங் கேட்டிய ஞதியனை

வழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்தி னுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மியழு நன்மை வேண்டு மென்றே. (56)

நாய்க்கொரு சூலு மதற்கோர் மருந்துமிந் நாட்டிலுண்டோ
பேய்க்கொரு ஞானம் பிடிபடுமோ பெருங்காஞ் சிரங்கா
யாக்குவ ரார தருந்துவரா ரதுபோ லுடம்பு
தீக்கிரையாவ தல்லா லேதுக்கா மிதைச் செப்புமினே. (57)

கச்சிற் கிடக்குங் கனதனத்திற் கடைக் கண்கள் பட்டே
இச்சித் திருக்கின்ற வேழை நெஞ்சே யிமவான் பயந்த
பச்சைப் பசுங்கொடி யுண்ணு முலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமனமே யொருகாலுந் தவறில்லையே. (58)

மாணூர் விழியைக் கடந்தெறி வந்தனன் வாழ்குருவுங்
கோணுகி யென்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும்பே றிருந்தாலு நற்பே றிது பொய்யன்றுகா
ணானாலு மிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே. (59)

சற்றுகிலுந் தன்னைத் தானறி யாய்தனை யாய்ந்தவரை
யுற்றுகிலு முரைக் கப்பொருந் தாயுனக் கானதில்லை
பற்றுய் குருவைப் பணியாய் பரத்தையர் பாலிற் சென்றென்
பெற்றாய்மட நெஞ்சமே யுனைப்போ லில்லை பித்தனுமே. (60)

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலே னுயர் பொன்னெனவே
யொளியிட்டதா ளிரண்டுள்ளே யிருத்துவ தன்மை யென்று
வெளியிட் டடைத்து வைத்தே னினிமே லொன்றும் வேண்டிலனே.

திருச்சிற்றம்பலம்.

தாயாருக்குத் தகனகிரியை செய்கையிற்,

பாடியவெண்பா.

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலைத் தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி. (1)

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன். (2)

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபகலாச் சிவனை யாதரித்துத்-தொந்திச்
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
வெரியத் தழன் மூட்டுவேன். (3)

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே-யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன். (4)

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசை யிட்டுப் பார்த்து மகிழாமல்-லுருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யென வழைத்த வாய்க்கு. (5)

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்-மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யென வழைத்த வாய்க்கு. (6)

விருத்தம்.

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையி
லன்னை யிட்டதீ யடி வயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே. (7)

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ-மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. (8)

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ-சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய். (9)

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறானாள்-பாற்றெளிக்க
வெல்லோரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம். (10)

இடைமருது.

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக் கென்கோவே-நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து. (11)

ஒற்றியூர்.

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதா
மண்டைத்தைப் போல வழகியதாந்-தொண்ட
ருடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு. (12)

ஓடவிழுந்து சிப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்-கடுவருந்துந்
தேவாதி தேவன் றிருவொற்றி யூர் தெருவிற்
போவா ரடியிற் பொடி. (13)

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாம் கணநாதர்-பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த் தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர். (14)

திருவாரூர்.

ஆரூ ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றாரூர்க ளோடு முயலுவூர்-நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீத் தேடுவீர். (15)

எருவாய்க் கிருவிரன்மே லேறுபுழுக் கூட்டுக்
கருவாய்க்சோ கண்கலக்கப் பட்டாய்த்-திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடந்தாயே
நீரோடுந் தாரைக்கே நீ. (16)

திருக்காஞ்சி.

எத்தனையூ ரெத்தனை வீ டெத்தனை தாய் பெற்றவர்க
ளெத்தனைபே ரிட்டழைக்க வேனென்றே-னித்த
மெனக்குக் களையாற்று மேகம்பா கம்பா
வுனக்குத் திருவிளை யாட்டோ. (17)

கச்சிக்கா ரோணம்.

அத்தி முதலெறும்பீ ராருவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா-மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
யிசிக்குதையா காரோணரே. (18)

திருக்காளத்தி.

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரே யென்று யறஞ்செய்யாய்-வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத் தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு. (19)

திருவிருப்பையூர்.

மாதா வுடல் சலித்தாள் வல்வினையேன் கால்கடுத்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பியில் வாராமற் கா. (20)

திருவையாறு.

மண்ணுந் தனலாற வானும்புகையாற
வெண்ணரிய தாயு மிளைப்பாறப்-பண்ணுமயன்

கையாற்வு மடியேன் காலாறவுங் கண்பா
ரையா திருவையாறு. (21)

திருக்குற்றலம்.

காலன் வருமுன்னே கண்பஞ்ச டைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல் விழுந்தே
உற்று ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றலத் தானையே கூறு. (22)

திருவெண்காட்டுத் திருவிசைப்பா.

பூதமுங் கரணம் பொறிகளோம் புலனும் பொரிந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்கு நாளுளதோ, வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மநோலய வின்பசாகரமே, ஏதுமொன் றறியேன் யாதுநின்செயலோ யிறைவனே யேகநாயகனே. (23)

யாவரே யிருந்தும் யாவரே வாழ்ந்தும் யாவரே யெமக்குற வாயுந் தேவரீ ரல்லாற் றிசைமுக மெனக்குத் திருவுளமறியவே றுளதோ பாலவ னொருவன் செந்தமிழ்க் கிரங்கிப் பரவையா ருடலை மாற்ற ஏவலா ளாகி யிரவெலா முழன்ற விறைவனே யேகநா யகனே. ()

உண்டதே யுண்டு முடுத்ததே யுடுத்து மடுத்தடுத் துரைத்ததே யுரைத்துங், கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங் கழிந்தன கடவுளு லெல்லாம், விண்டதா மரைமேலன்னம் வீற்றிருக்கும் விழவறு வீதிவெண் காடா அண்டரே போற்ற வம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே. (25)

பொது.

சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே - நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண். (26)

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு - நாடிநீ
யென்னை நினைத்தா லிடுப்பி னுதைப்பேனு
னுன்னை நினைத்தா லுதை. (27)

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே-யாசைதனைப்
பட்டிறந்த காலமெலாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல். (28)

நச்சரவம் பூண்டானை நன்றாத் தொழுவதுவு
மிச்சையிலே தானங் கிருப்பதுவும் - பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம். (29)

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்க முடன் கொண்டுவந்தா லுண்பேன் - பெருக்க
வழைத்தாலும் போகே னரனேயென் றேக
மிளைத்தாலும் போகே னினி. (30)

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னே னிதுவே சுகம். (31)

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே - மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. (32)

பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பை நம்பி யிருப்பரோ நெஞ்சகமே
வைப்பிருக்க வாயின் மணியிருக்கச் - சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கட்டக் கண்டு. (33)

மேலு மிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந் திலையே சிந்தையே - கால்கைக்குக்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப் பட்டவுடல்
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு. (34)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே - வன்கழுக்க

டத்தித்தத் திச்சம்டைத் தட்டிக்கட் டிப்புட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு. (35)

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை - முன்ன
மெரிந்தகட்டை மீதி லிணைக்கோ வணத்தை
யுரிந்துருட்டிப் போட்டது கண்டு. (36)

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங் - கடைச்சங்க
மாம்போ தனவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம். (37)

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ - வித்தகனார்
காலைப் பிடித்து மெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே. (38)

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீ - ரெச்சிறனை
யுய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்திரகி ராமயமா மே. (39)

எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிழ் - நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய். (40)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே - பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான். (41)

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே - வித்தகமாய்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான். (42)

மாலைப் பொழுதினறு மஞ்சளரைத் தேகுளித்து
வேலை யினக்கிட்டு விழித்திருந்து - சூலாகிப்
பெற்ருள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தாறு லென்செய்வாள் பின். (43)

திருச்சிற்றம்பலம்.

சிலர் வேண்டுகோளால் ஓர் கலியாண வீட்டிற்சென்று
தம்பதிகளைப் பார்த்து பாடிய

திருவிருத்தம்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்கப் பொய்யுரைத்துப் புற்றீசற் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வழியறிவீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மறத்துளையிற் காலுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட் டீரே.

திருச்சிற்றம்பலம்.

உடற்கூற்று வண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

தனதன தான தனதன தான
தந்தன தந்தன தந்தன தந்தன
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த—
தந்ததன தான தன தானனு.

ஒருமட மாது மொருவனு மாகி
யின்ப சுகந்தரு மன்பு பொருந்தி
யுணர்வு கலங்கி யொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்து—
பனியிலோர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்துபு குந்துதி ரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய் வாய்செவி கால்கைக ளென்ற—
உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்றுநி றைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து—
ஒளிநகை யூற லிதழ்மட வாரும்
வந்துமு கந்திட வந்து தவழ்ந்து
மூடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு வோவென நாமம் விளம்ப—
உடைமணி யாடை யரைவட மாட
வுண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து—
அஞ்சு வயதாகி விளை யாடியே. (வ)

உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னறுபி ராயமும் வந்து—
மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொ னிலங்கு பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க—
மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டும ருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு—
மனது பொறுமலவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி—
ஒருமுத லாகி முதுபொரு ளாயி
ருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து—
வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்களி ருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோத மடைந்து—
செங்கை யினி லோர்தடியு மாகியே (௨)

வருவது போவ தொருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமன் மொழிந்து—

துயில்வரு நேர மிருமல் பொறுது
  தொண்டையு நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
  தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு—
கலியுக மீதி லிவர்மரி யாதை
  கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
  கால்வழி மேல்வழி சார நடந்து—
தெளிவு மிராம துரைதடு மாறி
  சிந்தையு நெஞ்சு முலைந்து மருண்டு
திடமு மலைந்து மிகவு மலைந்து
  தேறிந லாதர வேதெனு நொந்து—
மறையவன் வேத னெழுதிய வாறு
  வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
  மேதினி வாழ்வினி லாதினி நின்ற—
கடன்முறை பேசு மெனவுரை நாவு
  றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
  பூதமு நாலுசு வாசமு நின்று—
    நெஞ்சு தடுமாறி வரு நேரமே. (ஞ)

வளர்பிறை போல வெயிறு முரோம
  முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனது மிரண்ட வடிவு மிலங்க
  மாமலை போல்யம தூதர்கள் வந்து—
வலைகொடு வீசி யுயிர்கொடு போக
  மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியுல் விழுந்து மனைவி புலம்ப
  மாழ்கினரே யிவர் கால மறிந்து—

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்த
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று—

பலரையு மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகி லுறுங்கல் களப மணிந்து
பாவகமே செய்து நாறு முடம்பை—

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து—

விறகிடை மூடி யழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி
யோர் பிடிநீறு மிலாத வுடம்பை—
நம்புமடி யேனை யினி யாளுமே. (க)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருவெண்காடரென்கிற

பட்டணத்துப் பிள்ளையார்

முதல்வன் முறையீடு.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மூலமறியேன் முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர் நாடநடக்குதடா. 1

அறியாமையாமலத்தா லறிவுமுதற்கெட்டனடா
பிரியாவினைப்பயனாற் பித்துப்பிடித்தனடா, 2

தனுவாதியநான்குந் தானாய்மயங்கினண்டா
மனுவாதிசத்தி வலையிலகப்பட்டனடா. 3

மாமாயையென்னும் வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந் தாதுகலங்கிறண்டா. 4

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மண்ணாசைபட்டேனை மண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசை போகேனேயென்குதே. 5

மக்கள்சுற்றத்தாசை மறக்கேனேயென்குதே
திக்கரசாமாசையது தீரேனேயென்குதே. 6

வித்தைகற்குமாசையது விட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசை சிதையேனேயென்குதே. 7

மந்திரத்திலாசை மறக்கேனேயென்குதே
சுந்திரத்திலாசை துறக்கேனேயென்குதே. 8

கட்டுவர்க்கத்தாசை கழலேனேயென்குதே
செட்டுதனிலாசை சிதையேனேயென்குதே. 9

மாற்றுஞ்சலவை மறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னுந் தூரேனேயென்குதே. 10

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

ஐந்துபுலனு மடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந் தேறேனேயென்குதே. 11

காமக்குரோதங் கடக்கேனேயென்குதே
நாமேயரசென்று நாடோறுமெண்ணுதே. 12

அச்சமாங்கார மடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங் கழலேனேயென்குதே. 13

நீர்க்குமிழியாமுடலை நித்தியமாயெண்ணுதே
ஆர்க்குமுயராசை யழியேனேயென்குதே. 14

கண்ணுக்குக்கண்ணெதிரே கட்டையில்வேகக்கண்டு
எண்ணுந்திரமா யிருப்போமென்றெண்ணுதே 15

அநித்தியத்தைநித்தியமென் றுதரவாயெண்ணுதே
தனித்திருக்கேனென்குதே தனைமறக்கேனென்குதே. 16

நரகக்குழியுமின்னு நான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்குல் லுனைக்கெடுப்பேனென்குதே. 17

குரும்பைமுலையுங் குடிகெடுப்பேனென்குதே
அரும்புவிறியுமெந்த னாவியுன்பேனென்குதே. 18

மாதருருக்கொண்டு மறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங் கரக்காயுருகிறண்டா. 19

க்ந்தனையீன்றருளுங் கன்னிவனநாதா
எந்தவிதத்தினா னேறிப்படருவண்டா. 20

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

புல்லாகிப்பூண்டாய்ப் புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க் கழிந்தநாள்போதாதோ. 21

கிரியாய்க்கிடமாய்க் கெட்டநாள்போதாதோ
நீரியாயூர்வனவாய் நின்றநாள்போதாதோ. 22

பூதமொடுதேவருமாய்ப் போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய் வீழ்ந்தநாள்போதாதோ. 23

அன்னைவயிற்றி லழிந்தநாள்போதாதோ
மன்னவனுய்வாழ்ந்து மரித்தநாள்போதாதோ. 24

தாயாகித்தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதே
சேயாய்ப்புருடனுமாய்ச் சென்றநாள்போதாதோ. 25

நோயுண்ணவேமெலிந்து நொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப் பிறந்தநாள்போதாதோ. 26

ஊனவுடல்கூன்குருடா யுற்றநாள்போதாதோ
ஈனப்பொசிப்பி லிளைத்தநாள்போதாதோ. 27

பட்டகளையும் பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டனென்று கேளாதும்போதாதோ. 28

நில்லாமைக்கேயழுது நின்றநாள்போதாதோ
எல்லாருமென்பார மெடுத்தநாள்போதாதோ. 39

காமன்கணையாற் கடைபட்டல்போதாதோ
ஏமன்கரத்தா லிடியுண்டல்போதாதோ. 30

நான்முகன்பட்டோலைநறுக்குண்டல்போதாதோ
தேன்றுளத்தானேமி தேக்குண்டல்போதாதோ. 31

உருத்திரனூர்சங்காரத் துற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலை வாவென்றழைத்தயிலை. 32

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

பிறப்பைத்தவிர்த்தையிலை பின்னாகக்கொண்டையிலை
இறப்பைத்தவிர்த்தையிலை யேன்னென்றுகேட்டயிலை. 33

பாசமெரித்தையிலை பரதவிப்பைத்தீர்த்தேயிலை
பூசியநீற்றைப் புனையென்றளித்தையிலை. 34

அடிமையென்றுசொன்னயிலை யக்குமணிதந்தையிலை
விடுமுலகம்போக்கியுன்றன் வேடமளித்தயிலை. 35

உன்னிலழைத்தையிலை யொன்ருகிக்கொண்டையிலை
நின்னடியார்கூட்டத்தி னீயத்ழைத்துவைத்தயிலை 36

ஓங்குபரத்து ளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியா னெமக்கென்றுரைத்தையிலை. 37

நாமந்தரித்தையிலை நானொழியநின்றையிலை
சேமவருளிலென்னைச் சிந்தித்தழைத்தையிலை. 38

முத்தியளித்தையிலை மோனங்கொடுத்தையிலை
சித்தியளித்தையிலை சீராட்டிக்கொண்டையிலை 39

தவிப்பைத்தவிர்த்தையிலை தானாக்கிக்கொண்டையிலை
அவிப்பரியத்தீயாமென் னாசைத்தவிர்த்தையிலை. 40

நின்றநிலையி னிறுத்தியென்னைவைத்தையிலை
துன்னுங்கரணமொடு தொக்கழியப்பார்த்தையிலை 41

கண்டவுலகக்காட்சிக் கட்டொழியப்பார்த்தையிலை
நிட்டையிலேநில்லென்று நீநிறுத்திக்கொண்டையிலை. 42

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கடைக்கணருள்தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக் கிட்டிவரப்பாரேடா. 43

காதல்தணியேனோ கண்டுமகிழேனோ
சாதல்தவிரேனோ சங்கடந்தான்தீரேனோ. 44

உன்னைத்துதியேனோ வூர்நாடிவாரேனோ
பொன்னடியைப்பாரேனோ பூரித்துநில்லேனோ. 45

ஓங்காரப்பொற்சிலம்பி னுல்லாசம்பாரேனோ
பாங்கான தண்டை பலபணியும்பாரேனோ. 46

வீரகண்டாமணியின் வெற்றிதனைப்பாரேனோ
சூரர்கண்டுபோற்றுமந்தச் சுந்தரத்தைப்பாரேனோ. 47

இடையில்புலித்தோ லிருந்தகலம்பாரேனோ
விடையிலெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனோ. 48

ஆனையுரிபோத்த வழகுதனைப்பாரேனோ
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனோ. 49

மாண்டார்தலைப்பூண்ட மார்பழகைப்பாரேனோ
ஆண்டார்நமக்கென் றறைந்துதிரியேனோ. 50

கண்டங்கருத்துநின்ற காரணத்தைப்பாரேனோ
தொண்டர்குழாவிநின்ற தோற்றமதைப்பாரேனோ. 51

அருள்பழுத்தமாமதியா மாநந்தத்தைப்பாரேனோ
திருநயனச்சடையொளிருஞ் செழுங்கொழுமைப்பாரேனோ. 52

செங்குமினின்றண்டம்வளர் சிங்காரப்பாரேனோ
அங்கனியைவென்ற வதரத்தைப்பாரேனோ. 53

முல்லைநிலவெறிக்கு மூரலொளிபாரேனோ
அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனோ. 54

மகரங்கிடந்தொளிரும் வண்மைதனைப்பாரேனோ
சிகரமுடியழகுஞ் செஞ்சடையும்பாரேனோ 55

கங்கையொடுதிங்கணின்ற காட்சிதனைப்பாரேனோ
பொங்கரமைத்தான்சடையில் பூண்டவிதம்பாரேனோ. 56

சரக்கொன்றைபூத்த சடங்காட்டைப்பாரேனோ
எருக்கறுகூமத்தையணி யேகாந்தம்பாரேனோ. 57

கொக்கிறகுசூடிநின்ற கொண்டாட்டம்பாரேனோ
அக்கினியையேந்திநின்ற வானந்தம்பாரேனோ. 58

தூக்கியகாலுந் துடிபடியும்பாரேனோ
தாக்குமுயலவன்மேற் றுண்டவத்தைப்பாரேனோ 59

வீசுகரமும் விகசிதமும்பாரேனோ
ஆசையளிக்கு மபயகரம்பாரேனோ. 60

அரிபிரமர்போற்ற வமரர்சயசயெனப்
பெரியம்மைபாகம்வளர் பேரழகைப்பாரேனோ. 61

சுந்தரநீற்றின் சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனைத் தயவுசெய்தல்பாரேனோ. 62

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கெட்டநாள்கெட்டாலுங் கிருபையினிப்பாரேடா
பட்டநாள்பட்டாலும் பதமெனக்குக்கிட்டாதோ. 63

நற்பருவமாக்குமந்த நாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்ற வேதாந்தங்கிட்டாதோ. 64

வாக்கிறந்துநின்ற மவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுத்திகிட்டாதோ. 65

வெந்துயரைத்தீர்க்குமந்த வெட்டவெளிகிட்டாதோ
சிந்தையையுந்தீர்க்குமந்தத் தேறலதுகிட்டாதோ. 66

ஆனவடியார்க் கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னை யுணர்த்துவித்தல்கிட்டாதோ. 67

என்னென்றுசொல்லுவண்டா வென்குருவேகேளடா
பின்னையெங்கு நீயல்லாற்பிறிதில்லையே. 68

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

அன்னவிகாரமது வற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிகாரந் தொலைந்தவிடங்கிட்டாதோ. 69

உலகவிகார மொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழியின்மின்னார் வசியாதுங்கிட்டாதோ. 70

ஒப்புவமைபற்றே டொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத் தெளிந்தவிடங்கிட்டாதோ. 71

வாக்குமனாதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவேநின் றாளிணைக்கேயான்போற்றி. 72

பட்டணத்தார் முதல்வன் முறையீடு,

முற்றிற்று.

பட்டணத்துப்பிள்ளையார்

அருட்புலம்பல்.

ஐங்கரனைத் தெண்டனிட்டே
னருளடைய வேண்டுமென்று
தங்காமல் வந்தொருவன்
றற்சொருபங் காட்டியெனைக்

கொள்ளைப்பிறப்பறுக்கக் கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி.

ஆகாரமோராறு வைம்பத்தோரக்ஷரமும்
சூதானகோட்டையெல்லாஞ் சுட்டான்றுறிசறவே.

மெத்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந் தலைகெட்டுவந்ததடி.

என்னோடுடன்பிறந்தா ரெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியே தனித்திருக்கமாட்டேண்டி.

எல்லாரும்பட்டகள மென்றுதொலையுமடி
சொல்லியழுதாற் றுயரமெனக்காறுமடி.

மண்முதலாமைம்பூத மாண்டுவிழக்கண்டேண்டி
விண்முதலாமைம்பொறிகள் வெந்துவிழக்கண்டேண்டி.

நீங்காப்புலன்களைந்து நீறாகவெந்ததடி
வாக்காதியைவரையு மாண்டுவிழக்கண்டேண்டி.

மனக்கரணமத்தனையும் வகைவகையேபட்டழிய
இனக்கரணத்தோடே யெரிந்துவிழக்கண்டேண்டி.

ஆத்துமதத்துவங்கள் அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோ போதமிழந்தாளே.

வித்தியாதத்துவங்கள் வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தையத்தனையுஞ் சுட்டான்றுரிசறவே.

மூன்றுவகைக்கிளையு முப்பத்தருவரையும்
கான்றுவிழச்சுட்டுக் கருவேரறுத்தாண்டி.

குருவாகிவந்தானோ குலமறுக்கவந்தானோ
உருவாகிவந்தானோ வுருவழிக்கவந்தானோ.

கேடுவருமென்றறியேன் கெடுமதிகண்டோற்றாமல்
பாடுவருமென்றறியேன் பதியாண்டிருந்தேண்டி.

எல்லாரும்பட்டகள மின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும் பொறியிலியைக்கண்டேண்டி.

உட்கோட்டைக்குள்ளிருந்தா ரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைகுள்ளிருந்தா ரறுபதுபேர்பட்டார்கள்.

ஒக்கமடிந்ததடி யூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாம் கரிக்கோட்டையாச்சுதடி.

தொண்ணூற்றருவரையுஞ் சுட்டான்றுரிசறவே
கண்ணீறுபட்டதடி கருவேரறுத்தாண்டி.

ஓங்காரங்கெட்டதடி யுள்ளதெல்லாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடி யடியோடறுத்தாண்டி.

தரையாங்குடிலைமுதல் தட்டுருவவெந்ததடி
இரையுமனத்திடும்பை யெல்லாமறுத்தாண்டி.

முன்னைவினையல்லா முழுதுமறுத்தாண்டி
தன்னையறியவே தானொருத்தியானேண்டி.

என்னையேநானறிய விருவினையுமீடழித்து
தன்னையறியத் தலமெனக்குச்சொன்னாண்டி.

தன்னையறிந்தேனண்டி தனிக்குமரியானேனண்டி
தன்னந்தனியே தனித்திருக்கும்பக்குவமோ.

வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானேனண்டி
காட்டுக்கெறிந்தநிலா கனவாச்சேகண்டதெலாம்.

நகையாரோகண்டவர்கள் நாட்டுக்குப்பாட்டலவோ
பகையாரோகண்டவர்கள் பார்த்தாருக்கேச்சலவோ.

இந்நிலைமைகண்டாண்டி யெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தாண்டி கற்பைக்குலைத்தாண்டி.

கற்புகுலைந்தமையும் கருவேரறுத்தமையும்
பொற்புக்குலைந்தமையும் போதமிழந்தமையும்.

என்னவினைவருமோ வின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம் பலித்ததடிசோர்வறவே.

கங்குல்பகலற்றிடத்தே காட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டி பார்த்தானைப்பார்த்திருந்தேன்.

சாதியிற்கூட்டுவரோ சாத்திரத்திற்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லா முள்ளபடியாச்சுதடி.

என்னகுற்றஞ்செய்தேனோ எல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லா மறியாரோவம்புவியில்.

கொன்றாரைதின்றேனோ தின்றாரைகொன்றேனோ
எண்ணாதெல்லாமெண்ணு மிச்சைமறந்தேனோ.

சாதியிற்கூட்டுவரோ சமைப்பதோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி.

கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெலா மூணல்லாதுண்பர்களோ.

கொண்டார்கள் கொண்டதெல்லாங் கொள்ளாதார் கொள்ளுவ
விண்டவர்கள்கண்டவரோ கண்டவர்கள்விண்டவரோ. [ரோ,

பண்டாயநான்மறைகள் பாடும்பரிசலவோ
தொண்டாயதொண்டருளந் தோற்றியொடுங்குமதோ.

ஓதவரிதோ வொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும் விளங்கும்பெருமையன்காண்.

வாக்குமனமு கடந்தமனோலயன்காண்
நோக்கவரியவன்கா ணுண்ணரியனுண்ணியன்காண்.

சொல்லுக்கடங்கான்காண் சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்தகனலொளிபோ னின்றவன்காண்.

சூட்டிறந்தபாழதனிற் சுகித்திருக்கச்சொன்னவன்காண்
எட்டிலெழுத்தோ எழுதினவன்கைபிழையோ.

சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதென் வடையவிழுங்கினண்டி.

பார்த்தவிடமெல்லாம் பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்த கொள்கையறியேண்டி.

மஞ்சனமாட்டி மலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழேனே னின்றநிலைகாணேண்டி.

பாடிப்படித்திருந்தும் பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாம லுருக்கெட்டுவிட்டேண்டி.

மாணிக்கத்துள்ளொளிபோல் மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார் பேசாப்பெருமையன்காண்.

அன்றுமுதலின்றளவு மறியாப்பருவமதில்
என்றும்பொதுவா யிருந்தநிராமயன்காண்.

சித்தவிகாரத்தாலே சின்மயனைக்காணாமல்
புத்திகலங்கிப் புகுந்தேன்பொறிவழியே.

பத்தியறியாமற் பாழிற்கவிழ்ந்தேண்டி
ஒத்தவிடநித்திரையென் றொத்துமிருந்தேண்டி.

செத்தாரைப்போத்தேண்டி சிந்தைதெளிந்தேண்டி
மற்றொருமில்லையடி மறுமாற்றங்காணேண்டி.

கல்வியல்லகேள்வியல்ல கைகாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடி யெங்குநிறைந்ததடி.

வாசாமகோசரத்தை மருவியிடங்கொண்டாண்டி
ஆசுசமில்லாண்டி யறிவுக்கறிவாண்டி.

பத்துத்திசைக்கு மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்கு மிடைவிடாதேகமடி.

தித்திக்கவூறுமடி சித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட் பதித்தபரஞ்சோதியடி.

உள்ளுணர்வாம்நின்றவர்த முணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளத்திலே யேறிக்குறையாண்டி.

தூருந்தலையுமிலான் றோற்றமொடுக்கமிலான்
ஆருமறியாம லகண்டமாய்நின்றாண்டி.

எத்தனையோவண்டத் திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலும் அணுவுங்குறையாண்டி.

வாக்குமனமும் வடிவுமிலாவான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான் பொருவரியபூரணன்காண்.

காட்சிக்கெளியான்காண் கண்டாலுங்காணன்காண்
மாட்சிமனம்வைத்தாற்கு மாணிக்கத்துள்ளொளிகாண்.

வாழ்த்தியவனை வழிபாட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியான்காண் சொல்லிறந்தசோதியன்காண்.

ஐயமறுத்தவனை யாராய்வாருண்டானல்
வையகத்தேவந்து மலர்பாதம்வைத்திடுவான்.

அணுவுக்குமேருவுக்கு மகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்று ஞானக் கரும்பின்றெளிவான்காண்.

எந்நாளுமிந்நாளு மிப்படியாயப்படியாய்ச்
சொன்னாலுங்கேளான்காண் சோத்திரத்திற்கொள்ளான்காண்.

ஆத்தாளுக்காத்தாளா மப்பனுக்குமப்பனுமாம்
கோத்தாற்குக்கோத்த நிலைகொண்டகுணக்கடல்காண்.

இப்போபுதிதோடி யெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போ தருளறிவுந்தந்தாண்டி.

பற்றற்றார்பற்றாகப் பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி.

வெட்டவெளியிலெனை மேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்.

வாழ்வானவாழ்வெனக்கு வந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேண்டி சற்றுங்குறையாமல்.

பொய்யானவாழ்வெனக்குப் போதுமெனக்காணேண்டி
மெய்யானவாழ்வெனக்கு வெறும்பாழாய்விட்டதடி.

கன்னியழித்தவனைக் கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநானறியே னீதென்னமாயமடி.

சொல்லாலேசொல்லுதற்குச் சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்து மிப்போதறியார்கள்.

கண்மாயமிட்டாண்டி கருத்துமிழந்தேண்டி
யுண்மாயமிட்டவனை யுருவழியக்கண்டேண்டி.

என்னசொல்லப்போறேனோ னிந்தவதிசயத்தை
கன்னியிளங்கமுகு காய்த்ததடிகண்ணார.

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாம் சவ்வாதுமணக்குதடி.

இந்தமணமெங்கு மியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதத் தருட்கடலின்மூழ்கினண்டி.

இரும்பிதுறைநீர்போலவெனை விழுங்கிக்கொண்டாண்டி
அரும்பிதுறைவாசனைபோ லன்றேயிருந்தாண்டி.

அக்கினிகர்ப்பூரத்தை யறவிழுங்கிக்கொண்டாய்போல்
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி.

கடல்நீறுமாறும்போற் கலந்துகரைகாணேண்டி
உடலுமுயிரும்போ லுட்கலந்துநின்றாண்டி.

பொன்னுமுரைமாற்றும்போற் பொருவரியபூரணன்காண்
மன்னுமனுபூதியடி மாணிக்கத்துள்ளொளிபோல்.

கங்குகரையில்லாண்டி கரைகாணுக்கப்படடி
எங்குமளவில்லாண்டி யேகமாய்நின்றாண்டி.

தீவகம்போலென்னைச் சேர்ந்தபரசின்மயன்காண்
பாவமொன்றில்லாண்டி பார்த்திடமெல்லாம்பரங்காண்

உள்ளார்க்குமுள்ளாண்டி யூருமில்லாப்பேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி.

அப்பிறப்புக்கெல்லாம் அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தா னிவனுகுமெய்ப்பொருள்காண்.

நீரொளிபோலெங்கு நிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும் பரந்தபராபரன்காண்.

நூலாலுணர்வரிய நுண்மையினுநுண்மையன்காண்
பாலாறுசக்கரைபோற் பரந்தபரிபூரணன்காண்.

உளக்கண்ணுக்கல்லா தூன்கண்ணுலொருமதோ
விளக்குச்சுடரொளிபோல் மேவியிருந்தாண்டி.

கல்லுளிருந்த கனலொளிபோற்காரணமாய்
புல்லியிருந்தும் பொருவரியபூரணன்காண்.

பொற்பூவும்வாசனைபோற் போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும்வாசனைபோற் காணுக்கயவருக்குக்.

மைக்குழம்புமுத்தும்போல் மருவிமறவாதவற்குக்
கைக்குட்கனியாகுங் கருவறுத்தகாரணற்குப்.

பளிங்கிற்பவளமடி பற்றற்றபாவலற்குக்
கிளிஞ்சிலைவெள்ளியென்பார் கிட்டாதார்கிட்டுவரோ.

எட்டுக்கடங்காண்டி யெழுத்திற்பிறவாண்டி
நாட்டினரிகளெல்லா நற்புரவிசெய்தாண்டி.

பஞ்சப்பிரளயத்து மிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமுடற்று னயனத்தழல்விழியான்.

அகங்காக்கும்புறங்காக்கும் அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத் திசைபத்துங்காக்குமடி.

பேசாப்பிரமமடி பேங்கிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள் அணுகாதபேரொளிகாண்.

தேசமிறந்தவன்காண் திசையிறந்ததென் கடல்காண்
ஊசிமுனையூன்ற வில்லாவுறுபொருள்காண்

சிப்பியில்முத்தொளிகாண் சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோ லமர்ந்தவரும்பொருள்காண்.

ஆலாவிருட்சமடி யளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள்விசும் பூடுருவுமெய்ப்பொருள்காண்.

வங்கிஷமெல்லாங்கடந்து வருவாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும் ஆய்ந்தவரும்பொருள்காண்.

நாமநட்டமானதடி நவிலவிடமில்லையடி
காமனைக்கண்ணுலெரிக்கக் கனல்விழித்தகாரணங்காண்

கொட்டாதசெம்பொன்னடி குளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடி யீப்புகாத்தேனமுதம்.

காணிப்பொன்னுணியுடன் கல்லுரைமாத்தின்னதென்றே
ஆணியுடன்கூட்டி யடங்கலிட்டுக்கொண்டாண்டி.

அளவிறந்தவண்டத்தா ரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும் பேசாப்பிரமமடி.

கன்னெஞ்சினுள்ளே கழுநீலம்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளே யிணையடிகள் வைத்தாண்டி.

வேதப்புரவியடி விரைந்தோடியும்மறியார்
காதற்றுஞானமடி காண்பார்கருத்துடையோர்.

பாசவினையைப் பட்டப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடி நில்லென்றுசொன்னாண்டி.

ஓசையொடுங்குமிட மோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும் பிரமமிதுவென்றாண்டி.

சின்மயநன்னோக்காற் சிற்சொருபங்காட்டியெனை
தன்மயமாயாக்கியே தானவனாய்நின்றாண்டி.

தானென்னைப்பார்த்தாண்டி தன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டி நவிலவிடமில்லையடி.

இன்றிருந்துநாளைக் கிறக்கிறபேரெல்லோரும்
என்றுபரிபூரணத்தி லினிதிருக்கச்சொன்னாண்டி.

பார்க்கிலெளிதலவோ பற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்ட வவனிதனில்வந்தாண்டி.

இத்தனைகாலமடி யிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடி யிரும்பினுறைநீரானேன்.

எக்காலம்பட்டதடி யிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாம் அழுந்தினேனரகில்.

காலங்கழித்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவு நாமநட்டமாச்சுதடி.

முப்பாழுக்கப்பால் முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண் எனைவிழுங்கிக்கொண்டான்காண்.

பாலின்கணெய்யிருந்தாற் போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய் தறவிழுங்கிக்கொண்டாண்டி.

செத்தபடமானேண்டி தீயிரும்பிநீரானேன்
ஒத்தவிடமித்திரையென் றேதுமுணர்வறிந்தேன்.

ஒப்புவமையுமற் றேதவரிதாயபெருள்
இப்புவினிற்குருவே யென்னவந்தோன்றுள்வாழி.

ஒப்பாரிசொல்லிடினு முவமைபிழைத்திடினும்
முப்பாழுங்கற்றுணர்ந்தோர் முன்னோர்பொருத்தருளே.

அருட்புலம்பல்.

முற்றிற்று.

பட்டணத்துப்பிள்ளையார்

இரந்தகாலத்திரங்கல்.

வார்த்தைத்திறமில்லா மனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச் சதிரிழந்துகெட்டேனே.
மெத்தமெத்தச்சொல்வாக்கில் வேறுமருளடுத்துத்
தத்தித்தலைகீழாய்த் தானடந்துங்கெட்டேனே.
வழக்கந்தலங்களினு மண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற் பதியிழந்துகெட்டேனே.

ஆணிபொருந்து மரும்பூமியத்தனையுங்
காணிநமதென்று கணம்பேசிகெட்டேனே.

ஆசாரமில்லா வரசருடன்கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்துகெட்டேனே.

குருமார்க்கமில்லாக் குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே.

ஆலமருந்து மரன்பெருமையெண்ணாமல்
பாலர்பெண்டீர்மெய்யென்று பதியிழந்துகெட்டேனே.

பிணவாசமுற்ற பெருங்காயமெய்யென்று
பணவாசையாலே பதியிழந்துகெட்டேனே.

கண்ணபுலவர் கனக்கவேதான்புகழ
உண்டவுடம்பெல்லா முப்பரித்துக்கெட்டேனே.

எண்ணிறந்தசென்ம மெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற் பதியிழந்துகெட்டேனே.

சிற்றெறும்புசற்றுந் தீண்டப்பொறாவுடம்பை
உற்றுருக்கவுஞ்சுடவு மொப்பித்துமாண்டேனே.

தன்னுடம்புதானே தனக்குபகையாமென்
றெண்ணுமுணர்வில்லாம லின்பமென்றுமாண்டேனே.

தோலெலும்புமாங்கிஷமுந் தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புசுக்கிலமென்று வீறுப்பாய்மாண்டேனே.

போக்குவரத்தும் பொருள்வரத்துங்காணமல்
வாக்கழிவுசொல்லி மனமறுக்கிக்கெட்டேனே.

இரந்தகாலத்திரங்கல்.

முற்றிற்று.

சிவமயம்.

பட்டணத்துப் பிள்ளையார்.

நெஞ்சொடு புலம்மல்.

மண்காட்டிப்பொன்காட்டி மாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங் கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போ லலைந்தனையேநெஞ்சமே. 1

புட்பாசனவணையிற் பொற்பட்டுமெத்தையின்மே
ஒப்பாவணிந்தபணி யோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தி யியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்ற முயங்கிலையேநெஞ்சமே. 2

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பாணின் றாடுமதைப்போற்றாமல்
இப்பாழாம்வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன்றீயாமல்
துப்பாழாய்வந்தவினை சூழ்ந்தனையேநெஞ்சமே. 3

அன்னம்பகிர்ந்திங் கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ் சிவனருளைப்போற்றாமல்
பொன்னுமனையுமெழிற் பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாக வெண்ணினையேநெஞ்சமே. 4

முற்றொடர்பிற்செய்த முறையால்வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றேமென் றெண்ணாதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாம லரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற் கண்மறந்துவிட்டனையே. 5

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்கா தனத்திலிருந்தாலும்
காணித்தூடலைநமன் கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே. 6

சுற்கட்டுமோதிரநற் கடுக்கனரைநான்பூண்டு
திக்கெட்டும்போற்ற திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர் பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே. 7

முன்னநீசெய்ததவ முப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும் பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச் சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற் காட்சியற்றாய்நெஞ்சமே. 8

பையரவம்பூண்ட பரமர்திருப்பொற்றாளைத்
துய்யமலர்பரித்துத் தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங் காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிறுமாந்து விட்டனையேநெஞ்சமே. 9

மாதுக்கொருபாகம் வைத்தவரன்பெற்றாளைப்
போதுக்கொருபோதும் போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்த மண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீ யெண்ணினையேநெஞ்சமே. 10

அஞ்சருலைப்போற்றி யைந்துபுனைர்துறக்க
நெஞ்சேயுனக்கு நினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
நெஞ்சரணத்தானைச் சிந்தைசெய்வாய்நெஞ்சமே. 11

அற்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித் தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன் உடைமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற் றவளைபோலானேனே. 12

உற்றாரார்பெற்றார ருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும்போதுதவுவரோ
கற்றாவிழுந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றாகிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே. 13

வீடிருக்கத்தாயிருக்க வேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப் பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கண்ணிருக்க வைத்தபொருளிருக்க
கூடிருக்கநீபோன கோலமென்னகோலமே. 14

சந்தனமுங்குங்குமமுஞ் சாந்தும்பரிமளமும்
விந்தைகளாய்ப்பூசிமிகு வேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்ற கன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனாயென் றெண்ணிலையேநெஞ்சமே. 15

காற்றுத்துருத்தி கடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடத்தை யுண்டென்றிறுமாந்து
பார்த்திரங்கியன்னம் பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போல் வளாவினையேநெஞ்சமே. 16

நீர்க்குமிழிவாழ்வைநம்பி நிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவாமன்னம் பசித்தோர்க்களியாமல்
போக்குளெமதூதன் பிடித்திழுக்குமப்போது
ஆர்ப்புடுவரென்று யறிந்திலையேநெஞ்சமே. 17

சின்னஞ்சிறுநுதலாள் செய்தபலவினையான்
முன்னந்தமார்பில் முளைத்தசிலந்திவிம்மி
வன்னர்தளதளப்ப மயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ண வறிந்திலையேநெஞ்சமே. 18

ஓட்டைத்துருத்தியை யுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்த ரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்து வெளியையொளியாலழைத்துக்
காட்டும்பொருளிதென்று கருதிலையேநெஞ்சமே. 19

ஊன்பொதிந்தகாய முளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீ சற்குருவைப்போற்றமல்
கான்பரந்தவெள்ளங் கரைபுரளக்கண்டேகி
மீன்பறந்தாற்போலே விசாரமுற்றாய்நெஞ்சமே. 20

உடக்கையொருத்தி யுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்று சார்ந்தங்கிறுமாந்தே
உடக்கைதகர்த்தே யுயிரையமன்கொள்கையிலே
யடக்கமாய்வைத்தபொரு ளங்குவரமாட்டாதே. 21

தித்திக்குந்தேனைத் தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தான முப்பாழைப்போற்றமல்
பற்றிப்பிடித்தியமன் பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினை சூழ்ந்தனையேநெஞ்சமே. 22

அஞ்செழுத்தாயெட்டெழுத்தா யைம்பத்தோரட்சரமாய்
பிஞ்செழுத்தாய்நின்ற பெருமானைப்போற்றமல்
வஞ்சகமாயுற்றமுலை மாதர்வலைக்குள்ளாகி
பஞ்சரித்துத்தேடிப் பாழுக்கிறைத்தோமே. 23

அக்கறுகுகொன்றைதும்பை யம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல்
மக்கள்பெண்டீர்சுற்றமுடன் வாழ்வைமிகநம்பியன்பாய்
எக்காலமுமுண்டென் றெண்ணினையேநெஞ்சமே. 24

ஆண்டகுருவி னருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாய வீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதுநல்லார் பொய்மாய்கைக்குள்ளாகி
தூண்டிலகப்பட்டுத் துடிகெண்டையானேனே. 25

ஏணிப்பழுவா மிருளையறுத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலை பேறுபெறமாட்டாமல்
காணவரும்பொருளாய்க் கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போ லாகினனேநெஞ்சமே. 26

கோத்துப்பிரகாசங் கொண்டுருகியண்டமெல்லாம்
காத்தபடியே கயிலாயஞ்சேராமல்
வேற்றுருவப்பட்டடியேன் வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவி லிருந்தபிணமானேனே. 27

நிலைவிட்டுடலையுயிர் நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற் றின்றானைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற் றட்டழிந்தாய்நெஞ்சமே. 28

முடிக்குமயிர்ப்பொல்லா முழிக்குரம்பை மின்னாரின்
இடைக்குநடைக்குமிதங் கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லைவனத் தையனைநாயனையேன்
விடக்கையிழந்த மிருகமதுவானேனே. 29

பூவாணர்போற்றும் புகழ்மதுரைச்சொக்கரதா
சீர்பாதம்போற்றிச் சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந் தலைபுகுந்தநாய்போல
ஆகாதநெஞ்சமே யலைந்துதிரிந்தாயே. 30

பத்தெட்டாயீரைந்தாய்ப் பதின்மூன்றிரண்டொன்றாய்
ஒத்திட்டுநின்றதோ ரோவியத்தைப்போற்றாமல்
தெத்திட்டுநின்ற திரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சே விடவுமறியாயே. 31

அஞ்சுமூநவாகி யைமூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்த விளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற் பற்றிப்பிடியாமல்
நஞ்சுண்டகெண்டையைப்போல் நானலைந்துகெட்டேனே. 32

ஊனமுடனே யுடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்து மண்ணுலகில்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்க ளாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம் போய்ப்பிழைத்தோமில்லையே. 33

ஊறையிறைக்கின்ற வுப்பிருந்தபாண்டத்தை
நாறாமல்நாறி நழுவும்புழுக்கூட்டை
விரும்புரத்தை விரும்புகின்றதெப்படியென்
றுறுதநாட்டி லகன்றிருந்தேனில்லையே. 34

அரியவரிதேடி யறியாமொருமுதலை
பரிவுடனேபோற்றும் பரஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பிக் காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே. 35

தந்திரத்தையுன்னீர் தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னி மயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமா மேலொளியைக்காணாமல்
அந்தரத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே. 36

விலையாகிப்பாணனுக்கு வீறடிமைபட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சிற் றின்றானைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோ லாணுவத்திலைமுங்கி
யுலைவாய்மெழுகதுபோ லுருகினையேநெஞ்சமே. 37

நெஞ்சொடுபுலம்பல்

முற்றிற்று.

—*—

பட்டணத்துப்பிள்ளையார்.

அருளிச்செய்த

பூரணமாலை.

மூலத்துதித்தெழுந்த முக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப்போற்றுமல் மதிமறந்தேன்பூரணமே. 1

உந்திகமலத் துதித்துநின்றபிர்மாவைச்
சந்தித்துக்காணுமற் றட்டழிந்தேன்பூரணமே. 2

நாவிக்கமல நடுநெடுமால்காணுமல்
ஆவிகெட்டியானு மறிவழிந்தேன்பூரணமே. 3

உருத்திரனையிருதயத்தி லுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங் கலங்கினேன்பூரணமே. 4

விசுத்திமயேசுரனை விழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சம் பதறினேன்பூரணமே. 5

நெற்றிவிழியுடைய நிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற் பொறியழிந்தேன்பூரணமே. 6

நாதவிந்துதன்னை நயமுடனேபாராமல்
போதமயங்கிப் பொறியழிந்தேன்பூரணமே. 7

உச்சிவெளியை யுறுதியுடன்பாராமல்
அச்சமுடனானு மறிவழிந்தேன்பூரணமே. 8

மூக்குமுனையை முழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானு மறிவழிந்தேன்பூரணமே. 9

இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந் தயங்கினேன்பூரணமே. 10

ஊனுக்குணினின் றுலாவினதைக்காணுமல்
நானென்றிருந்து நலமழிந்தேன்பூரணமே. 11

மெய்வாழ்வைநம்பி விரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேன்பூரணமே. 12

பெண்டுபிள்ளை தந்தைதாய பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென் றுநம்பி யுடலழிந்தேன்பூரணமே. 13

தண்டிகைப்பல்லக்குடனே சகலசம்பத்துகளும்
உண்டென் றுநம்பி யுணர்வழிந்தேன்பூரணமே. 14

இந்தவுடலுயிரை யெப்போதுந்தான்சதமாய்ப்
பந்தமுற்றுநானும் பதமழிந்தேன்பூரணமே. 15

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப் பொறியழிந்தேன்பூரணமே. 16

சரியைகிரியாயோகந் தான்ஞானம்பாராமல்
பிரிதிகண்டமதியதுபோற் பயனழிந்தேன்பூரணமே. 17

மண்பெண்பொன்னாசை மயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற் கலங்கினேன்பூரணமே. 18

தனிமுதலைப்பார்த்துத் தனித்திருந்துவாழாமல்
அநியாயமாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன்பூரணமே. 19

ஈராறுதன்குலைக்கு ளிருந்துகூத்தாடினதை
ஆராய்ந்துபாராம லறிவழிந்தேன்பூரணமே. 20

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன்பூரணமே. 21

கருவிகடொண்ணூற்றாறிற் கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராம லீடழிந்தேன்பூரணமே. 22

உடலுக்குள்நீநின் றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்து காலலுத்தேன்பூரணமே. 23

எத்தேசகாலமுநா மிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான்பாராம லுருவழிந்தேன்பூரணமே. 24

எத்தனைதாய்தந்தை யிவர்களிடத்தேயிருந்து
பித்தனாயானும் பிறந்திருந்தேன்பூரணமே. 25

பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்யானுமுன்றன்
பொற்றுணைத்தாள்தந்து புகலருள்வாய்பூரணமே. 26

உற்றாரழுதலுத்தா ருறன்முறையார்கட்டலுத்தார்
பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்பூரணமே. 27

பிரமன்படைத்தலுற்றான் பிறந்திறந்துநானலுத்தேன்
உரமுடையவக்கினிதா னுண்டலுத்தான்பூரணமே 28

எண்பத்துநான்குநூறாயிரஞ் சென்னமுஞ்செனித்து
புண்பட்டுநானும் புலம்பினேன்பூரணமே. 29

என்னையறியாம லெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாம லுடலிழந்தேன்பூரணமே. 30

கருவாயுருவாய்க் கலந்துலகெல்லாநீயாய்
அருவாகிநின்ற தறிகிலேன்பூரணமே. 31

செம்பொற்கமலத் திருவடியைப்போற்றாமல்
பம்பைகொட்டவாடும் பசாசானேன்பூரணமே. 32

எனக்குள்ளேநீயிருக்க வுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீர வரமருள்வாய்பூரணமே. 33

எழுவகைத்தோற்றத் திருந்துவிளையாடினதைப்
பழுதறவேபாராமற் பயனழிந்தேன்பூரணமே. 34

சாதிபேதங்கள் தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்று மயங்கினேன்பூரணமே. 35

குலமொன்றாய்நீபடைத்த குறியையறியாமல்யான்
மலபாண்டத்துள்ளிருந்து மயங்கினேன்பூரணமே. 36

அண்டபிண்டமெல்லா மணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின் குறிப்பறியேன்பூரணமே. 37

சகஸ்திரத்தின்மேலிருக்குஞ் சயகுருவைப்போற்றாம
லகந்தினுடதாணுவத்தா லறிவழிந்தேன்பூரணமே. 38

ஐந்துபொறியை யடக்கியுனைப்போற்றாமல்
நைந்துருகிநெஞ்சு நடுங்கினேன்பூரணமே. 39

என்னைத்திருக்கூத்தா லிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியா துடலழிந்தேன்பூரணமே. 40

நரம்புதசைதோலெலும்பு நாற்றத்துக்குள்ளிருந்து
வரம்பறியமாட்டாமல் மயங்கினேன்பூரணமே. 41

சிலந்தியுடைநூல்போற் சீவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல் நலமழிந்தேன்பூரணமே. 42

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவான தறிகிலேன்பூரணமே. 43

ஒளியாக்கதிர்மதியா யுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேன்பூரணமே. 44

இடையாகியபிங்கலையா யெழுந்தசுழிமுனையாய்
உடலுயிராய்நீயிருந்த வுளவறியேன்பூரணமே. 45

மூலவித்தாய்நின்று முளைத்துடல்தோறும்மிருந்து
காலனெனவழிக்குங் கணக்கறியேன்பூரணமே. 46

உள்ளும்புறம்புமா யுடலுக்குள்நீயிருந்த
தெள்ளளவுநானறியா திருந்தேனேபூரணமே. 47

தாயாகித்தந்தையாய் தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன்பூரணமே. 43

விலங்குபுள்ளூர்வனவாசம் விண்ணவர்நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையில்நின்ற குறிப்பறியேன்பூரணமே. 49

ஆணாகிப்பெண்ணா யலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்ற வகையறியேன்பூரணமே. 50

வாலையாய்ப்பக்குவமாய் வளர்ந்துகிழந்தானாகும்
பாலையாய்நின்ற பயனறியேன்பூரணமே. 51

பொய்யாய்ப்புவியாய்ப் புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன்பூரணமே. 52

பூவாய்மணமாகிப் பொன்னாகிமாத்தாகி
நாவாய்ச்சொல்லான நயமறியேன்பூரணமே. 53

முதலாய்நடுவாகி முப்பொருளாய்மூன்றுலகா
யிதமாகிநின் வியலறியேன்பூரணமே. 54

ஊனாயுடலுயிரா யுண்ணிறைந்தகண்ணொளியாய்த்
தேனாய்ருசியான திறமறியேன்பூரணமே. 55

வித்தாய்மரமாய் விளைந்தகனியாய்ப்பூவாய்ச்
சித்தாகிநின்ற திறமறியேன்பூரணமே. 56

ஐவகையும்பெற்றுலக வண்டபகிரண்டமெல்லாந்
தெய்வமெனநின்ற திறமறியேன்பூரணமே. 57

மனமாய்க்கனவாகி மாய்கையாயுள்ளிருந்து
நினைவாகிநின்ற நிலையறியேன்பூரணமே. 58

சத்திசிவமிரண்டாய்த் தான்முடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன்பூரணமே. 59

பொறியாய்ப்புலனாகிப் பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளவறியேன்பூரணமே. 60

வானிற்கதிர்மதியாய் வளர்ந்துபின்னொன்றானதுபோய்
ஊனுடலுக்குள்ளிருந்த வுயிர்ப்பறியேன்பூரணமே. 61

பொய்யும்புலையுமிகப் பொருந்துவீண்பேசலன்றி
ஐயோவுனைஉரைக்க வறிகிலேன்பூரணமே. 62

நிரந்தரமாயெங்கு நின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னப் பதமறியேன்பூரணமே. 63

கொல்வாய்பிறப்பிப்பாய் கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய்பிறர்க்குட் செயலறியேன்பூரணமே. 64

வாரிதியாய்வையமெல்லா மன்னுமண்டபிண்டமெல்லாஞ்
சாரதியாய்நின்ற தலமறியேன்பூரணமே. 65

வித்தாய்மரமாய் வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்த தரமறியேன்பூரணமே. 66

தத்துவத்தைப்பார்த்துமிகத் தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராம லுய்வாரோபூரணமே. 67

ஒன்றாயுயிரா யுடல்தோறுநீயிருந்தும்
என்றுமறியார்க ளேழைகள்தாம்பூரணமே. 68

நேற்றென்றுநாளையென்று நினைப்புமறப்பாய்ப்படைத்து
மாற்றமாய்நின்ற வளமறியேன்பூரணமே. 69

மனம்புத்திசித்தி மகிழறிவாய்காரமதாய்
நினைவாந்தலமான நிலையறியேன்பூரணமே. 70

உருப்பேதமின்றி யுயர்ந்தசத்தபேதமதாய்க்
குருப்பேதமாய்வந்த குணமறியேன்பூரணமே. 71

சட்சமயபேதங்கள் தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென் றுரைத்தனையேபூரணமே. 72

முப்பத்திரண்டுருப்பாய் முனைந்துபடைத்துள்ளிருந்த
செப்படிவித்தை திறமறியேன்பூரணமே. 73

என்னதான்கற்றாலென் னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதா ருய்வரோபூரணமே. 74

கற்றறிவோமென்பார் காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்தங்களுக்குப் பிறப்பறுமோபூரணமே. 75

வானென்பாரண்டமென்பார் வாய்ஞ்ஞானமேபேசித்
தானென்பார்வீணர் தனையறியார்பூரணமே. 76

ஆதியென்பாரந்தமென்பா ரதற்குண்டுவாயிருந்த
சோதியென்பார்நாதத் தொழிலறியார்பூரணமே. 77

மூச்சென்பாருள்ளமென்பார் மோகமெனுமோட்சமென்பார்
பேச்சென்பாருன்னுடைய பேரறியார்பூரணமே. 78

பரமென்பார்பானுவென்பார் பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன் வழியறியார்பூரணமே. 79

எத்தனைபேரோ வெடுத்தெடுத்தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றான தறிகிலேன்பூரணமே. 80

நகாரமகாரமென்பார் நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பார் வகையறியார்பூரணமே. 81

மகத்துவமாய்க்காம மயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற் பயனழிந்தேன்பூரணமே. 82

உண்மைப்பொருளை யுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திருந்தேன்பூரணமே. 83

வாயாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்து கலங்கினேன்பூரணமே. 84

சந்திரனைமேகமது தான்மறைத்தவாறதுபோற்
பந்தமுறயானுமுனைப் பார்க்கிலேன்பூரணமே. 85

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றங் கலைந்தேநான்பூரணமே. 86

நீர்மேற்குமிழிபோல் நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான் றட்டழிந்தேன்பூரணமே. 87

நெஞ்சமுருகி நினைத்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்க வகையறியேன்பூரணமே. 88

எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்திருந்த
துள்ளமறியா துருகினேன்பூரணமே. 89

மாயாபிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்தே
யோயாய்ச்சனன மொழித்திலேன்பூரணமே. 90

பூசையுடன்புவன போகமெனும்போக்கியத்தால்
ஆசையுற்றேனு மறிவழிந்தேன்பூரணமே. 91

படைத்துமழித்திடுவாய் பார்க்கிற்பிரமாவெழுத்தைத்
தொடைத்துச்சிரஞ்சீவியாத் துலங்குவிப்பாய்பூரணமே. 92

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத் தகுமோதான்பூரணமே. 93

அல்லாய்ப்பகலா யனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்த தொடர்பறியேன்பூரணமே. 94

நரகஞ்சுவர்க்கமென நண்ணுமிரண்டுண்டாயும்
அரகராவென்ப தறிகிலேன்பூரணமே. 95

பாவபுண்ணியமென்னும் பகுப்பாய்ப்படைத்தழித்தில்
வாவலையுண்டாக்கிவைத்த வருளறியேன்பூரணமே. 96

சாந்தமென்றுங்கோபமென்றுஞ் சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும் படைத்தனையேபூரணமே. 97

பாசமுடலாய்ப் பசுவதுவுந்தானுயிராய்
நேசமுடனீபொருளாய் நின்றனையேபூரணமே. 98

ஏதிலடியா ரிரங்கியிகத்தில்வந்துன்
பாதமதில்தாழப் பரிந்தருள்வாய்பூரணமே. 99

நானேநீநீயோநா னுமிரண்டுமொன்றுனுய்
தேனின்றுசியதுபோற் றெவிட்டாய்நீபூரணமே, 100

முடிவிலொருசூனியத்தை முடித்துநின்றுபாராமல்
அடியிலொருசூனியத்தி லலைந்தேனேபூரணமே. 101

பூரணமாலைதனைப் புத்தியுடனேதினர்க்குத்
தாரணியில்ஞானந் தழைப்பிப்பாய்பூரணமே. 102

பூ ர ண மா லை.

முற்றிற்று.

—*—

சிவமயம்.

பட்டணத்துசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஞானம்-௱.

வெண்பா.

காப்பு.

கண்பானநெஞ்சுக்கே ஞானத்தால்நல்லபுத்தி
வெண்பாவாய்நூறும் விளம்பவே-பண்பாக
ககனமறுபதமுருவக் ககனமுகடதிர்வலுக
ககனகதிர்வேல்முருகன் காப்பு.

நெஞ்சுடனேதான்புலம்ப னீலனிறத்தாளீன்ற
குஞ்சரத்தையாதரித்துக் கும்பிட்டால்-கஞ்சமுடன்
காமமுதல்மும்மலத்தின் கட்டறுத்துஞானமுடன்
பூமிதனில்வாழ்வாரெய் போதும். 1

எப்போதிரைவன் யெழுத்தைவிட்டுத்தப்புவோம்
எப்போயெழுத்தைரெண்டை யேத்துவோம்-யெப்போதான்
காமன்வலையறுப்போம் கதிரொளியைக்கண்டுநெஞ்சே
ஏமன்வலையறுப்ப தென்று. 2

என்றும்பயமறவே யீரெழுத்தும்ஓரெழுத்தாய்
நின்சிவலிங்கத்தை நெஞ்சேகேள்-உண்டுறங்கி
தேசமெல்லாம்நின்றசைந்த தீயெழுத்தேலிங்கங்காண்
ஆசைவிந்தேநாவெழுத்தே ஆவுடையார். 3

ஆவுடையாளோடிருந்தேன் அருளானந்தம்பிறவே
கோவுடையாள்நின்ற தினங்கூடியே-பூவுடையாள்
கட்டழகியைத்தள்ளி கடந்துபெருவெளியில்
இஷ்டமுடன்நெஞ்சே யிரு. 4

இருவினைக்குள்ளாகாதே யென்னுடைமையென்னாதே
பெருகிசினங்கொண்டு பினத்தாதே-மருவுமலக்
கள்ளமெல்லாம்விட்டுக் கரைந்துகரைந்துருகி
உள்ளுணர்ந்துநெஞ்சேபார் ஒன்றை. 5

ஒன்றுமறியாதே ஓடியலையாதே
கருவியிற்சென்றுமயங்கித் திரியாதே-நின்றனை
பிரியாதேநெடிய னெஞ்சேகொடிய
புலைவினையும்மரத்தும் பொருள். 6

பொருளுடைமைநம்பாதே பொய்வாழ்வைநத்தாதே
மிருநூறவைநம்பி யிருகாதே-பொருளுறவு
கொண்டறிவினாலே குறித்துவெளியதனைக்
கண்டுபிடித்தேருநெஞ்சே காத்தை. 7

காத்துடனேசேர்ந்து கனலுருவைக்கண்டுவெளி
மாத்தியினிப்பிறக்க வாறாதே-யேத்தபடி
ஓடியலையாதே ஓங்காரத்துள்ளொளியை
நாடிருப்போம்மனமே நாம். 8

நானெனதென்னென்றுவினை ணுடியலையாதே
தானவனேயென்று தரிக்கா நீ-என்மனமே
வீணுவல்கொள்ளாதே மேலாம்பழம்பொருளை
காணுவல்கொள்ளாய் கருத்து. 9

கருத்துவேறாகாதே கண்டிடத்தில்ஓடாதே
விரித்துப்பலவேடம் மேவாதே-பெருத்ததொரு
சஞ்சலத்தைவிட்டு ஸலமரிந்துகாண்மனமே
அஞ்செழுத்தாலொன்ப தடை. 10

ஒன்பதுவாய்க்கூட்டையுருதியென்றுநம்பாதே
ஐம்புலனையென் றணுகாதே-இன்பமுடன்
சிற்பறத்தினுள்ளே தெளிந்தபறமானந்தத்
தற்பொருளேமெய்யென் றுணர். 11

மெய்யுணர்ந்துபாராமல் விரிந்தகன்றுபோகாதே
அய்யன் திருவிளையாட்டென்றறிநெஞ்சே-செய்யதொரு
ஆணெழுத்தும் பெண்ணெழுத்து மணுவாகின்றனடு
காணும்பொருளுரைக்குங் கால். 12

கல்லானநெஞ்சே கவலைக்கருத்தாகி
பொல்லாப்பவக்கடலில் போகாதே-யெல்லாம்
ஜெலக்குமுழியென்றுநினை செம்பொன்னிநம்பலத்தை
கலக்கமரபார்த்தே கரை. 13

கரைதெரியாயின்பக் காமக்கடலில்மூழ்காதே
வரையடைந்தவாழ்வை நத்திபோகாதே-உரைபிறந்த
ஓசைவிந்துவேமனமே உற்சபையாளரிந்து
நேசமுள்ளபாக்கியத்தி னில். 14

பாக்கியத்தைக்கண்டு பரிந்துமகிழா
தாக்குமிடிவந்தால் சலியாதே-நோக்குமே
ஒருவன்றிருவிளையாட் டென்றுணருநெஞ்சே
கருத்தாலேநின்று கருது. 15

கருதாதேமங்கையர்கள் காமவலைக்கேங்கி
உருகாதேநெஞ்சே ஒருவன்-இருகாலை
கரத்தயந்துசேர்த்துக் கலைக்கண்காட்டித்தினகண்டரை
போற்றிபார்ஒத்தனல்ல பொன். 16

பொன்னாசைமண்ணாசை பூங்குழலாராசையென
சொன்னாசையென்றறிந்து சோராது-யென்னாளும்
யீசனமைத்தபடி யிருக்குங்காணிம்மூன்றும்
பாசமதுநெஞ்சே பரிந்து. 17

பரிந்துதிரியாதே பார்வினைக்கு அஞ்சாதே
அருந்துருசிசிந்தித் தலையாதே-வருந்தி
நடந்துசித்திரனுடியிலே ஞதமரிநெஞ்சே
உடைந்திடுமுன்னேயிருந்த உடல். 18

உடம்பழிந்துபின்மனமே ஒன்றுங்கிடையாதே
உடம்பழியுமுன்கண் டுணராதே-உடம்பிற்
கருநிறத்தைசேர்ந்து கருமலைச்சிற்றற்றும்
பருகுசித்திரக்கலைமதியும் பால். 19

பாலிருக்கும்தோல்தனத்தை பாராதேமங்கையர்கள்
காலிடுக்கைநத்திக் கறையாதே-கோல்யெடுத்து
வீரமறலி வருமுன்வினையருக்கு
பார்வழியின்றுனைப் பார். 20

பார்த்தவிடமெல்லாம் பரமென்றிருமனமே
காற்றனல்மண்ணீர்வெளியாம் கண்டதெல்லாம்மாத்திரண்ட
ஐம்புலனும்மில்லாது ஆசைகளும்மில்லாது
யென்புடலும்மில்லா தினி. 21

இனியசுகம்ஐம்புலனென் றெண்ணாதேநெஞ்சே
இனியசுக மறவாதே-யினியசுகம்
கண்டதெல்லாமெவ்வுலகு காணாதுஇவ்வுலகில்
நின்றதோ நில்லாத தோ. 22

நில்லாமல்ஓடுகின்ற நெஞ்சேநிலையில்லா
மெல்லாப்பகையா யிருக்குங்காண்-பொல்லாக்
கருக்குழியிலேபிறந்த கன்மவினையானால்
திருக்கருக்கவேணும் தினம். 23

தினந்தினைப்போதாகிலுந்தான் தீதறநில்லாமல்
யினம்பிரிந்தமான்போய் யிருந்தா-தினந்தினமும்
ஓங்காரத்துள்ளொளியை யுற்றுணர்த்துநீமனமே
ஆங்கார அச்சமற. 24

அச்சத்தால்ஐம்புலனும் ஆங்காரத்தால்மெய்ந்த
கர்சத்தாநிச்சயமாய் கொள்ளாதே-மெச்சத்தான்
அண்டமெல்லாம்ஊடுருவ ஆகாசமுங்கடந்து
நின்றநிலைதான் நிலை. 25

நிலையறிந்துநில்லாமல் நீபாவிநெஞ்சே
அலைமதிபோலேநினைமு மாறாய்-கலையறிந்து
மாறனையுங்கூத்தனையும் மார்புரத்தையும்புதைத்த
வீடனையுந்தேடி விரும்பு. 26

விரும்பித்தனித்தனியே மெய்ப்புணராதேமாய்கை
யிரும்புண்டநீர்போலே வேகும்-கரும்பதனை
தின்றாக்கோதெரியும் நெஞ்சேநின்ஐம்புலனை
வென்றால்லோவெளிச்ச மாம். 27

வெளிச்சநில்லாவீடே விளக்கேத்தினவீடே
கழிச்சிறந்தநின்றதைத்தான் கார்நெஞ்சே-வெளிச்சமற
தொகன்னூத்தார்த்துவமும் ஒவ்வொன்றாய்த்தோன்றுங்காண்
யென்னனிவிலைகாணு திருட்டு. 28

இருட்டணையமாய்கையால் யெவ்வுலகுந்தாயை
பொட்டணையேழுடும் ஐம்புலனான்-திருட்டுமன்
வண்டருடன்கூடாதே வாழ்மனமேநாமிருவோர்
கண்டுகொள் வோம்காணா ததை. 29

காணாததைக்கண்டால் கண்டதெல்லாங்காணாது
வீணாவல்கொண்டுஅக மெலியாதே-னாணாதே
இந்திரியத்தோடு யிணங்காதேபாவிநெஞ்சே
செஞ்சொல்மறை அக்கறத்தை தேடு. 30

தேடினாலைந்து திருக்கறத்தைச்சென்றுவெழி
னாடினால்நெஞ்சே நலம்பெறலாம்-வாடியே
பொல்லாப்புவிகாண் போகமதைநம்பாதே
யெல்லாம்வெளிலில மஞ்சளே 31

மஞ்சணையகூந்தல் மடவாரைகண்டுருகும்
பஞ்சமலநெஞ்சே பகரக்கேள்-மஞ்சள்
மயங்காணும்இந்தவுடல் மாயவாழ்வெல்லாம்
அயன்காணழித்த சூஸ்திரம். 32

சூஸ்திரத்தாலாடும் சுழிமுனையைத்தான்திறந்து
பார்த்திருந்தால்வாராது பாவமெல்லாம்-சூஸ்திரத்தை
பாராமலேயிருந்து பாவிமனமேபிறக்க
வாராமலேயிருக்க வா. 33

வாசிதனைப்பிடித்து வன்கனலோடேசேர்த்து
சீசீயெனவே திரியாமல்-மாசி
இருளானதைச்சேர்ந்து இருந்தாயேநெஞ்சே
பொருளானதைமறந்து போடு. 34

போட்டுவிக்கும்பொல்லாபுழுச்சொரியுநாய்விடக்கே
கூட்டங்குலைந்து குலைந்திடுமுன்-காட்டித்
தாழ்வுவாராய்நெஞ்சே தாராதரமாய்யெங்கும்
முறவானதைமுயிர்போம் முன் 35

முன்னயனெழுத்தும் மூன்றுவினைகண்டுழன்று
பின்னுந்தெரியிலேயோ பேய்மனமே-தன்னை
அரியாமலேயிருந்தால் அவனரிவானோமனமே
குரியானபுத்தியென்றே கொள். 36

கொள்ளைக்ககப்பட்டுக் குடிகேடறேடிருந்து
கள்ளக்கருத்தால் கருதாதே-மெள்ளமெள்ள
ஆய்ந்தாய்ந்துபார்த்துநீ ஆறுருக்கப்பாலே
தேர்ந்தாய்ந்துபார்த்து தெளி. 37

தெளிந்தநீர்பட்டமூர்தம் சேர்ந்தால்தெளியாதா
தெளிந்தநீர்காட்டா தவைபோல்-தெளிந்தால்
சகலபொருள்தோற்றும் தாழ்வுவருமென்றும்
பகலிரவில்லாத பதி. 38

பதிபசுபாசங்களையும் பற்றதிலேஊடுருவப்
பதிதனிலேதங்கிப் பவமருந்து-கதிபெறவே
வீணுமோநெஞ்சேகேள் வேதாந்தத்துட்பொருளை
காணுமலாமோ கணக்கு. 39

கணக்கரியாமாயக் கருவிகறணுதிப்
பிணக்கரியாமற்பேதை நெஞ்சே-யிணக்கம்
மரிந்திணங்கவேணும் மருளவெளிமினுள்ளே
செரிந்தவிந்துணுதத்தைச் சேரு. 40

சேராதேமாய்கைதனை சேர்ந்துகருக்குழியை
பாருதேநெஞ்சே பதையாதே-சீருன
சித்திரத்தைப்பார்த்து தினமனமேசித்திரத்தில்
சத்திரத்தைக்கொள்ளா யுகந்து. 41

உகந்துகந்துநெஞ்சமே ஒரெழுத்தினுலே
அகந்தனையேசுத்திபண்ணி யாய்ந்து-முகந்து
குடியாமலாமோ குலவுமலமான
மிடியானதுதீரவேண்டி. 42

வேண்டுந்திரவியமும் மேலுயர்ந்துபள்ளியெய்லாம்
ஆண்டதிரைநாடு மம்பலமும்-மாண்டுபெருங்
காடுயர்ந்தாரேமனமே கண்டாயோமாயநயன்
தேடரியயீசன் செயல். 43

செயமாகாநெஞ்சே திருட்டுமலக்கோட்டை
பயமறவேவெட்டிப் பரப்பி-நயமான
வாசியினுல்சுட்டொடிக்கி மதிமயங்கக்கண்டிருப்போம்
பேசியனும்பேசாமலே. 44

பேசாதஞானப் பெருமைக்கிடப்பதுதான்
ஆசாபாசங்களில்லா தார்க்கல்லோ-கூசாமல்
தேசமெல்லாம்ஓடித் திரியுறயேமனமே
ஆசாபாசங்களும் நீயாய். 45

பாசங்களைந்து பதியிலிருந்துகொண்டு
பேசரியகாலைப் பிடித்திருக்க-நேசமுடன்
ஒருவருங்கூடி ஒதாந்தஞானத்தை
தாமொருவனுயிருக்கத் தங்கு. 46

தங்குநெடுவெளியில் சகலங்களுங்கடந்து
யெங்குமொன்றுய் யிருக்காமல்-மங்கு
கருவானய்நெஞ்சே கரிக்காலதூதன்
வருவானேயென்ன வகை. 47

என்னவகைசெய்தோம் யெமதூதருவந்தாக்கால்
பின்னையென்னஒட்டானே பேய்நெஞ்சே-சொன்ன
படியேகேள் தூதர்களும் பரிந்துவருமுன்னே
யடிதேடிக்கொண்டே யமர். 48

அமறும்மனம்புத்தி யாங்காரமோடுசித்தம்
அமறும்பொழுதுவேறுனோர்-அமரும்
கோவென்றுரைத்தநமன் கொண்டுபோம்போதறிவு
வாவென்றல்நெஞ்சே வராது. 49

வாராதுநெஞ்சே மயக்கம்வருமுன்னே
வேறனைதப்பிடித்து மேலேரி-பாராமல்
பொய்யிலேநில்லாதே புத்திகெடாதேயிருந்தால்
மெய்யிலேநின்றநீவோ மெய். 50

மெய்யாறுவீடுகளாய் மேலாம்படைவீடாய்
ஐயாறும்மாறும் மருபத்தாய்-மெய்யாக
கண்டதெல்லாம்நான்காண் காணுதனைத்தேடி
கண்டுருகிநெஞ்சே கனி. 51

கனியருந்தமாட்டாமல் காயருந்துறய்மனமே
கனிருசிபோலாகுமோ காய்தான்-யினியதுகேள்
நானும்நீயும்கனிகாண் நடுவிருந்ததேருசிகாண்
தேனும்பாலும்போலே சிவன். 52

சிவதவங்களைத்தேடி சியெழுத்தையூடறுத்து
சிவதவங்களைத்தேடி சேருமல்-அபதபங்கள்
பண்ணுதேநெஞ்சேகேள் பாரவினைவந்தாக்கால்
யெண்ணுதே அஞ்சாதே யேங்கு. 53

யேங்காதேநெஞ்சேகேள் யெவ்வினைகள்வந்தாலும்
யேங்காதேசத்தும் யிளையாதே-தங்காமல்
கொண்டவனும்செத்தவனும் கூட்டத்தானும்வந்தால்
னின்றுகுறித்துண்மையிதென் றெண். 54

யெண்ணரியநெஞ்சே யினியபால்தன்னை
அன்னந்தண்ணீர்நீக்கி யுண்ணும்-தன்மைபோல்
துன்பங்களைத்துலைத்து தூயவெழியூடுருவா
யின்பங்களைச்சேர்ந் திரு. 55

சேர்ந்திருவோரும்பாலும் தேனும்போலேகலந்து
வாய்ந்ததிலேயுள்ளுரிசை யாகாமல்-போங்காமல்
தத்திமறக்காலன் வருவானேவந்தாக்கால்
யேத்தப்படுவாநெஞ்சே யெவன். 56

எவனிருந்துநெஞ்சே யெதுப்பாறுமுண்டா
கவனமறநின்று கருதுநல்லால்-புவனமெல்லாம்
வித்துபிரெல்லாங்கழண்டு விண்ணுடைந்துதேமனமே
மற்றுடலையுண்குதே மண் 57

மண்ணெழுந்தும்நீர்யெழுந்தும் வாய்வெழுந்துந்தீயெழுந்தும்
விண்ணெழுந்துங்கூடி ஒருவீடாகி-நண்ணரிய
மாயமெல்லாமுண்டாக்கி வைத்தான்காண்நெஞ்சே
யிக்காயமெல்லாம்ஞானல் கருது. 58

கருவழித்தால்வித்தையில்லாக் காரணம்போல்நெஞ்சே
கருவழிந்ததெல்லாம் கண்டதெல்லாம்-கருதி
திரியாதேநெஞ்சே சிவன்செயலேயல்லால்
மதியாரியில்லாக்கால் வந்து 59

வந்துதவும்நாதாந்த வாகனைக்கண்டேவணங்கித்
தந்திரமாய்ச்சென்றுதரியாமல்-அந்தரத்தில்
விட்டபட்டம்போலலைந்து வெவ்வினையினால்மனமே
தட்டுகெட்டுப்போகாதே காண். 60

தானந்தவமுயர்ச்சி தாடாண்மையோடுநெஞ்சே
வானம்பிறந்து வழிகூடி-ஞானமதில்
நீயுமொருநிழலில் நின்றங்கிளைப்பாறி
தோயுமதிதானே துடங்கு. 61

துடங்குவினையறுத்து சுத்தமெலாங்கழித்து
அடங்குமிடத்தில் அடங்காமல்-கிடந்து
பறந்தெடுத்தகுஞ்சதுபோல் பதைக்கிறயேமனமே
அறுஞ்சுரப்புமாயிதன் னடியில். 62

மதனசறத்தால்மனமே வையகமெல்லாமயங்கி
விதனத்துறக்கமரங்குலவல்லால் வேரில்லை-மதனாலே
சத்துச்சுகத்தைனத்தி தானலையவேண்டாங்காண்
மெத்தசுகத்தை வெருத்து 63

வெருத்துவெருத்துகொண்டாபோல் வீணிலேநெஞ்சே
பொரித்தமக்கினைப்போல் போகதே-குரித்தடுத்து
தேடியேவாசிதனை சேர்ந்துகலந்தபொருள்
கூடினலாமோ குணம். 64

குணங்கள்பலவிதமாய் கொள்ளாதேநெஞ்சே
வணங்குங்குணமாக வந்து-இணங்கியே
மண்டலமெலாங்கடந்து மகாவீட்டைத்திறந்து
கண்டெடுத்துக்கொள்ளவோ கனம். 65

கனதனத்துமாதர் கைக்காதல்கொண்டாப்போல்
வினையறுப்பானைக்குருகவேண்டாமோ-தினமனமே
சோதித்தானல்லாமல் சுபகாரியமாக
போதித்தால்கொள்ளிலையோ புத்தி. 66

புத்திதரும்வித்வைததரும் பொல்லாப்பில்லாமல்நெஞ்சே
சித்திமுத்திபேரின்பம் சேர்ந்திடலாம்-நித்தநித்தம்
தானந்தமானதொரு சற்குருவோடேபழகி
ஆனந்தமுண்டிருக்க லாம். 67

கால்வழிசென்று கருப்பசுக்குழிக்கிக்கீழ்
மூலமுற்றநல்வழியே மூழ்கினறி-மாலே
இருட்டறுத்துப்போடாமல் யென்பாவிநெஞ்சே
திருட்டுவித்தைசெய்கிறாய் சென்று. 68

சென்றுசிவனடியில் சேர்ந்தபெரும்பாம்பு
ஒன்றுமிகவாசியைத்தான் ஓட்டாமல்-நன்றாய்
நிலையாகநில்லாமல் நீயலைகிறாய்மனமே
அலைவாயினில்துரும்பு மாய். 69

தாய்தந்தைபெண்டுபிள்ளை தானென்றிரங்கிநித்தம்
காய்பரிக்கிறாயே கனியிருக்க-தாய்தந்தை
யெத்தனைபேர்பெத்தாரோ யென்மனமேநாமுந்தான்
யெத்தனைபேரைபெத்தோம் யிங்கு. 70

இங்குஅங்குமாய்மனமே யீடழியவேண்டாங்காண்
அங்கம்பொருளாய் அறிந்துகொண்டு-எங்குமெங்கும்
நாமேசிவமாக நாடினால்ஞானமொழி
தாமேஅருளைத் தரும். 71

அருளில்லாதார்க்கு அருளறிவுதங்குமோ
அருளறிவுதானல்லோ ஆனந்தம்-அருளறிவு
தேடுவதுங்கூடுவதும் சிந்தையானந்தமுடன்
ஆடுவதும்தானறிவி னால். 72

நாலெழுத்துஆறு நடுவெழுத்துயிரைந்து
ஓடினால்மூன்றி றெடுபதினாலாகுமே-ஓதாய்நீ
ஓரெழுத்தைகண்டுறங்கி உன்னோடுறங்கிநெஞ்சே
ஓரெழுத்திலேசென் றுறை. 73

உறைகளத்திருப்போலே உள்ளமலங்களெல்லாம்
அரைத்துடைந்துநெஞ்சே யருந்தியிலே-கித்தி
புளியம்பழத்தோடு போலிருக்கவேணும்
உடலழியுங்காலங்களுக்கே. 74

காலங்கழிந்திடுமுன் கடைவாயில்பாலுறுமுன்
வேலங்கனைய விழிமடவார்-யேல
குழியில்வைத்துமாறடித்து கூப்பிடுமுன்மாய்கை
களையெடுத்துப்போடுமுன் கண்ணால். 75

கண்ணாலேஞானம்கருதாமல் நெஞ்செநீஎண்ணாத
மாய்கையெல்லாம்யெண்ணுகிறாய்-நன்றாய்கேள்
பார்க்கவேணுந்தனையும் பத்திரைமாத்துத்தங்கம்
ஆக்காமல்போகாதோ உன்னால். 76

ஒண்ணாலேநெஞ்சமே ஊழ்வினைவந்தாலும்
எண்ணாருநீபாம்பின்வரிய் தேரைப்போல்-முன்னாலே
அகப்பட்டுப்போகாதே ஆனந்தமெய்விளக்கு
நம்பித்துணைக்குமுற்றும் நம்பு. 77

நம்பினான்றன்னை நடுவணையிலேயிருந்து
கும்பிடாதார்க்குங் குறையுண்டோ-நம்பி
பளிங்கொளிபோல்நெஞ்சே பரந்திடலாமேயெங்கும்
மெழுகணலோடே சேருமே. 78

ஏமன்வருமுன்நெஞ்சே யிருவினையுமேரென்றும்
சாமநடுவதனில்சார்ந்ததிலே தங்க-மனமுட்டினே
காலனையும்வென்றுசில காமனையும்வென்றுபின்பு
பாலிருக்கலாமதுநாம் பார். 79

பாரயனும்பாலும் பரமருத்திரனும்
காரணையவாரணத்தை தான்கண்டு-சீரானமனமே
நக்கத்திடைநடுவே நற்கனகபொற்பதியில்
சொற்கனத்தற்பதியில் தோன்றுமே. 80

தோன்றுமேயெல்லாச் சுகமுற்றதில்மனமே
தோன்றுமேஆனந்தச் சுந்தரிபின்-தோன்றுமே
அக்ஷரச்சுருக்கினோடு அக்கரப்பெருக்கமுடன்
உச்சரித்துரைக்கிதென்ற உண்மை. 81

உண்மையிதுகாண்மனமே ஒளியிருந்தவீடதுகாண்
உண்மைசிவனிருக்கும் ஊறுகாண்-உண்மை
கருமைதங்கிஒளியெழுந்து கனத்ததந்தியுள்பதங்கள்
மருவுதங்கியினியுகந்த வாறு. 82

வருந்தும்பொழுதுகாண் மாயையாய்நெஞ்சே
வருந்தும்குணமாகவந்து-வருந்தும்
யிருவினைதுடக்கறுத்து யெழுவகைபிறப்பறுக்கும்
கருமலத்திலுக்கறுங் காண். 83

காண்மனமேசத்திசிவம் ஒன்றுககாரணத்தை
காண்மனமேமாலையனுங் காணரிதை-காண்மனமே
செம்பொன்னம்பலத் துள்ளோர்செழுஞ்சொலென்று
மன்றுலொன்றும் அம்பலத்தில்ஆடும்நடனம். 84

நடனமதுபார்மனமே நயனத்திடைநடுவே
நடனமதுநாலாம் பதங்காணும்-நடனம்
பதிமதிவித்தாய்மனமே பலகெதிவித்தாயெனவே
அதிவிதசித்தாந்த மாடும். 85

ஆடும்பதிமனமே அம்பலத்தைசுட்டுநடனம்
ஆடும்பரமகுரு ஆனந்தம்-ஆடுகின்ற
கூற்றதனைகூற்றற்று சுத்தபித்தனைத்தசுத்தா
சித்தநித்த னைச்சித்தத்திலுத்து நில். 86

நில்லுநிலவறமாய் நேசமுடனேபதியில்
நில்லுபிறவியற நீநெஞ்சே-நில்லு
கனல்மதியும்தருமிடரும் கதிரெழுந்துங்கலைமதியும்
புனலொடுசெஞ்சடைமுடியும் போற்றி. 87

போற்றித்தினமனமே பொல்லாக்குலங்கள்விட்டுக்
காத்துங்கனலுங் கருத்துஒன்றுய்-பார்த்தரிவால்
சுத்தமலபித்தையத்து சுற்றஒழிசுற்றிலுத்து
சற்றமறித்துத்ததிலே தங்கு. 88

தங்குநீசென்று சதாசிவத்திலேமனமே
மங்குக் கறுக்குழிகள்-வாதங்குல்
கருவும்புனலும் கதியும்கெதியும்
விதியும்திறுத்தான் வெளி. 89

வெளியில்வெளியாகி விண்ணவன்றானாய்மனமே
வெளியிலொளி யாயிருக்க-வெளியிரவு
கரியுரித்துப்போற்றவனை கதிர்மதியைச்சென்றானை
கருவறுத்துப்பார்த்தாலே காண். 90

காணுமனமே கரிகாலனைவதைத்துக்
காணுலகமெல்லாம் காணுருவாய்-தாணுவாய்
மனவிரகமானபுலி மன்றுளன்று நடனமிடும்
கனகரதினசெயலுற்ற பாதம். 91

பாதத்தானஞ்செழுத்தான் பரமபதத்தான்சிங்க
நாதத்தானென்றுநெஞ்சே நன்றாக-போதத்தான்
ஆரணந்தானோடைந்து அண்டமெல்லாம்சுட்டதிரு
நீரணிந்துகொண்டிருப்போம் நித்தம். 92

நித்தனாய்நிர்மலனாய் நின்றுலகம்மூன்றாக்கும்
கர்த்தனாய்அஞ்செழுத்தின் காரணமாய்-பெற்ற
குருவினிருபதமுனது குளிருமனமுருகிநினை
தருமனதுபற்றமனமே தான். 93

தானவனேஆகாட்டால் சண்டாளன்இழுத்தடிப்பான்
தானவனுமங்கேதரிக் கொட்டான்-மான்மனையார்
கலங்குங்கலவியிலே கருதித்தான்கொடுப்பான்
முதல்நினைக்கும்படிதேரு நெஞ்சே. 94

நெஞ்சேயுனக்குநிலவரமாய் சொன்னதெல்லாம்
நெஞ்சேயென்சொல்லொன்றும் நிகழாதே-நெஞ்சே
கருத்திச்சையிச்சைதள்ளி கருத்தொன்றுசெப்பசித்தாய்
கருத்தககோசலத்தள்ளி கருத்துள். 95

உள்ளிருந்துநெஞ்சே உலாவுஞ்சிவகுருவை
வெள்ளெருக்கன்பூச்சூடும் மேனியனே-உள்ளே
மன்முருகப்பார்த்தான் மலைசிலையாய்ச்சென்றானை
உனதறிவால்பார்த்து ஓது. 96

ஓதுநீநெஞ்சேகேள் ஓரெழுத்துமந்திரத்தால்
ஆதியாய்எங்கும் அமர்ந்தானை-ஓதினாள்
கடியகொடுமிடியகலும் கடியகொடுமணியகலும்
கடியவிட்டணுகாமல் காற்கும். 97

காற்குந்தினமனமே கடியப்பிறப்பறுத்து
கார்க்கும்பலபிணிநோய் காட்டாமல்-நோக்கும்
யன்றுமிதைபகல்வெளியில்வளருதமதனை
யுந்தியிலுணாதி வாழ். 98

வாழுநீநெஞ்சே மயங்கித்திரியாதே
யேழெழுத்துக்கப்பாலிருப்பானை-யேழை
வருத்தநதிர்த்தனன்பன் மனசந்தில்தங்கி
பரித்தரத்தினக்காணத்தே பணி. 99

பணிந்துதுதிமனமே பல்லுயிர்க்கட்கெல்லாம்
அணுவிலணுவாக யிருந்தானை-துணிவாய்
பிறவாதிருக்கவும் பேரின்பவாழ்முதலை
திறமாகநம்புநெஞ்சே செலுத்து. 100

பட்டணத்தார் ஞானம்-௱
முற்றிற்று.

உ

சிவமயம்.

பட்டினத்தடிகளின்சீடராகிய

பத்திரகிரியார் சரித்திரசுருக்கம்.

இல்லரத்தவர்கள் சொல்லுதற்கரிய வல்லவராகிய துல்லிய மனதுடைய பட்டணத்துசுவாமிகள் தன்வீடுநாடு முதலியவற்றை யகன்று சகலதேசமுந் திரிந்து ஐயமேற்பதில்லை யென் றுறுதிக் கொண்டு (பத்திரகிரிமகாராசன்) ஊர்ப்புரத்திலுள்ள கணபதியாலயமடைந்து ஞானநிஷ்டை கூடியிருக்குஞ் சமையம் கள்வர் சிலர் கூட்டமிட்டு பத்திரகிரி யரசன் மனையிற்புகுந்து வெகுபொருள்களைக் கவர்ந்து போகுங் கால்வழியிலுள்ள கணபதிக்கொன்று பரிசளிக்க நினைத்து ஓர் இரத்தின ஆரத்தை வீசாட்டி ஏகுங்கால் அவ்வாபரணம்பட்டினத்தடிகள் கண்டத்திலமைய உதையத்தில் அரண்மனைக் காவலர்கண்டு இவருங் கள்வரை சேர்ந்தவரென்று வற்புறுத்தி அரசன் முன்னிலைவிடுக்க அவர் வினாக்கட்கெல்லாம் சிவசிவ வென்றிறைஞ்சிய அடிகளைக் கண்ணுற்ற வரசன் சற்று மயங்கி அமைச்சன் மனம்படி ஆக்கினை தருகவென் றசைக்க கழுவேற்ற நியமித்தனர், (பட்டினத்தடிகள்) காவலரால்கழுமரத்தை யடைந்து சற்றும் சலிப்புறாது புன்னகைக் கொண்டு (என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே.) என்னுஞ் செய்யுளைப்பாட கழுமரம்கொழுந்துவிட்டெரியக் கண்டகாவலர் அரசனுக்கறிவிக்க திடுக்கிட்டு பாதசாரியாயோடிவந்து (பட்டினத்தடிகள்) பாதத்தில்விழ மன்னன் மனபக்குவமறிந்து கண்ணோக்க (பத்திரகிரியரசன்) இராஜகோல நீக்கி உடன் தொடர நீ திருவிடைமருதூருக்குச் செல்லெனவாக்களித்து மீண்டும் சிவஸ்தலங்கள் திரிந்து திருவிடை மருதூரை யடைந்து கீழ்கோபுரவாயிலில் வீற்றிருக்க (பத்திரகிரியரசனும் பலஸ்தலங்களுந் திரிந்து திருவிடைமருதூரை யடைந்து குருவைக்கண்டு வணங்கி அவர்சொற்படி மேலைக்கோபுர வாயிலிலிருந்து பிச்சையேற்று வந்து குருநிவேதனஞ் செய்து மீதி சேடத்தையுண்டு யோகமெய்தி யிருந்தனர். இவ்வாறிருக்க பத்திரகிரியாரிடம் ஒரு பெட்டைநாய்க் குட்டி வந்து வாலைகுழைத்து தன்பசிநோயைக்குறிப்பித்து நிற்க அதனையறிந்து தமது சேடப் பிரசாதமளிக்க பசியாறி அவருடன் கூடவேயிருக்க இதைச்

சிவபெருமானறிந்து பட்டினத்தாரிடஞ் சென்று அதிக பசியுள்ள வர்போல்அபிநயிக்க பட்டினத்தடிகள் யான்கோவணந் தாங்குவதே பாரமாக வுடையேன் மேற்குகோபுரவாயிலி லிருக்கின்றான்சமுசாரி அவனண்டையேகினால் பசியாற்றுவானென இதைச் செவியுற்ற ஈசன் மேற்கு கோபுரவாயிலி லிருக்கின்ற (பத்திரகிரியாரை) யடுத்துகீழ் திசைவாயிலிலிருக்கும் (பட்டனத்தடிகள்) புகன்றதை யுரைக்க (பத்திரகிரியார்) இவ்வோடும் நாய்க் குட்டியுமோ என்னைச் சமுசாரியாக்கின என்று பாத்திரத்தை எடுத்தெறிய அப்பாத்திரம் நாய்சிரசின் பேரிற்பட்டு மரித்தது உடனே சிவபெருமான் மறைந்தருள பின்பு (பத்திரகிரியார் திருப்புலம்பல் முதலிய பலதமிழ்க் கண்ணிகளு மியற்றியும் சிவயோக மெய்தியுமிருக்க மரித்தநாய் காசிராஜன் மகளாய் பிறந்துவளர்ந்து பக்குவமடைந்ததை அரசனறிந்து புரோகிதரையழைத்து என் புத்திரிக்குத் தக்க புருடனை நியமிக்க வேண்டுமென அதைக்கேள்வியுற்ற பெண் திடுக்கிட்டு பிதாவை நோக்கி யானொருவனுக் குரியவளல்ல திருவிடை மருதூரில் மேலைக்கோபுரவாயளில் வீற்றிருக்கும் எனது குருநாதனிடம் ஒப்பு விப்பீரென அரசன் அதிசயித்து உண்மையை விசாரித்தறிந்து புத்திரியை (பத்திரகிரியார்) முன் கொண்டு வந்து விட அவர் நிஷ்டையி லிருந்து விழித்து நோக்க அப்பெண் அடிநாய்மீண்டுந் திருவடியை நாடிவந்ததுயென யாவுமறிந்த ஞானியரெழுந்து அப்பெண்ணின் கரத்தைப்பற்றிச் சென்று குருவாகிய (பட்டினத்தடிகளிடம்) விட்டு நம்பிச்சிட்ட முண்டநாய்க்கு மிப்பிறவிநோய் வரலாமோமென (பட்டினத்தடிகள்) (அவன் செயலன்றி யாவதொன்றில்லை) யென திருவருளை நாடினர் அப்போது ஒருபெருஞ் சோதிதோன்றி அதில் அப்பெண்ணுடன் (பத்திரகிரியார்) மறைச்சோதியும் மறைந்தது.

உ

சிவமயம்.

பத்திரகிரியார் அருளிச்செய்த

மெஞ்ஞானப் புலம்பல்.

முத்திதரும்வேத மொழிந்தபுலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவதெக்காலம். 1

ஆங்காரமும்மடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம். 2

நீங்காச்சிவயோக நித்திரைகொண்டேயிருந்து
தேங்காக்கருணைவெள்ளந் தேக்குவதுமெக்காலம். 3

தேங்காக்கருணைவெள்ளந் தேக்கியிருந்துண்பதற்கு
வாங்காமல்விட்டகுறை வந்தடுப்பதெக்காலம். 4

ஓயாக்கவலையினு ளுள்ளுடைந்துவாடாமல்
மாயாப்பிறவி மயக்கறுப்பதெக்காலம். 5

மாயாப்பிறவி மயக்கத்தையூடறுத்துக்
காயாபுரிக்கோட்டை கைக்கொள்வதெக்காலம். 6

காயாபுரிக்கோட்டை கைவசமாய்க்கொள்வதற்கு
மாயாவனுபூதி வந்தடுப்பதெக்காலம். 7

சேயாய்ச்சமைந்து செவிடூமைபோற்றிரிந்து
பேய்போலிருந்துன் பிரமைகொள்வதெக்காலம். 8

பேய்போற்றிரிந்துன் பிணம்போற்கிடந்துபெண்ணைத்
தாய்போனினைத்துத் தவமுடிப்பதெக்காலம். 9

கால்காட்டிக்கைகாட்டிக் கண்கள்முகங்காட்டி
மால்காட்டுமக்கையரை மறந்திருப்பதெக்காலம். 10

பெண்ணினல்லாராசைப் பிரமைதனைவிட்டொழிந்து
கண்ணிரண்டுமூடிக் கலந்திருப்பதெக்காலம். 11

வெட்டுண்டபுண்போல் விரிந்தவல்குற்பைதனிலே
தட்டுண்டுநிற்கை தவிர்வதுவுமெக்காலம். 12

ஆறாதபுண்ணி லழுந்திக்கிடவாமல்
தேறாதசிந்தைதனைத் தேற்றுவதுமெக்காலம். 13

தந்தைதாய்மக்கள் சகோதரரும்பொய்யெனவே
சிந்தைதனிற்கண்டு திறக்கறுப்பதெக்காலம். 14

மன்னுயிரைக்கொன்று வதைத்துண்டுழலாமல்
தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம். 15

பாவியென்றேபேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல்
ஆவிநின்றருத்திரத்தை யறிவதினியெக்காலம். 16

உளியிட்டகல்லு முருப்பிடித்தசெஞ்சாந்தும்
புளியிட்டசெம்புபோற் பொருளாவதெக்காலம். 17

வேடிக்கையஞ்சொகுசு மெய்ப்பகட்டும்பொய்ப்பகட்டும்
வாடிக்கையெல்லா மறந்திருப்பதெக்காலம். 18

பட்டுடையுமொப்பனையும் பாவனையுந்தீவினையும்
விட்டுவிட்டுன்பாதம் விரும்புவதுமெக்காலம். 19

ஆமைவருமாட்கண் டைந்தடக்குஞ்செய்தார்போல்
ஊமையுருக்கொண் டொடுங்குவதுமெக்காலம். 20

தண்டிகையுஞ்சாவடியுஞ் சாளிகையுமாளிகையுங்
கண்டுகளிக்குங் கருத்தொழிவதெக்காலம். 21

அத்தனிருப்பிடத்தை ஆராய்ந்துபார்த்துநிதஞ்
செத்தசவம்போற் றிரிவதினியெக்காலம். 22

ஒழிந்த தருமைத்தினைவைத் தள்ளெலும்பு வெள்ளெலும்பாய்
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம். 23

அற்பசுகமறந்தே யறிவையறிவாலறிந்து
கெர்ப்பத்தில்வீழ்ந்துகொண்டு கோளறுப்பதெக்காலம். 24

கெர்ப்பம்-யானைப்படுகுழி.

கருப்படுத்திலங்கையான் கைபிடித்துக்கொள்ளாமுன்
உருப்படுத்தியாள உடன்படுவதெக்காலம். 25

தூண்டுவிளக்கணைய தொடர்ந்திருள்முன்சூழ்ந்தாற்போல்
மாண்டுபிழைத்துவந்த வகைதெரிவதெக்காலம். 26

தூரியினின்மீன்போற் சுழன்றுமனம்வாடாமல்
ஆரியனைத்தேடி யடிபணிவதெக்காலம். 27

எண்ணாறுகமிருந்து எய்தாதவீடுபெற
வெண்ணீறுபூசி விளங்குவதுமெக்காலம். 28

அவ்வேடம்பூண்டிங் கலைந்துதிரியாமற்
சிவ்வேடம்பூண்டு சிறந்திருப்பதெக்காலம். 29

அண்டருக்காநஞ்சருந்தி அம்பலத்திலாடுசிவன்
தொண்டருக்குத்தொண்டனெனத் தொண்டுசெய்வதெக்காலம்.

பன்றிவடிவெடுத்துப் பாரிடந்துமால்காணக்
குன்றில்விளக்கொளியை கூறுவதுமெக்காலம். 31

தித்திக்குந்தெள்ளமிர்தை சித்தாந்தத்துட்பொருளை
முத்திக்குவித்தை முதனினைப்பதெக்காலம். 32

வேதாந்தவேதமெல்லாம் விட்டொழிந்தேநிஷ்டையிலே
ஏகாந்தமாக யிருப்பதினியெக்காலம். 33

மற்றிடத்தைத்தேடியென்றன் வாழ்நாளைப்போக்காமல்
உற்றிடத்தைத்தேடி யுறங்குவதுமெக்காலம். 34

இன்றுளோர்நாளை யிருப்பதுவும்பொய்யெனவே
மன்றுளோர்சொல்லும் வகையறிவதெக்காலம். 35

கஞ்சாவபினியுடன் கள்ளுண்டுவாடாமற்
பஞ்சாவமிர்தம் பருகுவதுமெக்காலம். 36

செஞ்சலத்திறூற்றிரண்ட செனனமோக்ஷம்பெறவே
சஞ்சலத்தைவிட்டுன் சரணடைவதெக்காலம். 37

கும்பிக்கிரைதேடக் கொடுப்பாரிடந்தோறும்
நம்பித்திரிகை தடுப்பதினியெக்காலம். 38

ஆடுகின்றசூத்திரந்தா னறுமளவுமேதிரிந்து
போடுகின்றநாள்வருமுன் போற்றுவதுமெக்காலம். 39

நவசூத்திரம்போட்டு நானலைநீயென்றிருந்த
நவசூத்திரத்தைத் தெறிந்தறிவதெக்காலம். 40

மறந்துமலசலங்கள் மாயும்புழுக்கூட்டைவிட்டுக்
கரந்துனடியிணைக்கீழ்க் கலந்துநிற்பதெக்காலம். 41

இம்மைதனிற்பாதகஞ் யிருவினைக்கிடாயெடுத்த
பொய்மைதனிற்போட்டுன்னைப் போற்றிநிற்பதெக்காலம். 42

உப்பிட்டபாண்ட முடைந்துகருக்கொள்ளுமுன்னே
அப்பிட்டவேணியுனைக் காள்படுவதெக்காலம். 43

சேவைபுரிந்து சிவரூபகாட்சிகண்டு
பாவைதனைக்கழித்துப் பரமடைவதெக்காலம். 44

காண்டத்தைவாங்கிக் கருமேகமீண்டதுபோல்
பாண்டத்தைநீக்கிப் பரமடைவதெக்காலம். 45

சோற்றுத்துருத்திதனைச் சுமந்தலுத்துவாடாமல்
ஊத்தைச்சடம்போட் டுனையடைவதெக்காலம். 46

வல்லினவேதுகை.

தொடக்கைச்சதமெனவே சுமந்தலைந்துவாடாமல்
உடக்கைசுழற்றி உனையறிவதெக்காலம். 47

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயால்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம். 48

கூரறியநால்வேதங் கூப்பிட்டுங்காணாத
பாராரகசியத்தைப் பார்த்திருப்பதெக்காலம். 49

புல்லாய்விலங்காய்ப் புழுவாய்நரவடிவா
யெல்லாப்பிறப்பி னிருளகல்வதெக்காலம். 50

தக்கும்வகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவம்வந்துன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம். 51

புருவத்தைவரொடும் புல்கியின்பங்கொள்வதற்குத்
தெரிவைப்பருவம்வந்து சிக்குவதுமெக்காலம். 52

தெரிவையறும்பக்குவத்தின் சீராட்டெல்லாமறிந்து
குருவையறிந்தேதனினைத்துக் கும்பிடுவதெக்காலம். 53

வம்படிக்குமாதருடன் வாழ்ந்தாலுமன்னுபுளி
யம்பழமுமோடும்போ லாவதினியெக்காலம். 54

பற்றற்றுநீரிற் படர்ந்தவன்னம்பச்சிலைபோல்
சுற்றற்றுநீக்கிமனந் தூரநிற்பதெக்காலம். 55

சல்லாபலீலையிலே தன்மனைவிசெய்தசுகம்
சொல்லாரக்கண்டெனக்குச் சொல்வதினியெக்காலம். 56

மருவுமயற்புருடன் வருநேரங்காணாமல்
உருகுமனம்போலெனுள முருகுவதுமெக்காலம். 57

தன்கணவன்றன்சுகத்திற் றன்மனம்வேறானதுபோல் 58
என்கருத்திலுன்பதத்தை யேற்றுவதுமெக்காலம்.

கூடிப்பிரிந்துவிட்ட கொம்பனையைக்காணாமல் 59
தேடித்தவிப்பன்போல் சிந்தைவைப்பதெக்காலம்.

எவ்வனத்தின்ஸ்திரீமோகம் எப்படியுண்டப்படிபோல் 60
கவ்வனத்திலுன்னைக் கலந்திருப்பதெக்காலம்.

கண்ணாலருவி கசிந்துமுத்துப்போனாதிரச் 61
சொன்னபரம்பொருளைத் தொகுத்தறிவதெக்காலம்.

ஆகமிகவுருக வன்புருகவென்புருகப் 62
போகவநுபூதி பொருந்துவதுமெக்காலம்

நீரிற்குமிழிபோ னிலையற்றவாழ்வைவிட்டுன் 63
பேரிற்கருணைவெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்,

அன்பையுருக்கி யறிவையதன்மேற்புகட்டித் 64
துன்பவலைபாசத் தொடக்கறுப்பதெக்காலம்.

கருவின்வழியறிந்து கருத்தைச்செலுத்தாமல் 65
அருவிவிழிசொரிய அன்புவைப்பதெக்காலம்.

தெளியத்தெளியத் தெளிந்தசிவானந்தத்தேன் 66
பொழியப்பொழியமனம் பூண்டிருப்பதெக்காலம்.

ஆதாரமூலத் தடியிற்கணபதியைப் 67
பாதாரவிந்தம் பணிந்துநிற்பதெக்காலம்.

மண்வளைந்தாற்கறிக்கில் வளைந்திருந்தவேதாவைக் 68
கண்வளைந்துபார்த்துள்ளே கண்டிருப்பதெக்காலம்.

அப்புரநடுவே யமர்ந்திருந்தவிண்டுவை 69
உப்புக்குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவதெக்காலம்.

மூன்றுவளையமிட்டு முளைத்தெழுந்தகோணத்தில் 70
தோன்றுமுருத்திரனைத் தொழுதுநிற்பதெக்காலம்.

வாயுமறுகோணமதில் வாழுமகேச்சுரனைத் 71
தோயும்வகைகேட்கத் தொடங்குவதுமெக்காலம்.

வட்டவழிக்குள்ளே மருவுஞ்சதாசிவத்தைக் 72
கிட்டவழிதேடக் கிருபைசெய்வதெக்காலம்.

உச்சிக்கிடைநடுவே யோங்குகுருபதத்தை
நிச்சயித்துக்கொண்டிருந்து நேர்வதினியெக்காலம். 73

பாறாகிபார்மீதிற் பஞ்சவர்ணம்தானாகி
வேறாகிமுளைத்த வித்தறிவதெக்காலம். 74

கட்டறுக்கவொண்ணாக் கருவிகரணாதியெல்லாஞ்
சுட்டறுத்துநிட்டையிலே தூங்குவதுமெக்காலம். 75

கள்ளக்கருத்தையெல்லாங் கட்டோடுவேரறுத்திங்
குள்ளக்கருத்தை யுணர்ந்திருப்பதெக்காலம். 76

அட்டகாசஞ்செலுத்து மவத்தைச்சடலத்துடனே
பட்டபாடத்தனையும் பகுத்தறிவதெக்காலம். 77

அறிவிக்கருவியுட னவத்தைபடும்பாட்டையெல்லாம்
பிறியவுடனிருத்திப் பெலப்படுவதெக்காலம். 78

பூதம்பொறிக்கரணம் போந்தவிந்துநாதமுமாய்
பேதம்பலவிதமும் பிறித்தறிவதெக்காலம். 79

தோன்றாசைமூன்றுந் தொடர்ந்துவந்துசுற்றாமல்
ஊன்றாசைவேரையடி யூடறுப்பதெக்காலம். 80

புன்சனனம்போற்றுமுன்னே புரிவட்டம்போகிலினி
யென்சனனமீடேறு மென்றறிவதெக்காலம். 81

பட்டனடுவினின்று நற்றிரோதாயியருள்
கிட்டவழிகாட்டிக் கிருபைசெய்வதெக்காலம். 82

நானேநானென்றிருந்தேன் நடுவினிற்கட்டழகி
தானேவெளிப்படுத்தித் தருவனென்பதெக்காலம். 83

அடர்ந்தமனக்காட்டை யஞ்செழுத்தாம்வாளாலே
தொடர்ந்துதொடர்ந்துவெட்டி சுடுவதினியெக்காலம். 84

ஐந்துபொறிவழிபோ யலைந்துமிந்தப்பாழ்மனதை
வெந்துவிழப்பார்த்து விழிப்பதினியெக்காலம். 85

இனமாண்டுசேர்ந்திருந்தோ ரெல்லாருந்தான்வரண்டு
சினமாண்டுபோகவருள் சேர்ந்திருப்பதெக்காலம். 86

அமையாமனதமையு மானந்தவீடுகண்டால்
இமையாமநோக்கி யிருப்பதினியெக்காலம். 87

கூண்டுவிடுஞ்சீவன்மெள்ளக் கோட்டாவிகொண்டாற்போல்
மாண்டுவிடுமுன்னானான் மாண்டிப்பதெக்காலம். 88

ஊனிறைந்தகாய முயிரிறந்துபோகுமுன்னம்
நானிறந்துபோகவினி நாள்வருவதெக்காலம். 89

கெட்டுவிடுமாந்தர் கெர்விதங்கள்பேசிவந்து
சுட்டுவிடுமுன்னென்னைச் சுட்டிருப்பதெக்காலம். 90

தோளேணிவைத்தேறித் தூரநடந்தெக்காலம்
நூலேணிவைத்தேறி நோக்குவதுமெக்காலம். 91

வாயோடுகண்மூடி மயக்கமுற்றுநில்லாமல்
தாயோடுகண்கூடித் தழுவிநிற்பதெக்காலம். 92

காசினியெலாநடந்து காலோய்ந்துபோகாமல்
வாசிதனிலேறி வருவதினியெக்காலம். 93

ஒளிபடருங்குண்டலியை யுன்னியுணர்வாலெழுப்பிச்
சுழிமுனையின்றாள்திரந்து தூண்டுவதுமெக்காலம். 94

இடைபிங்கலைநடுவே யியங்குஞ்சுழிமுனையில்
தடையறவேநின்று சலிப்பறுப்பதெக்காலம். 95

மூலநெருப்பைவிட்டு மூட்டிநிலாமண்டபத்தில்
பாலையிறங்கியுண்டு பசியொழிவதெக்காலம். 96

ஆகவெளிக்குள்ளே யடங்காப்புரவிசெல்ல
ஏகவெளியி லிருப்பதினியெக்காலம். 97

பஞ்சரித்துப்பேசும் பலகலைக்கெட்டாப்பொருளில்
சஞ்சரித்துவாழ்ந்து தவம்பெருவதெக்காலம். 98

மலமுஞ்சலமுமற்று மாயையற்றுமானமற்று
நலமுங்குலமுமற்று நானிருப்பதெக்காலம். 99

ஓடாமலோடி யுலகைவலம்வந்துசுற்றித்
தேடாமலென்னிடமாய்த் தெரிசிப்பதெக்காலம். 100

அஞ்ஞானம்விட்டே யருண்ஞானத்தொல்லைதொட்டு
மெய்ஞ்ஞானவீடுபெற்று வெளிப்படுவதெக்காலம். 101

வெல்லுமட்டும்பார்த்து வெகுளியெலாம்விட்டகன்று
செல்லுமட்டுஞ்சிந்தை செலுத்துவதுமெக்காலம். 102

மேலாம்பதந்தேடி மெய்ப்பொருளையுள்ளிருத்தி
காலாம்பதந்தேடி நான்பெறுவதெக்காலம். 103

எண்ணுததூரமெல்லா மெண்ணியெண்ணிப்பாராமல்
கண்ணாடிக்குள்ளொளிபோற் கண்டறிவதெக்காலம். 104

என்னையறிந்துகொண்டே னெங்கோமானோடிருக்கும்
தன்மையறிந்து சமைந்திருப்பதெக்காலம். 105

ஆறாதாரங்கடந்த வானந்தப்பேரொளியை
பேறாகக்கண்டுநான் பெற்றிருப்பதெக்காலம். 106

ஆணவமாயத்தா லழிந்துடலம்போகமுன்
காணிதலாசின்பமற்றுக் கண்டறிவதெக்காலம். 107

மும்மலமுஞ்சேர்ந்து முளைத்தெழுந்தகாயமிதை
நிர்மலமாய்க்கண்டுவினை நீங்கிருப்பதெக்காலம். 108

முன்னைவினைகெடவே மூன்றுவகைகாட்சியினால்
உன்னைவெளிப்படுத்தி யுருவதினியெக்காலம். 109

கண்ணிணொளிபாய்ந்ததுவுங் கருத்தறிந்துதொண்டதுவும்
விண்ணிலொளிகண்டதுவும் வெளிப்படுவதெக்காலம். 110

கனவுகண்டார்போலெனக்குக் காட்டிமறைந்தேயிருந்த
நினைவைப்பரவெளிமேல் நிறுத்துவதுமெக்காலம். 111

ஆரென்றுகேட்டதுவு மறிவுவந்துகண்டதுவும்
பாரென்றுசொன்னதுவும் பகுத்தறிவதெக்காலம். 112

நினைக்குநினைவுதொறும் நிறைந்தபரிபூரணத்தை
முனைக்குமேற்கண்டுகண்ணில் முளைத்தெழுப்பதெக்காலம்.

முப்பாழும்பாழாய் முதற்பாழுஞ்சூனியமாய்
அப்பாழும்பாழா யன்புசெய்வதெக்காலம். 114

சீரென்றெழுந்து தெளிந்துநின்றவான்பொருளை
நீரென்றுகண்டு நிலைபெறுவதெக்காலம். 115

வவ்வெழுத்தும் வாளாகுஞ்சிவ்வெழுத்தும்
அவ்வெழுத்தினுள்ளே யடங்கிநிற்பதெக்காலம். 116

எழுத்தெல்லாமண்டிறந்தே யேகமாய்நின்றநிலை
அழுத்தமாச்சிந்தைதலைவத் தன்புகொள்வதெக்காலம். 117

அருவாகியுருவாகி ஆதியந்தமாகிநின்று
குருவாகிவந்தென்னையாட் கொண்டருள்வதெக்காலம். 118

நானென்றறிந்தவனை நானறியாக்காலமெல்லாந்
தானென்றுநீயிருந்த தனுவறிவதெக்காலம். 119

என்மயமாய்க்கண்டதெல்லா மெண்ணெண்ணிப்பார்த்தபின்பு
தன்மயமாய்க்கண்டதிலே சார்ந்துநிற்பதெக்காலம். 120

ஒளியிலொளியா முருப்பிறந்தவாறதுபோல்
வெளியில்வெளியான விதமறிவதெக்காலம். 121

ஒளியிட்டமெய்ப்பொருளை யுள்வழியிலேயடைந்து
வெளியிட்டுசாத்திவைத்து வீடுறுவதெக்காலம். 122

காந்தம்வலித்திரும்பைக் கரத்திழுத்துக்கொண்டதுபோல்
பாய்ந்துபிடித்திழுத்துன் பதத்தில்வைப்பதெக்காலம். 123

பித்தாயங்கொண்டு பிரணவத்தையூடறுத்துச்
செத்தாரைப்போலே திரிவதினியெக்காலம். 124

ஒழிந்தகருத்தினைவைத் துள்ளெலும்புவெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம். 125

ஆதிகபிலர்சொன்ன வாகமத்தின்சொற்படியே
சாதிவகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம். 126

சூதுங்களவுந் தொடராவினையஞ்சுட்டிடக்காற்
றாதுந்துருத்தியைப்போட் டுனையடைவதெக்காலம். 127

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம். 128

கல்லாய்மரமாய் கயலாய்ப்பறவைகளாய்
புல்லாய்ப்பிறந்தஜென்மம் போதுமென்பதெக்காலம். 129

தக்குமவகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவமாயுன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம். 130

தூரோடிசைந்து சுழன்றதத்துவத்தை
வேரோடிசைந்து விளங்குவதுமெக்காலம். 131

பாதநடுமாறிப் பயந்தெழுந்தசித்திரத்தை
காதநடுமூலத் திருத்துவதுமெக்காலம். 132

ஓரின்பங்காட்டு முயர்ஞானவீதிசென்று
பேரின்பவீடுகண்டு பெற்றிருப்பதெக்காலம். 133

காரணமாய்வந்தென் கருத்தினுரைத்ததெல்லாம்
பூரணமாகக்கண்டு புகழ்ந்திருப்பதெக்காலம். 134

ஆயுங்கலைகளெல்லா மாராய்ந்துபார்த்ததற்பின்
நீயன்றுமில்லா நிசங்காண்பதெக்காலம். 135

குறியாகக்கொண்டு குலமளித்தநாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்பதெக்காலம். 136

மந்தடுத்துநின்று மருளாடுவார்போலே
பித்தடுத்துநின்னருளைப் பெற்றிருப்பதெக்காலம். 137

சாவாமற்செத்திருந்து சற்குருவின்பொன்னடிக்கீழ்
வேவாமல்வெந்திருக்க வேண்டுவதுமெக்காலம். 138

என்னையறியாம லிருந்தாட்டுஞ்சூத்திரநின்
தன்னையறிந்து தவம்பெறுவதெக்காலம். 139

உள்ளமறியா தொளிந்திருந்தநாயகனை
கள்ளமனந்தெளிந்து காண்பதினியெக்காலம். 140

வாசித்துங்காணாமல் வாய்விட்டும்பேசாமல்
பூசித்துந்தோன்றாப் பொருள்காண்பதெக்காலம் 141

பன்னிரண்டுகாற்புரவி பாய்ந்தசில்லடந்தட்டாமல்
பன்னிரண்டுசங்கிலிக்குட் பிணைப்பதினியெக்காலம். 142

நாட்டுக்காலிரண்டும்விட்டு நடுவுக்காலூடேபோய்
ஆட்டுக்காலிரண்டெனுள்ள யமர்ந்திருப்பதெக்காலம். 143

பாற்பசுவையோட்டி பதியில்வந்துசீராட்டிக்
காற்பசுவையோட்டியதிற் கட்டிவைப்பதெக்காலம். 144

பலவிடந்தேமனதைப் பாயவிட்டும்பாராமல்
நிலவரையினூடேபோய் நேர்படுவதெக்காலம். 145

காமக்கடல்கடந்து கரையேறிப்போவதற்கே
ஓமக்கனல்வளர்த்தி யுள்ளிருப்பதெக்காலம். 146

உதயச்சுடர்மூன்று முள்வீட்டிலேகொளுத்தி
இதயத்திருநடன மினிகாண்பதெக்காலம். 147

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறியேகடந்து
நாதாந்தமூல நடுவிருப்பதெக்காலம். 148

பட்டமற்றுக்காற்றில் பறந்தாடுஞ்சூத்திரம்போல்
விட்டுவெளியாக விசுவறிவதெக்காலம். 149

அட்டாங்கயோகமதற் கப்பாலுக்கப்பாலாய்
கிட்டாப்பொருளதனைக் கிட்டுவதுமெக்காலம். 150

ஒட்டாமலொட்டிநிற்கு முடலுமுயிரும்பிரித்தே
எட்டாப்பழம்பதிக்கிங் கேணிவைப்பதெக்காலம். 151

பாசத்தைநீக்கிப் பசுவைப்பதியில்விட்டு
நேசத்தினுள்ளே நினைந்திருப்பதெக்காலம். 152

ஆசாரநேயவ னுண்டானமும்மறந்து
பேசாமெஞ்ஞானநிலைப் பெற்றிருப்பதெக்காலம். 153

பல்லாயிரங்கோடிப் பகிரண்டமும்படைப்பே
அல்லாதுவேறில்லையென் றறிவதினியெக்காலம். 154

ஆதிமுதலாகிநின்ற அரியென்றவட்சரத்தை
ஓதியறிந்துள்ளே யுணர்வதினியெக்காலம். 155

சாத்திரத்தைச்சுட்டிச் சதுர்மறையைப்பொய்யாக்கிச்
சூத்திரத்தைக்கண்டு துயரறுப்பதெக்காலம். 156

அல்லும்பகலுமென்ற வறிவையறிவாலறிந்து
சொல்லுமுறைமலர்ந்து தூங்குவதுமெக்காலம். 157

இறங்குஞ்சராசரத்தி லெள்ளுமெண்ணெயும்போல்
முயங்குமந்தவேத முடிவறிவதெக்காலம். 158

ஊனுகிவூனி லுருவாகியெவ்வுலகுந்
தானாகிநின்ற தரிப்பறிவதெக்காலம். 159

என்னைவிட்டுநீங்காம லென்னிடத்திலிருக்க
உன்னைவிட்டுநீங்கா தொருப்படுவதெக்காலம். 160

இன்னதென்றுசொல்லவொண்ணா வெல்லையற்றவான்பொரு
ளைச், சொன்னதென்றுநானறிந்து சொல்வதினியெக்காலம்.

மனதையொருவில்லாக்கி வான்பொறியைநாணாக்கி
எனதறிவையம்பாக்கி யெய்வதினியெக்காலம். 162

என்னைப்பிறக்கவைத்தே யென்பரியையிடழித்த
உன்னைவெளியில்வைத்தே யொளித்துநிற்பதெக்காலம். 163

கடந்துகின்றதோணிதனைக் கழைகள்குத்திவிட்டார்போல்
நடத்துகின்றசித்திரத்தை நானறிவதெக்காலம். 164

நின்றநிலைபேராம நினைவிலொன்றுசாராமல்
சென்றநிலைமுத்தியென்று சேர்ந்தறிவதெக்காலம். 165

பொன்னும்வெள்ளியும் பூண்டுபொற்பதத்தையுள்ளமைத்து
மின்னுமொளிவெளியே விட்டடைப்பதெக்காலம். 166

கூட்டிலடைப்பட்டபுழு குளவியருகொண்டதுபோல்
வீட்டிலடைப்பட்டருளை வேண்டுவதுமெக்காலம். 167

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போல்
உடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம். 168

அருணம்பிரகாச மண்டமெங்கும்போர்த்ததுபோல்
கருணைத்திருவடியிற் கலந்துநிற்பதெக்காலம். 169

பொன்னிற்பலவிதமாய் பூஷணமுண்டானதுபோல்
உன்னிற்பிறந்ததன்னி லொடுங்குவதுமெக்காலம் 170

நாயிற்கடைபிறப்பாம் நான்பிறந்துதுன்பமற
வேயிற்கனலொளிபோல் விளங்குவதுமெக்காலம். 171

சூரியகாந்திவெளி சூழ்ந்துபஞ்சைசுட்டதுபோல்
ஆரியன்றேற்றத் தருள்பெறுவதெக்காலம். 172

இரும்பிற்கனன்மூட்டி யிவ்வுருபோயவ்வுருவாய்க்
கரும்பிற்சுவைரசத்தைக் கண்டறிவதெக்காலம். 173

கருக்கொண்டமுட்டைதனைக் கடலாமைதானினைக்க
உருக்கொண்டவாறதுபோ லுனையடைவதெக்காலம். 174

வீடுவிட்டுபாய்ந்து வெளியில்வருவார்போல்
கூடுவிட்டுப்பாயுங் குறிப்பறிவதெக்காலம. 175

கடைந்தவெண்ணெய்மோரிற் கலவாரதுபோல்
உடைந்துதமியே னுனைக்காண்பதெக்காலம். 176

இருளைவெளிவிழுங்கி யேகவுருக்கொண்டார்போல்
அருளைவிழுங்குமிரு ளகன்றுநிற்பதெக்காலம். 177

மின்னெழுத்துமின்னொடுங்கி விண்ணிலுறைத்தாற்போல்
என்னுணின்றதென்னுள்ளே யானறிவதெக்காலம். 178

கண்டபுனற்குடத்திற் கதிரொளிகள்பாய்ந்தாற்போல்
கொண்டசுரூபமதைக் கூறறிவதெக்காலம். 179

பூணுகின்றதொன்னணிந்தாற் பொன்சுமக்குமோவுடலைக்
காணுகின்றவென்கரத்தின் கண்டறிவதெக்காலம். 180

செம்பிற்களிம்புபோற் சிவத்தைவிழுங்குமிக
வெம்பினின்றமும்மலத்தை வேறுசெய்வதெக்காலம். 181

ஆவியுங்காயமும்போ லாத்துமத்துநின்றதனைப்
பாவியறிந்துமனம் பற்றிநிற்பதெக்காலம். 182

ஊமைக்கனாக்கண் டுரைக்கறியாவின்பமதை
நாமறிந்துகொள்வதற்கு நாள்வருவதெக்காலம். 183

சாகாசிவனடியைத் தப்பாதாரெப்போதும்
போகாஉடலகன்று போவரென்பதெக்காலம். 184

நிட்டைதனைவிட்டு நினைவறிவுதப்பவிட்டு
வெட்டவெளியில் விரவிநிற்பதெக்காலம். 185

வெட்டவெளிதன்னில் விளைந்தவெம்பாசத்தை
திட்டமுடன்கண்டு தெளிவதினியெக்காலம். 186

எங்கும்பரவடிவா யென்வடிவுநின்வடிவாய்க்
கங்குல்பகலின்றியுனைக் கண்டிருப்பதெக்காலம். 187

உண்டதுவுமாத ருடன்கூடிச்சேர்ந்தின்பங்
கண்டதுவுநீயெனவே கண்டுகொள்தெக்காலம். 188

ஈமென்றுகேட்டதுவு மென்னுள்ளேநின்றதுவும்
ஓமென்றுசொன்னதுவு முற்றறிவதெக்காலம். 189

சத்தம்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம்பிறந்தவிடந் தேர்ந்தறிவதெக்காலம். 190

போக்கும்வரவும் புரம்புள்ளுமாகிநின்றும்
தாக்குமொருபொருளைச் சந்திப்பதெக்காலம். 191

நானென்வுநீயெனவு நாமிரண்டுமற்றொன்றும்
நீயெனவேசிந்தைதனி னேர்படுவதெக்காலம், 192

அறிவை யறிவாலறிந்தே யறிவுமறிவுதனில்
பிறிவுபடாதில்லாமல் பிடிப்பதினியெக்காலம். 193

நீடும்பவனமெல்லாம் நிறைந்துசிந்தூரமதாய்
ஆடுந்திருக்கூத்தை யறிவதினியெக்காலம். 194

தித்தியென்றகூத்துத் திருச்சிலம்பினோசைகளும்
பத்தியுடனேகேட்டுப் பணிவதினியெக்காலம் 195

நயனத்திடைவெளிபோய் நண்ணும்பரவெளியில்
சயனத்திருந்து தலைப்படுவதெக்காலம். 196

அருவிமலைநடுவே யாயிரக்கால்மண்டபத்தில்
திருவிளையாடக்கண்டு தெரிசிப்பதெக்காலம். 197

மீனைமிகவுண்டுநக்கி விக்கிநின்றகொக்கதுபோல்
தேனைமிகவுண்டுநக்கி தெவிட்டிநிற்பதெக்காலம். 198

பொல்லாதகாயமுனைப் போட்டுவிக்குமுன்னே
கல்லாலின்பால்கறப்பக் கறப்பதினியெக்காலம். 199

வெட்டவெளிக்குள்ளே விளங்குஞ்சதாசிவத்தைக்
கிட்டவரத்தேடக் கிருபைசெய்வதெக்காலம். 200

பேரறிவிலேமனதை பேராமலேயிருத்தி
ஓரறிவிலெந்நாளு மூன்றிநிற்பதெக்காலம். 201

அத்துவிதம்போலுமென்ற ஞானத்துமத்தினுள்ளிருந்து
முத்திதரநின்ற முறையறிவதெக்காலம். 202

நாநின்றபாசபதி ஞானிருந்துமாளாமல்
நீநின்றகோலமதில் நிரவிநிற்பதெக்காலம். 203

எள்ளுங்கரும்பு மெழுமலரும்காயமும்போல்
உள்ளும்புறம்புநின்ற துற்றறிவதெக்காலம். 204

அன்னம்புலனை வகுத்தமிர்தையுண்டதுபோல்
என்னை வகுத்துன்னை யினிக்காண்பதெக்காலம். 205

அந்தரத்தினீர்பூத் தலர்ந்தெழுந்ததாமரைபோல்
சிந்தைவைத்துக்கண்டு தெரிசிப்பதெக்காலம். 206

பிறப்புயிறப்புமற்றுப் பேச்சுமற்றுமூச்சுமற்று
மறப்புநினைப்புமற்று மாண்டிருப்பதெக்காலம், 207

மன்னும்பரவெளியை மனவெளியிலடைத்தறிவை
என்னுமொருநினைவை யெழுப்பிநிற்பதெக்காலம். 208

ஆசைகொண்டமாத ரடைகனவுநீக்கியென்மேல்
ஓசைகொண்டுநானு மொடுங்குவதுமெக்காலம். 209

தன்னுயிரைக்கொண்டு தானரிந்தவாரதுபோல்
உன்னுயிரைக்கொண்டிங் கொடுங்குவதுமெக்காலம். 210

சேற்றிற்கிளைநாடுந் திடமாமுடலையினிக்
காற்றினுழல்சூத்திரமாய்க் காண்பதினியெக்காலம். 211

என்வசமுங்கெட்டிங் கிருந்தவசமும்மழிந்து
தன்வசமுங்கெட்டருளைச் சார்ந்திருப்பதெக்காலம். 212

தன்னைமறந்து தலைத்துநிலைமறைந்து
கண்மமறந்து கனிபெறுவதெக்காலம். 213

என்னையென்னிலேமறந்தேயிருந்தபதியும்மறந்து
தன்னையுந்தானேமறந்து தனித்திருப்பதெக்காலம். 214

தன்னையுந்தானேமறந்து தலைவாசற்றுள்போட்டே
உன்னைநினைந்துள்ளே யுறங்குவதுமெக்காலம். 216

இணைபிறந்தபோதலரி யின்பமுறுமன்றிலைப்போல்
துணைபிரிந்தபோதருனூல் தொடர்ந்துகொள்வதெக்காலம்.

ஆட்டமொன்றுமில்லாம லசைவுசற்றுங்காணாமல்
தேட்டமற்றவான்பொருளைத் தேடுவதுமெக்காலம். 217

முன்னைவினையாலறிவு முற்றுமற்புன்மறைந்தால்
அன்னைதனைத்தேடி யழுதுண்பதெக்காலம். 218

கள்ளுண்டவர்போற் களிதருமானந்தமதாற்
றள்ளுண்டுநின்றாடித் தடைபடுவதெக்காலம். 219

தானென்றவாணவமுந் தத்துவமுங்கெட்டொழிந்தே
ஏனென்றபேச்சுமிலா திலங்குவதுமெக்காலம். 220

நானவனாய்க்காண்பதெல்லா ஞானவிழியாலறிந்து
தானவனாய்நின்று சரணடைவதெக்காலம். 221

தானந்தமில்லாத தற்பரத்தினூடுருவி
ஆனந்தங்கண்டே யமர்ந்திருப்பதெக்காலம். 222

உற்றவெளிதனிலே உல்லப்பாரந்தரத்தே
மற்றமறமாய்கை மாள்வதினியெக்காலம். 223

ஏடலர்ந்தபங்கயமு மிருகருணைநேத்திரமுந்
தோடணிந்தகுண்டலமுந் தோன்றுவதுமெக்காலம். 224

ஐயாறுமாறு மகன்றுவெறுவெளியில்
மையிருளில்நின்றமன மாள்வதினியெக்காலம். 225

காட்டுமருண்ஞானக் கடலிலன்புகப்பல்விட்டு
மூட்டுங்கருணைக்கடலின் மூழ்குவதுமெக்காலம். 226

நானாரோநீயாரோ நற்றும்பரமானந்
தானாரோவென்றுணர்ந்து தவமுடிப்பதெக்காலம். 227

எவரெவர்களெப்படிகண் டெந்தப்படிநினைத்தார்
அவரவருக்கப்படிநின் றுமென்பதெக்காலம். 228

உற்றுற்றுப்பார்க்க வொளிதருமானந்தமதை
நெத்திக்குநேர்கண்டு நிலைப்பதினியெக்காலம். 229

விளங்குகின்றதாரகையை வெய்யோன்மறைத்தாப்போல்
களங்கமறவுன்காட்சி கண்டறிவதெக்காலம். 230

என்னையேநானறியே னிந்தவண்ணஞ்சொன்னதல்லா
முன்னையோர்கைக்கொள்ள முன்பணிவதெக்காலம். 231

ஐஞ்சுகரத்தானை யடியிணையைப்போற்றிசெய்து
நெஞ்சிற்பொருந்தி நிலைபெறுவதெக்காலம். 232

பத்திரகிரியார் புலம்பல்

முற்றிற்று.

—*—

உ

திருச்சிற்றம்பலம்.

சேந்தனா ரருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

கோயில்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
வன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. (1)

மிண்டு மனத்தவர் போமின்கண்மெய் யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
கண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. (2)

நிட்டை யிலாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்

தட்ட மூர்த்திக்கென் னகநெக வூறு
 மமிர்தினுக் காலகிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. (3)

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
 தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
 சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
 விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. (4)

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
 டின்னம் புகலரிதா
யிரந்திரந் தழைப்ப வென்னுயி ராண்டகோவினுக்
 கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
 கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
 பல்லாண்டு கூறுதுமே. (5)

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா
 லெங்குந் திசைதிசையன
கூவிக்கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
 மாய்நின்று கூத்தாடு
மாவிக் கமுதையென் னார்வத் தனத்தினை
 யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. (6)

சீருந் திருவும் பொலியச் சிவலோக
 நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவு பெற்றேன்
 பெற்றதார் பெறுவாருலகில்

ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. (7)

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (8)

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (9)

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (10)

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்

சேந்தனாரருளிச்செய்த திருப்பல்லாண்டு.

மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (11)

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே. (12)

எந்தை யெந்தாய் சுற்ற முற்று
மெமக்கமுதா மெம்பிரா னென்றென்று
சிந்தைசெயுஞ் சிவன் சீரடி யாரடி நாய்
செப்புரை
யந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று
பல்லாண்டு கூறுதுமே. (13)

திருச்சிற்றம்பலம்.

திருப்பல்லாண்டு முற்றிற்று.

க. திருவீழிமிழலை.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகநா யகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்று
முன்டென வுணர்கிலேன் யானே. (1)

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. (2)

மண்டலத் தொளியை விலக்கியா னுகர்ந்த
மருந்தையென் மாசிலா மணியைப்
பண்டல ரயன்மாற் கரிதுமா யடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளுங்
கொண்டலங் கண்டத் தெங்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. (3)

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
யென்னிடைக் கமல மூன்றினுட் டோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை யருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. (4)

---

* இது சோணாட்டிலுள்ள திருத்தலத்தொன்று

இத்தெய்வ நெறிநன் றென்றிருண் மாயப்
  பிறப்பறு விந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
  புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
  மிழலைவிண் ணிழிசெழுங் கோயி
லத்தெய்வ நெறியிற் சிவமலா தவமு
  மறிவரோ வறிவுடை யோரே. (5)

அக்கனு வணைய செல்வமே சிந்தித்
  தைவரோ டழுந்தியா னவமே
புக்கிடா வண்ணங் காத்தெனை யாண்ட
  புனிதனை வனிதைபா கனையெண்
டிக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
  மிழலையான் றிருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
  பொடியணிந் தடிமை பூண்டேனே (6)

கங்கைநீ * ரரிசிற்கரையிரு மருங்குங்
  கமழ்பொழி றழுவிய கழனித்
திங்களோர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
  மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் றோன்றி
  நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத் தென்னரு மருந்தை
  வருந்திநான் மறப்பனோ வினியே. (7)

ஆயிரங் கமல ஞாயிறு யிரமுக்
  கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
  படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி யுமைமண வாளன்
  விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
  போற்றுவார் புறந்தரா திகளே. (8)

எண்ணில்பல் கோடி சேவடி முடிக
  ளெண்ணில்பல் கோடிதிண் டோள்க

* என்னிடைக் கமலமூன் றென்பதை மூலாதாரத்தொன்றும், இதயத்தொன்றும், துவாதசாந்தத்தொன்றுமெனக் கொள்க.

ளெண்ணில்பல் கோடி திருவுரு நாம
மேர்கொண்முக் கண்முக மியல்பு
மெண்ணில்பல் கோடியெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூர் றந்தண ரேத்து
மெண்ணில்பல் கோடி குணத்த ரேர்வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே. (9)

தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திர னிந்திர னெச்சன்
மிக்க நெஞ்சரக்கன் புரங்கரி கருடன்
மறலிவே ளிவர்மிகை செகுத்தோன்
றிக்கெலா நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் றிருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. (10)

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மே
லருள்சொரி தருமுமா பதியை
வளங்கிளர் நதியு மதியமுஞ் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்
றுந்தானைச் சேர்ந்தன்று தையையான்
களங்கொள வழைத்தாற் பிழைக்குமோ வடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே. (11)

* பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்க
ளெஞ்சினு ணிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தி னமுதைத்
திருவீழி மிழலையூ நாளுங்
கேடலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே. (12)

திருச்சிற்றம்பலம்.

---

* இறைவன் ஆளுடைய பிள்ளையாருக்கும், வாகீச வடிகளுக்கும், படிக்காசு தவியவர்செந்தமிழ்ப்பதிகங்கொண்டமையால்அவரை எம்பெருமாக்களென்று கூறினார்.

உ. திருவாவடுதுறை.*

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழான ராயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விருக்கரை மேய
வையா திருவா வடுதுறை
யமுதே யென்றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக் கொன்
றருளா தொழிவது மாதிமையே. (1)

மாதி மணங்கம ழும்பொழின்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழு
மாதி யமரர் புராணனு
மணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி யறிகிலள் பொன் னெடுந்
திண்டோள புணர நினைக்குமே. (2)

நினைக்கு நிரந்தர னேயென்னு
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கு நலங்கிளர் கொன்றைமே
னயம்பேசு நன்னுத னங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகண்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்ப னாவடு தண்டுறைத்
தருணேந்து சேகர னென்னுமே. (3)

தருணேந்து சேகரனே யெனுந்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தை யூர்ப்
பொருணேர்ந்த சிந்தையவர்தொழப்
புகழ்செல்வ மல்குபொற் கோயிலு

---

* சோணாட்டில் உள்ள திருத்தலத்தொன்று.

ளருணோர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட வாண்டகையம்மானே
தெருணோர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. (4)

திலக நுதலுமை நங்கைக்குந்
திருவாவடுதுறை நம்பிக்குங்
குலக வடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கட
லலதொன் றறிகின்றி லேமெனு
மணியும்வெண் ணிறஞ்செ ழுத்தலால்
வலதொன் றிலனிதற் கென்செய்கேன்
வயலந்தண் சாந்தையர் வேந்தனே. (5)

வேந்தன் வளைத்தது மேருவில்
லரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதலயன் சாரதி
கதியருளென்னுமித் தையலை
யார்ந்தண் டிருவா வடுதுறை
யான்செய்கை யாரறிகிற்பரே. (6)

கிற்போ மெனத்தக்கன் வேள்விபுக்
கெடுத்தோடிக் கெட்டவத் தீயர்கள்
சொற்போலு மெய்ப்பயன் பாவிகா
ளென்சொல்லிச் சொல்லுமித் தூமொழி
கற்போன் மனங்கனி வித்தவெங்
கருணால யாவந்தி டாயென்றுற்
பெற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசா தொழிவதே. (7)

ஒழிவொன் றிலாவுண்மை வண்ணமு
முலப்பிலளூறின்ப வெள்ளமு
மொழிவொன் றிலாப்பொன்னித் தீர்த்தமு
முனிகோடி கோடியா மூர்த்தியு

மழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூ
 ரணியா வடுதுறையாடின
ளிழிவொன்றி லாவகை யெய்திநின்
 றிறுமாக்கு மென்னிள மானனே. (8)

மானேர் கலைவளை யுங்கவர்ந்
 துளங்கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே யமுதேயென் சித்தமே
 சிவலோக நாயகச் செல்வமே
யானே யலம்பு புனற்பொன்னி
 யணியா வடுதுறை யன்பர்தங்
கோனேநின் மெய்யடியார்மனக்
 கருத்தை முடித்திடுங் குன்றமே. (9)

குன்றேந்தி கோகன கத்தய
 னறியா நெறியென்னைக் கூட்டின
யென்றேங்கி யேங்கி யழைக்கின்றா
 ளிளவல்லி யெல்லைக டந்தன
ளன்றே யலம்பு புனற்பொன்னி
 யணியா வடுதுறை யாடின
னன்றே யிவணம் பரமல்ல
 னவலோக நாயகன் பாலளே. (10)

பாலு மமுதமுந் தேனுமா
 யானந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலுமெ ன்னுருயிர்ப் போகமாம்
 புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
 திருவா வடுதுறை வேந்தனோ
டாலு மதற்கே முதலுமா
 மறிந்தோ மரிவைபொய்யாததே. (11)

திருச்சிற்றம்பலம்.

௯. திருவிடைக்கழி.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகண் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்னுமென் மெல்லிய லிவளே. (1)

இவளைவா ளிளமென் கொங்கைபீர் பொங்க
வெழில்கவர்ந் தானிளங் காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
றிவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மதர்க்க ணங்கையா ளைக்குங்
குழகனல் லழகனெங் கோவே. (2)

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவனற் சேனை யென்னக்காப் பவனென்
பொன்னைமே கலைகவர் வானே
தேவினற் றலைவன் றிருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றானே. (3)

---

* திருவிடைக்கழி பிள்ளையார் திருப்படை வீட்டிலொன்று அது சோணாட்டிலுள்ளது. இப்பதிகமொன்றே பிள்ளையாரைக் குறித்துக் கூறப்பட்டது.

தானமர் பொருது வானவர் சேனை
மடியச் சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளறன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. (4)

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குரிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வைய
முய்யமற் றடியனேன் வாழத்
திண்மணி மாடத் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
கண்மணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. (5)

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
வாண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடையரன்மதலைக்
கார்நிற மாறிரு மருகன்
றிளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரு நீழற்கீழ் நின்ற
முளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொன் முருகவேள் பரிந்தே. (6)

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந்தூரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது வென்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொன்
மையல்கெநண் டைய்யுறும் வகையே. (7)

வகைமிகு மசுரர் மாளவந் * துழிஞை
 வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகு மனலிற் புரம்பொடி படுத்த
 பொன்மலை வில்லிதன் புதல்வன்
றிகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியிற்
 றிருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்றிரு வடிக்கொன்
 றடியடை மடற்றொடங் கினளே. (8)

தொடங்கினண் மடலென் றணிமுடித் தொங்கற்
 புறவித ழாகிலு மருளா
னிடங்கொளக் குறத்திதிறைவன்
 மறத்தொழில் வார்த்தையு முடையன்
றிடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
 றிருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
 தறுமுகத் தமுதினை மருண்டே. (9)

மருண்டுறை கோயின் மல்குநன் குன்றப்
 பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள்செயா விடுமே
 விடலையே யெவர்க்குமெய் யன்பர்க் கழியிற்
றெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியிற்
 றிருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
 கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. (10)

கொழிந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
 தூய்மொழி யமரர்கோ மகளைச்
செழுந்திரட்சோதிச் செப்புறைச் சேந்தன்
 வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம்பொழில்சூழ் திருவிடைக் கழியிற்
 றிருக்குறுநீழற்கீழ் நின்ற
வெழுங்கதி ரொளியை யேத்துவார் கேட்பா
 * ரிடர்கெடு மாறுலா மனமே. (11)

திருச்சிற்றம்பலம்.

இச் சேந்தனார் திருவெண்காடராகிய பட்டினத்
 தடிகள் சம்பிரதி யென்பர்.